[illegible]
[illegible] 13 [illegible] 6
16 Ace 1927

JL
[illegible] MISAB
1127.13.6.
187486

உ
ஓம்
பரப்பிரஹ்மணேநம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)

தொகுதி 13 | பிரபவஹு மார்கழிமீ கஉ | 1927ஹு டிசம்பர்மீ 16உ | பகுதி 6

## கடவுள் வணக்கம்.

ஊன ரனந் தம்பெற்ற பேரனந் தஞ்சுற்று
முறவனந் தம்வினையினு
லுடலனந் தஞ்செய்யும் வினைபனந் தங்கருத்
தோவனந் தம்பெற் றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்த பேதந்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னுன்ஞான
சிற்சத்தி யாலு ணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந்தேக் கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரிய வடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின் வைப்பைப்
பேசரு மனந்தபத ஞானவா னந்தமாம்
பெரியபொரு ளைப்ப ணிகுவாம். (1)

தக்க நின்னருட் கேள்வியோ சிறிதின்றித் தமியேன்
மிக்க தெய்வமே நின்னின்ப வெள்ளத்தில் வீழேன்
ஒக்க லுய்தந்தை மகவெனும் பாசக்கட் டுடனே
துக்க வெள்ளத்தி லாழ்கின்றே னென்செய்வான் றுணிந்தேன். (2)

பவம்பு ரிந்திடும் பாவியேற் கருணிலை பதியத்
தவஞ்சே ரிம்பர் தயவுசெய் தருள்வதே தருமம்
அவம்பு ரிந்திடார்க் கானந்த வமிர்தத்தை யளிக்க
நவங்கொ டத்துவத் திரையெறி கடலெனு நலத்தோய். (3)

## அரும்பொருள் விளக்கம்.

ஆன்மாக்கள், தாந்தா முன்செய்த (காமிய வினையாகிற) புண்ணிய பாபங்களுக் கீடாகப் பலதிறப்பட்ட பிறவிகளையும், அப்பிறவி ளுக்கேற்ற ஊர், பேர், உறவு, உடல், வினை, கருத்து, சீர், சொர்க்கம், ரகம், தெய்வம், சமயம் ஆகிய இவைகளையும் அடைகின்றன. அவ்வான் ாக்கள் இவற்றின் தோற்றக் கேடுகளை ஞான சிற்சத்தியாலுணர்ந்த பின் ரே கடவுளின் பேரருளுக் கருகமாகின்றன. அப்பேருளைச் செய்தற்குரிய நந்தமறைமொழியு முகிலும், நமது கடவுளும், ஆரிய வடிவும், பெரிய மௌனவைப்பும், அனந்தபதமும், அனந்த ஞானமுமாகிய பெரியபொருளை ம் பிறவிப்பிணி நீங்கி நித்யானந்த வாழ்வை நாம் அடைதற்பொருட்டுப் ணிவோமாக என்பது இதன்கருத்து.

அனந்தம்=பல.
கார்=மேகங்கள்.
கண்ணும் விண்ணும் தேக்க=விழிகளும் இதயாகாயமும் நிறையும்படி.

கருத்தோ அனந்தம்—"ஒருபொழுதும் வாழ்த லறியார் கருதுப கோடியு மல்ல பல" என்னும் தெய்வப்புலவர் வாக்கும், "உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம், எண்பது கோடி நினைந் தெண்ணுவன" என்னும் ஔவையார் வாக்கும் நோக்கற்பாலன.
ஞானசிற்சத்தி=பராசத்தி.

மௌன வைப்பை—சனகாதி நால்வர்க்கு, இறைவன், கல்லாலவிருக்ஷத்தின்கீழிருந்து, திருமார்பின்கண் ஒரு திருக்கரத்தைச் சேர்த்து, மற்றொரு திருக்கரத்தால் மோனமுத்திரையைக்காட்டி யோகியர்போலிருந்து மோனநிலையைத் தெரிவித்தமையின் அவ்விறைவனை 'மௌன வைப்பு' என்றார்.

அனந்தபதம்—இறைவனுடன் இரண்டறக்கலந்து அநுபவிக்கும் சுகாதீத நிலை.
அனந்த ஞானம்=முற்று முணர்தல்.
அனந்த ஆனந்தம்=வரம்பிலா இன்பமுடைமை.

2. திருவருட் சம்பந்தமான கேள்வியிலையேல் சிந்தித்தலும் தெளிதலு முண்டாகா. அவை யுண்டாகாதபோது துக்கநிவர்த்தியும் ஆனந்த மடைதலும் கைகூடா. ஆகவே யான் நினது இன்பசாகரத்தில் படியாமல் துக்கசாகரத்தில் படிகின்றேன் என்று ஆசிரியர் இறைவனை நோக்கி முறையிடுகின்றார்.
ஒக்கல்=சுற்றத்தார்.

3. இறைவனது திருவருளைப் பெறவேண்டின் எல்லா விரதங்களுள்ளும் தவமே சிறந்ததாகலின் தவஞ்செய்யக் கிருபை செய்தருளவேண்டு மென்று இறைவனைக் கேட்கின்றார்.
பவம்=பாவச்செயல்கள்.
பதிய=உண்டாக.
அவம்=பயனற்ற காரியம்.
நவம்=புதுமையை; கொள்=கொ[illegible]
தத்துவ திரை=தத்துவமாகிய [illegible]

187486

# ஆனந்தபோதினி

பிரபவ௵
மார்கழி௴ கஉ

## குடியே குடிகேட்டிற்குக் காரணம்.

நமது நாட்டில் சந்து பொந்து முதலிய பல விடங்களிலும் மதுபானக் கடைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். இக் கடைகளில் பலவிதமான சாராய வகைகளும், கள் வகைகளும் விற்கப்படுகின்றன. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் முதலிய மேற்குப் பிரதேசங்களிலிருந்து உயர்ந்த சாராய வகைகள் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. அன்றியும், சில பெருத்த ஆங்கிலக் கம்பெனியாரால், பட்டைச் சாராயம், நாட்டுப் பீர், மலபார் அர்ரக் என்னும் ஒருவித துர்க்கந்தமுள்ள சாராயம் முதலியன இவ்விடத்திலேயே தயாரிக்கப் படுகின்றன. ஹோட்டல்கள், ரெஸ்டாரண்டுகள் முதலான இடங்களில் உயர்ந்த ஐரோப்பிய சாராய வகைகளே வழங்கப்படுகின்றன. இந்த இடங்களில் போக்கு வரத்துள்ளவர்கள் ஐரோப்பியர்களும், தனவந்தரான இந்தியர்களும், ஆங்கிலோ இந்தியர்களுமேயாவர். மேலும், மட்டச் சாராய வகைகளும், கள்ளும் விற்கப்படுகிற கடைகள் அநேகமாய்க் கூலியாட்கள் நடமாடும் இடங்களான காய்கறிச் சந்தை, பல சரக்குமளிகை முதலிய இடங்களுக்குச் சமீபத்தில் நெருங்கிக் கிடக்கின்றன. இக்கடைகள் காலை ஒன்பதரை மணியிலிருந்து இரவு எட்டுமணி வரையில்தான் திறந்து வைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், பல ரகசிய வழிகளில், பெரும்பான்மையும் காலை 6-மணி முதற்கொண்டு இரவு 12-மணி (அதாவது பயாஸ்கோப், நாடகசாலை, ஆட்டக்கொட்டகை முதலிய இடங்களுக்கு ஜனங்கள் போய் வருகிற) வரையில் கடைபேரம் நடைபெற்று வருகின்றது. இக்கடைகளுக்கு அனேகமாய்ப் பக்கக்கதவுகள் உண்டு; இவைகள் ஒருக்கணித்தாற்போல் சாத்தப்பட்டிருக்கும். குடிப்பழக்க முள்ளவர்கள் இக்கடைகளில் தாராளமாய்

நுழைந்து தங்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ளுகின்றனர். கூலிவேலை செய்வோர் பலர் பிரதிதினமும் தாங்கள் பெறும் கூலிப் பணத்தைத் தங்கள் நண்பர்களுடன் முறைபோட்டுக்கொண்டு ஷை கடைகளில் செலவிடுகிறார்கள். இவர்கள் தமது குடிசைகளுக்குப் போகும்போது இவர்களைப் பார்த்தால் இவர்களுடைய நடனங்கள் மிகவும் வேடிக்கையா யிருக்கும்; இவர்களிற் சிலர் வாந்தி எடுத்துக்கொண்டு நல்லுணர்வின்றி, அவ்வாந்தியிலேயே ஆடை நழுவவிழுந்து, வாயில் வந்தவாறு பிதற்றிக்கொண்டு புரளுகின்றனர்; சிலர் தங்கள் சாமார்த்தியங்களை யெல்லாம் அப்போதுதான் காட்டுகின்றனர்; சிலர் எதிர் வருவோர்மீது உராய்ந்துகொண்டும், வலியச்சண்டை யிட்டுக்கொண்டும் செல்லுகின்றனர்; சிலர் நடையாட்டங்கொண்டு தட்டுண்டு தள்ளாடி விழுந்தெழுந்து போகிறார்கள். அப்படி விழுவோரில் ஒருவனை, அவனுடைய நண்பர் கண்டால், அவனைநோக்கி "அடா! பாபி! உனக்கென்ன கேடு; இப்படியும் பலரறிந்து காறியுமிழ, சுய புத்தியிழந்து தள்ளாடும்படி நீ குடிக்கலாமா?" என்று வைது அவன்மீது இரக்கங்கொண்டு தங்கள் கைகளால் அவனைப்பிடித்து இருபுறமும் தாங்கியபடி மிக்க சிரமத்துடன் அவனுடைய இருப்பிடங்கொண்டு சேர்க்கின்றனர்; மற்றுஞ்சிலர் சாராயக் கடையைவிட்டு வந்தவுடன் தயாராக அங்குக் காத்துக்கொண்டிருக்கும் ரிக்ஷா முதலிய வண்டிகளில் ஏறிக்கொண்டதும் தலைசாய்ந்து விடுகின்றனர்; அவர்களைப் பழக்கமுள்ள வண்டிக்காரர்கள் அவர்களிருப்பிடந் தெரிந்துகொண்டு போய்ச் சேர்க்கின்றனர்; இன்னும் அநேகர் தாங்கள் ஷை கடைகளில் செலவழிந்ததுபோக மீதியாயுள்ள பணத்தை மதிமயங்கி யிழந்து வெறுங்கையோடு வீடுபோய்ச் சேர்கின்றனர்; இவ்விதம் இவர்கள் வீடுபோனதும் அங்கிருக்கும் அயலாருடன் வம்பு புரிவதுமல்லாமல் தங்கள் பெண்டுபிள்ளைகளை அடித்துத் துன்புறுத்துகின்றனர்; அந்தப் பெண்டு பிள்ளைகளோ கூழுக்கும் கூறைக்கும் ஏக்கமுற்று ஆகாயத்தைப் பார்க்கின்றனர்; கடவுளை யிறைஞ்சுகின்றனர்; தங்கள் விதியை நோகின்றனர்; உணவின்மையால் மெலிந்து நலிகின்றனர்; அந்த வருத்தத்தால் நோய்வாய்ப்பட்டு மிறக்கின்றனர். பின்னுஞ்சிலர் இவ்விஷயத்தால் தங்குவதற்குச் சரியான வசதியின்றியும், ஆகாரமின்றியும் பெரிய கட்டிடங்களின் காம்பவுண்டுகளுக்கு வெளிப்புறத்திலும், சாக்கடைகளுக்கும் கக்கூசுகளுக்கும் சமீபத்திலுள்ள ஆபாசமான இடங்களிலும் தங்கள்



வாழ்நாளைக் கஷ்டத்தோடு கழிக்கின்றனர். இவ்வாறு குடியர்கள் படும் தொல்லைகளை இவர்களுடைய சந்ததிகளும் பின்பற்றுகின்றனர். இவர்களிடம் வைராக்கியமான திடபுத்தி குடிகொள்வதில்லை; மிருகங்களைவிடக் கொடிய மிருகங்களாய் இவர்கள் சஞ்சரிக்கிறார்கள்; ஜனசமூகத்திற்கும் அபிவிருத்திக்கும் பெருங் கேட்டையும் அபாயத்தையும் உண்டு பண்ணிக் கொள்கின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் துர்ப்பலத்தோடுதிக்கின்றனர்; அதனால் நாட்டின் க்ஷீணதிசைக்கே இவர்கள் அடிப்படையாகிறார்கள்.

தங்களை அடக்கியாளும் ஆற்றலற்ற இன்னோருக்குப் பிறரை அடக்கியாளும் வன்மை எங்ஙனமுண்டாகும்? இத்தகையோரது மனைவி மக்களும் இவர்களுக்கு அடங்கி நடப்பார்களா? இவர்கள் தேசத்தைக் காப்பாற்றவும், அதன் நன்மையைநாடி யுழைக்கவும் முன்வர முடியுமா? ஒருகாலும் முடியாது.

துஷ்யந்த மகாராஜனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்து, சிறுபிராய முதற்கொண்டே தைரியத்துடன் சிங்கத்தோடு விளையாடியும், அதை யடக்கியும் நிற்கத்தக்க ஆண்மைபெற்று விளங்கிய வீராதி வீரனை பரதன் பெயரால் ஓங்கிவந்த நம் பரதநாடு இப்போது பாழும் குடிகார நாடாய் விளங்குவதை நோக்க நமது மனம் பதறவில்லையா? அந்தோ! கள் பெருகியோடும் நாட்டைக் காட்டிலும் கடும்புலி வாழும் காடே சிறந்ததன்றோ? சாராயம் சஞ்சாரம்புரியும் இடத்தைக்காட்டிலும் கொடிய சர்ப்பம் உலாவும் இடமே பெரிதுஞ் சிறந்ததென்று சொல்ல அறிவாளர் பின் வாங்குவரோ?

தாய் இவள், மனைவி இவள், மகளிவள் என்னுந் தெளிவை யொழிக்க வல்லதும், நெளிந்துறை புழுக்கள் நிரம்பப் பெற்றதும், தரும சிந்தையை மாற்றக் கூடியதும், வஞ்சமும், களவும், பொய்யும், மரபில் கோட்பும் தரத்தக்கதும், தஞ்சமென்றுரை நீக்குந் தன்மை வாய்ந்ததும், திருமகளின் நட்பை விலக்கும் ஆற்றலுடையதும், நஞ்சினுங் கொடியதும், நரகத்தில் தள்ளக் கூடியதுமான மதுபானத்தைச் சிறிதும் நாடாதிருந்த நன்மக்களின் சகவாசத்தையே பெரும்பான்மையும் பெற்றோங்கிவந்த நமது புண்ணிய நாடு இப்போது முக்கால் பங்கு மாறுபட்டு விளங்குங் காட்சியைக் காணப் பேரறிஞர் முகம் வாடுகின்றனரே! பரிதாபம்! பரிதாபம்!! பெரியாரது முகவாட்டத்தையும் பொருட் படுத்தாது, மதுபா

னத்தை யாதரித்து நமது நாடு க்ஷீண திசையை யடையும்படி செய்துவரும் நம்மவரை, ஆட்சியாளர் கொடிய மதுபானத்தினின்றும் நீக்கியாள முந்தவேண்டும். ஏனெனில் நாடு நன்னிலையிலிருந்தால் தான் அரசும் நன்னிலையிலிருக்கும்; நாடு க்ஷீணித்துப்போனால் அரசும் க்ஷீணித்து விடும். ஆகையால் அரசாங்கத்தார் மதுவிலக்கைக் கட்டாயப்படுத்தும் முயற்சியை உடனே மேற்கொள்ளவேண்டும். மதுவிலக்கைக் கட்டாயப் படுத்தியுள்ள ஜப்பான், அமெரிக்கா, அயர்லாந்து முதலிய தேசங்களெல்லாம் எவ்வளவோ மேன்மையை அடைந்திருக்கின்றன. அவற்றைப்போலவே நம்நாடும் மதுவிலக்கைத் தீவிரமாகக் கைக்கொண்டு மேன்மையுறச் செய்யவேண்டும்.

இருபது வயதிற்குட்பட்டவர்கள் மதுபானஞ் செய்யக்கூடாதென்னும் இராஜ சட்டத்திற்கடங்கி நடக்கும் ஜப்பான் தேசம் அத்தகைய சட்டத்தை மேற்கொள்ளாத அண்டை நாடாகிய ருஷியாவைப்பார்க்கிலும் உன்னத நிலையிலிருந்து வருகிறது; வருவாயினும் அந்த ஜப்பான் தேசம் குறைவுபடவில்லை.

அமெரிக்காவில், ஸ்திரீகள் தங்கள் மனம்போல் செலவு செய்யலாமென்னும் நியதி யிருந்தது. இதனால் அனேக ஸ்திரீகள் மதுபானத்தில் தம்மிஷ்டப்படி தலையிடலாயினர். இப்போது இப்பழக்கத்தைத் தடுக்க மேயின் என்னும் (யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவின் ஓர்பாகம்) நாட்டில் மேயின் லா (Maine Law) என்கிற சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. அதன்படி அங்குள்ளார் யாவரும் இத்துர்ப் பழக்கத்திலிருந்தும் விலக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தேசமும் உயர் நிலையிலிருக்கிறது.

அயர்லாந்து முதலிய இடங்களிலும் இம்மதுவிலக்குச் சட்டம் அமுலிலிருக்கின்றது; இச்சட்டத்தை மீறி நடக்கிறவர்கள் கடுந் தண்டனை யடைகிறார்கள்.

குளிர் மிகுந்த நாடுகளிலேயே மதுபானத்தைப்பற்றிச் சட்டதிட்டங்கள் ஏற்பட்டிருக்க, உஷ்ணப் பிரதேசமாகிய நமது நாட்டில் இக்குடிப்பழக்கம் வேண்டுவது அநாவசியமாம்.

குடித்தால்தான் தேகத்திற்குச் சுகம் ஏற்படுகிறதென்று சிலர் நினைக்கின்றனர். இது மிகவுந் தவறான அபிப்பிராயம். மதுபானம் உடம்பைப் பலவீனப் படுத்துகின்றதே யொழிய வேறெவ்வித நன்மையையும் உண்டாக்குகிறதில்லை யென்று நமது பெரியோரேயன்றிப் பிறநாட்டு மேதாவியரும், டாக்டர்களும் அபிப்பிராயப்படுகின்றனர். மதுவைப்போலவே போதையை யுண்டாக்கக்கூடிய அபினி, கஞ்சா, ஆல்கொஹால் முதலிய லாகிரி வஸ்துக்கள் நாளடைவில் தேகத்திற்குப் பெரிதும் கேட்டை விளைவிக்கின்றன.

மிகுந்த குடியால் ஒருவன் மிருக சுபாவத்தை அடைகிறான்;



கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களின் துர்ப்பழக்க முள்ளவர்களின் மூளை கூர்மை மழுங்கிவிடுகிறது. இத்துர்ப் பழக்கத்தினர் எவ்வித வேலைக்கும், நாட்டின் நன்மைக்கும் பயனற்றவராகின்றனர். நம் நாட்டிலேயும் உதாரணமாக மைசூரை யொத்த இராஜாங்கத்தில் மதுபானத்தை யொழிக்கும் ஏற்பாடு நடந்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆசையை யுண்டுபண்ணும் ஒரு வஸ்து இருந்தால் அதில் ஒருவருக்கு மோசமும், நாட்டமும் ஏற்படுகின்றன. அப்பொருளே இல்லாமற்போனால் அத்தகைய நாட்டம் ஒருவருக்கும் ஏற்படாது.

மகாத்மா காந்தியடிகள் மதுவிலக்கின் அத்தியாவசியத்தைப் பற்றிப் பிரசங்கித் திருப்பதுடன், தமது 'யங் இந்தியா' என்னும் பத்திரிகையில் அது விஷயத்தைப் பிரசுரஞ்செய்து மிருக்கின்றார்.

ஆகையால் காருண்யமுள்ள அரசாங்கத்தார், தாங்களும் நாடும் நலம் பெறுவதற்கு மதுபானத்தை அறவே யொழிக்கும் வழியை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர ஊக்கமும் சிரத்தையும் எடுத்துக் கொள்ளுமாறு இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

மதசம்பந்தமும், மதுவிலக்கின் சம்பந்தமும் ஆன விஷயங்களைத் தெளிவாய் விளக்கக்கூடிய நூல்களைப் பிரசுரித்து, அவற்றைப் பாடசாலைகளில் கட்டாயமான பாட நூல்களாக வைத்து, பரீட்சை காலத்தில் இதரபாட நூல்களுடன் அந்நூல்களிலும் தேறும் மாணவனையே பரீட்சையில் தேர்ந்தவராகக் கொள்ள வேண்டும். பத்திராசிரியர்களும் தமது பத்திரிகைகளில் மதுவிலக்கின் ஆவசியத்தை உள்ளே பிரசுரித்து, விளம்பரப் பத்தியில் அதனைச் சிறப்பித்துக் கூறுதல்கூடாது. சுகாதாரத் தலைவரும் இவ்விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

மதுவிலக்கால் அரசாங்கத்திற்கு வருமானக்குறைவு நேரிடுமென்று ஆட்சியாளர் நினைக்கும் பக்ஷத்தில், அம்மது விலக்கமுண்டானபின் அவசியமில்லாத ஆப்காரி இலாகாவை முற்றும் ஒழித்துவிடலாம்; உயர்தர சம்பளத்திலுள்ளவர்களின் சம்பளங்களைச் சிறிது குறைத்துக்கொள்ளலாம். சிவிலியன்களுடைய அநாவசியமான ஆடம்பரச் செலவையும் மட்டுப்படுத்தலாம்; இராணுவம், காட்டிலாகா, போலீஸ் இவற்றின் செலவையும் கொஞ்சம் சுருக்கிக்கொள்ளலாம்.

இத்யாதி விஷயங்களைக் கவனித்து அரசாங்கத்தார் மதுவிலக்கைக் கட்டாய சட்டமாக ஏற்படுத்தின் அது யாவர்க்கும் நன்மையைத்தரும்; நாடும் செழித்தோங்கும். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

ஓம் தத் ஸத்.




## ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே.

குவலயத்தில் எத்தனையோ கோடி சீவராசிகள் தோன்றுகின்றன. ஆயினும் அவற்றுள் மானிடப்பிறவியே சாலச் சிறந்ததாகின்றது. இப்பிறவிக்கு அவ்வுயர்வு வருவது உருவத்தாலல்ல; வேறு எக்காரணத்தாலுமன்று. அது பகுத்தறிவுடன் பொருந்திய மன வலிமையைக்கொண்டே கருதப்படுகின்றது. உலகிற் பிறந்த மனிதன் மானத்துடன், ஈனத்திற் கிடங்கொடாது, செய்வன செய்து, சீருஞ்சிறப்பு மெய்தி, நாடாகிய வீட்டில் நம்முடன் வாழ்வார்க்கு நன்மையே புரிந்து, மறந் தேய மகேசனடிச்சுவடுகளை யடைய வேண்டுமென்பதே பெரியோர் துணிவு; அதுவே இப்பிறப்பெடுத்தலின் பயனுமாம். இவ்வுண்மையை நாம் எத்தனையோ இடங்களில் பெரியோர் வாய்க் கேட்டிருக்கிறோம்; பனுவல் பலவற்றிலும் படித்திருக்கிறோம். ஆனால் இதை நாம் உணர்ந்தும் அலட்சிய மேலீட்டினாலோ, அஞ்சாமையின்மையாலோ, மாக்கள்போலாயினோம். தம் கடமையை யுணர்ந்து தேசத்தொண்டியற்றிய பெரியாரின் சரிதங்களை யித்தலையங்கத்தின் வாயிலாக வரைவதால், நம்மிடத்திலிருந்தும் இறந்ததுபோன்றுள்ள தேசாபிமானம் சிறிதளவாகிலும் பயனுடனெழுமென்பதே எமது கருத்து.

### 1. பிறப்பும் கல்வியும்.

ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே பல விஷயங்களில் ஏனைய தலைவர்களைக் காட்டிலும் சிறந்த தொண்டியற்றியவர்; தேசத்தொண்டே தெய்வத்தொண்டென்றியம்பியவர். இப்பெரியார் 1886-ம் ஆண்டில் பம்பாய் மாகாணத்தைச்சார்ந்த கோலாப்பூரை யொட்டிய ஓர் குக்கிராமத்தி லவதரித்தார். இவர் மகாராஷ்டிர பிராம்மண மரபில் கௌணிய கோத்திரத்தவர். புகைவண்டிப் பிரயாணத்திற்கு ஆயத்தமாகு மொருவனைப்போல இவர் பிறந்தது முதல், தாம் ஏதோ இந்த உலகத்தில் அவசரமாகச் செய்யவேண்டிய அறத்தொண்டு பல உண்டென மதித்து அதிக சுறுசுறுப்புடன் கல்வி பயின்றார்; கோலாப்பூரிலேயே படித்துச் சிறு கலா குமாரப்பரீக்ஷையில் 1882-ல் தேர்ந்த பிறகு, பம்பாய் நகர எலிபின்ஸ்டன் கலாசாலையிற் சேர்ந்து, 1886-ல் கலா குமாரப் பரீக்ஷையில் (பி. ஏ) விசேஷ அம்சம்பெற்றுத்தேர்ந்தார். அறியாமையைப் போக்கவந்தவ ரிவரென்னு மறிகுறிகள் பல இவரிடம் இளமையிலேயே காணப்பட்டன. முறைக்கல்வி யொருவாறு முடிவடைந்த பின்னர் கோகலே குற்றமற்ற, அறிவூட்டும் ஆசிரிய வேலையே பெரிதென்றெண்ணினார். அக்காலத்தில், தியாகமூர்த்திகளான பல தெய்வீகப் புருடர்களால் நிறுவப்பெற்றிருந்த டெக்கான் கழகம் இவரை அன்புடன் வரவேற்றது. பின்பு, புனா பர்கூஸன் கலாசாலைச் சரித்திர ராஜீயஞான பாட ஆசிரியராக எழுபது ரூபாய்ச் சம்பளத்தில் இருந்து இருபதாண்டுகள் வரை அக்கலாசாலையின் நன்மைப் பெருக்கைப் பல துறைகளிலும் பெருக்கித் திரிகரணசுத்தியுடன் உழைத்து வந்தார்.



### 2. உழைப்புக்குத்தக்க ஊதியம்.

நிஷ்களங்கராய் உண்மையாக உழைத்துவந்த கோகலே சில ஆண்டுகளுக்குப் பிறகு புனா பர்கூஸன் கலாசாலை நிர்வாகியாகவும், தலைமை உபந்நியாசகராகவும் நியமிக்கப்பட்டார். அவரடியில் வாசித்த மாணவரெல்லாம் சுயமரியாதை, தம் நாட்டபிமானம், அஞ்சாமை முதலியவைபெற்று ஆற்றலுடனெழுந்தனர். கேவலம் ஜீவனார்த்தமாக உத்தியோக வேட்டையை ஓம்பும் கல்வி, அக்கலாசாலை வீரனுக்கு முன்னின்று தோல்வியுற்று, புனா கல்வி யிலாகாவிற்கே கப்பங்கட்டி வந்தது. ஒழுக்கத்தையும், விசால ஹிருதயத்தையும் கோகலே அக்கலாசாலை மாணவரிடத்தில் பருவத்தே பயிர் செய்துவந்தார். அவரிடம் கல்விபயின்ற மாணவர்களில் பெரும்பான்மையோர் அவரைப்போன்றே தாய்நாட்டுத் தொண்டில் தலை சிறந்தனரென்னில், அக்கழகத்தின் பெருமையை நாம் எவ்வாறு புகழுவோம்? கோகலே கழகக் காரியங்களுடன் தேச கைங்கரியத்துறையில் அடுத்தடுத்துத் தமது கவனத்தைச் செலுத்தினார். இவர் பூனாவிலிருந்தமையால் ஸ்ரீ மகாதேவ கோவிந்த ரானடேயின் நட்பு 'கற்றாரைக் கற்றாரே காமுறு' வதுபோல் இவருக் கேற்பட்டது. அவருடைய பேருதவியால் கோகலே ராஜீய ஞான நூலாராய்ச்சிகள் பல செய்து வந்தார். இந்நூல்களின் உயர்வைப் போற்றிப் பல அறிவாளிகள் தாமதியாது கோகலேயவர்களைப் பம்பாய் மாகாணத்திலிருந்த பெரியார் கூட்டத்துக் கூட்டிவைத்தனர். 1887-ம் வருடத்தில் ஸ்ரீ ரானடேயவர்களின் விருப்பத்திற் கிசைந்து கோகலே சர்வஜன சபை பிரசுரித்துவந்த புனா வருட நான்முறை வெளியீட்டின் ஆசிரிய பதவியை ஏற்றுக்கொண்டார். அதன் பின்னர் தக்ஷிணதேச சபையார் கோகலேயவர்களை அச்சபையின் கௌரவக் காரியதரிசியாயிருந்து நிர்வாகத்தை நடத்திவர வேண்ட, அவரும் பாக்கியமென ஏற்றுக்கொண்டார்.

### 3. உண்மைத் தொண்டிற்குரிய கௌரவம்.

தலைவரென உள்நோக்க மொன்றாகவும், வெளிநோக்கம் வேறொன்றாகவும் கொண்டு எழுந்த பல இக்காலத்தவர்கள் ஆரம்பத்தில் ஆர்ப்பாட்டத்துடன் கிளம்பி, சிறிது பொய்ப்புகழெய்தி, மனத்தினிடை கொண்டுள்ள தங்கருத்தாகிய சுயநலம், தலைவர் சமூகத்திற் றழைக்காமையால் மங்கிப், பொது ஜனங்களால் வெறுக்கப்பட்டு நிற்றல், எந்த நாட்டுச் சரித்திரத்திலும் எத்தனை யெத்தனையோ உண்டு; ஆனால் உண்மைத்தொண்டர் ஒரே நிலையாக வாழ்வின் மாலைக்காலம் வரையில் வளரும் புகழெய்துகின்றனர். அவ்விதம் கோகலேயின் தனக்கென வாழாத்தன்மையால் அவர் பம்பாய் மாகாண அரசாங்க ஆலோசனைச்சபையின் ஓர் உறுப்பினரானார்; புனாவில் 1895-ல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸின் காரியதரிசிப் பதவிக்

கும் இவரே தகுந்தவரெனத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். தக்ஷிணதேசத்தின் 'கைங்கரிய பிரகாச சந்திரிகா' என்று தக்ஷிண வானத்தி லுதித்தெழும் வான்மீனெனக் கொண்டாடப் பெற்றார். நாளுக்குநாள் அவருக்கு தெக்ஷிணத்தில் (டெக்கான்) செல்வாக் கதிகரித்துவந்தது.

### 4. நாட்டின் நன்மைக்கு நவின்ற நல்லுரை.

நாடு நல்லாரையே நாடி நிற்கின்றதாதலால் இங்கிலாந்தில் இந்திய ஆட்சிமுறையின் நிர்வாக விஷயங்களைக் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பெற்ற 'வெல்பிகமிஷ' னில் நல்லுரை கூறக் கோபாலகிருஷ்ணர் வாச்சா (Wacha) முதலான பெரியார்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோகலே 1897-ல் இங்கிலாந்துக்குச் சென்றார். அரிய சாக்ஷியங் கொடுத்த பலருள்ளும் கோகலே கணக்குப்படித் திட்டங்களை எடுத்துக்காட்டி, தமது அரசியல் ஞானத்தை அதில் நாட்டி, அத்தருணமே இந்தியா வற்ற சௌகரியமடையவேண்டுவதைச் சுட்டி, இந்திய அரசியல் ஞானத்தை அவர்களுக்கூட்டி, பெரும்புகழீட்டி வந்தார். இக்கமிஷனில் பிரதமரான தாதாபாய் நௌரோஜியே இவரைக் கட்டித்தழுவி, 'தங்களைப் படைத்ததாயின் குறை அரிதி னீங்கும்' என்றியம்பினாரென்னின் இவர் பெருமையை என்னென்போம்! (தொடரும்)

ஸ்ரீ. லக்ஷ்மீ காந்தன்.




## வேதாந்த சாரசங்கிரக வசனம்.

(208-ம் பக்கத் தொடர்ச்சி)

### முமுக்ஷுத்துவம்.

(இனி சாதன சதுஷ்டயத்தில் நான்காவதாகிய முமுக்ஷுத்துவம் கூறப்படுகின்றது.)

ஜீவனும் பிரம்மமும் அபேதமானவை. அதாவது வெவ்வேறு பொருள்களல்ல. சொரூபத்தில் ஒன்றே என்றறிதலாகிய ஞானத்தால் சம்சார பாசபந்தத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்னும் விருப்பமே முமுக்ஷுத்துவமாம். (மோக்ஷத்தை யடையவேண்டுமென்னும் அபேக்ஷையே முமுக்ஷுத்துவம் எனப்படும்.) 'முத்தியை விரும்பு மிச்சை' என்கிறார் கைவல்யத்தாரும். மோக்ஷம் என்னும் பதத்திற்கு விடுதலையென்பது பொருள். விடுதலையென்னின் எதினின்றும் விடுதலையென்னும் வினா நிகழுமன்றோ? அதற்குப் பந்தத்தினின்று - அதாவது சம்சாரபாசபந்தத்தினின்று விடுதலையாதல் என்பதே



விடையாம். ஆகவே சம்சார பாசபந்தத்தினின்று விடுதலையாதலே மோக்ஷமென்னப்பட்டது. அது ஞானத்தாலேமாத்திரம் அடையப்படுவதாம். விசார சாகரமும் 'பிரஹ்மப் பிராப்தியும் அனர்த்த (துக்க) நிவிர்த்தியும் மோக்ஷத்தின் சொரூபமாம்' என்கின்றது. (முத்தி, வீடு என்னும் பதங்களுக்கும் விடுதலை யென்பதே பொருளாம்.) எல்லாச் சாதனங்களுக்கும் முதற்காரணமாயிருப்பது இந்த முமுக்ஷுத்துவமே. ஏனெனில் மோக்ஷத்தில் இச்சையில்லாதவனுக்கு அதை யடையவேண்டுமென்று பிரவிர்த்தி யுண்டாகாது. பிரவிர்த்தியின்றேல் சிரவணாதி சாதனங்களில்லை. சாதனங்களில்லாதவனுக்கு முத்தியெங்ஙனம் கிடைக்கும்? ஆகையால் முத்தியடையவேண்டுமென்னும் விருப்பமாகிய இந்த முமுக்ஷுத்துவமே எல்லாவற்றிற்கும் முதற்காரணமாம். (அங்ஙனமாயின் இச்சாதனத்தை இறுதியில் (கடையில்) ஏன் சொல்லவேண்டும். முதலிற் கூறுவதன்றோ பொருந்தும்? என்னும் சங்கை நிகழும். இதற்குச் சமாதானம்:—(விசாரசாகரக் குறிப்புரை) "இந்த முமுக்ஷுத்துவம் எல்லாச் சாதனங்களுக்கும் முன்னரே யுண்டாகின்றது. ஏனெனின் 'பிரயோஜனத்தைக் கருதாமல் மந்தனும் ஒன்றிற் பிரவிர்த்தியான்' என்பதனால் மந்தமான மோக்ஷரூபபலத்தின் இச்சையில்லாவிட்டால் நிஷ்காமகர்மத்தில் ஒருவனுக்கும் பிரவிருத்தி யுண்டாகாது. ஆதலால் மந்தமான மோக்ஷ இச்சை எல்லாச் சாதனங்களுக்கும் முன்னரே இருக்கவேண்டியது. ஆனால் அப்போது அது தீவிரமாயிராது. மற்றச் சாதனங்கள் சித்தித்தபின் அவ்விச்சை தீவிரமாகின்றது. அத்தீவிர இச்சைதான் சிரவணாதிகளிற் பிரவிருத்தி யுண்டாகும்படி செய்கின்றது." அத்தீவிர இச்சையே முமுக்ஷுத்துவம். இதுபற்றியே இது இறுதியில் கூறப்பட்டது.)

இந்த முமுக்ஷுத்துவம் தீவிரம் - மத்திமம் - மந்தம்-மந்ததரம் (அதிக மந்தம்) என்னும் பேதத்தால் நான்குவகைப்படும். இவற்றுள்.

**தீவிரம்:**—தாபத்திரயங்களால் எப்பொழுதும் வருத்தப்பட்டு அதனால் கலங்கிய மனத்தை யுடையவனாய் மனைவி முதலிய சகல பொருள்களையும் விட்டொழித்தல்.

**மத்திமம்:**—தாபத்திரயங்களுக்குப் பயந்து 'ஐயோ! இவற்றையெல்லாம் ஒழித்துவிட்டு நித்தியானந்த வடிவமாகிய முத்தியை யடைய முயல்வதெப்பொழுதோ' என்று மோக்ஷத்தை யபேக்ஷித்தும், ஆனால் இந்த வீடுவாசல் மனைவி மக்களை எப்படி விட்டுவிடுவது என்று அவற்றைவிட முடியாமலும் இருப்பவனுடைய மோக்ஷாபேக்ஷை மத்திமமாம்.

**மந்தம்:**—மோக்ஷத்தை யடையவேண்டியதுதான். அதற்கான முயற்சிகளைச் செய்யவும் வேண்டும். ஆனால் அதற்கு இது காலமல்ல. இப்பொழுதென்ன அவசரம்! இல்லறத்திலிருந்து அனுபவிக்கவேண்டிய போகங்களை யனுபவித்தல், பணம் சேர்த்தல் முதலிய காரியங்களையெல்லாம் செய்து முடித்துவிட்டு அதன்பிறகு மோக்ஷத்திற்காக முயல்வேன் என்பது.

மந்ததரம்:—மோக்ஷமாவது நமக்குக் கிடைக்கிறதாவது! துர்லபம். அதற்காக முயற்சிசெய்ய நம்மால் முடியுமா! வழியில் போகிறவனுக்குப் பண முடிப்பு கிடைப்பதுபோல, தானாக மோக்ஷம் கிடைத்தால் நான் புண்ணியசாலிதான் என்றெண்ணும் மூடர்களின் அபிப்பிராயம்.

இவர்களில், கடந்த அநேக ஜன்மங்களில் ஈசுவராராதனை செய்தவனும், அதனால் மனத்திலுள்ள சகல துர்க்குணங்களையும் அறவே யொழித்தவனும், சாஸ்திரார்த்தங்களை நன்குணர்ந்தவனும், உலகப் பொருள்களின் குண தோஷங்களை யறிந்தவனும், நித்தியா நித்திய வஸ்து விவேகமுள்ளவனும், திடமான நியமமுடையவனும், தீப்பற்றிய வீட்டினுள் சிக்கிக்கொண்டவன் அதினின்று தப்பும்பொருட்டு ஓடுகிறவனைப்போல, தாபத்திரயங்களால் தபிக்கப்பட்டு மனை மக்களாதியவற்றை விட்டு ஓடுகிறவனுமாகிய தீவிர முமுக்ஷுவானவன் குருவின் அனுக்கிரகத்தால் அப்பொழுதே சம்சாரத்தைக் கடக்கிறான். ஆகையால் அத்தீவிர முமுக்ஷுவானவன் அந்த ஜன்மத்திலேதானே ஜீவதசையி லிருக்கும்பொழுதே முத்தனாகிறான். இவன் ஜீவன் முத்தன் என்னப்படுவான். மத்திமன் அடுத்த ஜன்மத்தில் விமுக்தனாவன். மந்தன் யுகாந்தரத்தில் முக்தி யடைவன். அதிமந்தனோ கோடிகற்பகாலமாயினும் முத்தியடையான்.

## முத்தியே மானிடப் பிறவியின் பயன்.

எல்லாப் பிறவிகளினும் மானிடப் பிறவியே பெறுதற்கரியது. அதிலும் புருஷப்பிறவி துர்லபமானது. புருஷனாய்ப் பிறந்தாலும் விவேகமுடையவனாதல் மிக வரிது. ஆகையால் பூர்வபுண்ணியவசத்தால் இம்மூன்றையும் அடைந்தவன் மிக்க விரைவில் விரக்தியடைந்து முத்தியடைய முயலவேண்டும். இன்றேல், இம்மூன்றும், நிஷ்பிரயோஜனமாம். (ஏன்? மனைவி மக்களின் சுகத்தை யனுபவிப்பது மானிடப்பிறவியின் பிரயோஜனமாகாதோவெனின்) பிள்ளைகள் சிநேகிதர்கள் மனைவி முதலானவர்களா லுண்டாகும் சுகம் ஒவ்வொரு பிறவிக்கு முண்டு. மனுஷஜன்மமும் புருஷஜன்மமும் விவேகமும் மற்றொரு ஜன்மத்தில் உண்டாகா. (பசு பக்ஷியாதிகளும் மனைவி மக்களின் சுகத்தை யடைகின்றன. ஆகலின் அந்த போகங்களுக்காக மனிதப் பிறவி அவசியமில்லை.) பிராணி, அடைதற்கு மிகவும் அருமையான மனிதப் பிறவியை யெய்தி அதிலும் புருஷத்வத்தையும் பின்பு நன்மை தீமைகளைப் பிரித்து அறியும் அறிவையும் அடைந்தும் பிரபஞ்சசுகத்தில் விருப்பமுள்ளவனானால் புத்தியீனனும் அதமபுருஷனுமான அவனுடைய ஜன்மம் நிர்தைக் குரியதேயாகும். நாய், கழுதை, பன்றி முதலியவைகள் எப்பொழுதும் தின்றுகொண்டும் போகத்தை யனுபவித்துக்கொண்டும் சந்தோஷமாய்த் திரிந்துகொண் டிருக்கின்றன. மனிதர்களும் அவைகளைப்போலவே உண்பதும் உறங்குவதுமாய்க் காலங் கழிப்பார்களாயின் அவைகளுக்கும் அவர்களுக்கும் பேதமென்ன? ஒரு பேதமுமில்லை. ஆகையால், வியாதியானது நம்மைப் பிடித்து வருத்துதற்கு முன்னும் முதுமைப் பருவமானது வர்



நடைந்து நடுங்கச் செய்வதற்கு முன்னும் புத்தி மாறுட்டமாவதற்கு முன்னும் எமன் வாராததற்கு முன்னுமே—அரோக திடகாத்திரா யிருக்கும்பொழுதே, விரைவில் ஞானத்தையடைந்து சம்சாரபாசத்திலிருந்து விமுக்தி படைவதற்குப் பிரயத்தினப்படவேண்டும். (வியாதியாவது முதுமையாவது வந்தடைந்து அதனால் சரீரமும் இந்திரியங்களும் அந்தக்கரணமும் நம் வசப்படாமற்போகும் காலங்களில் முயற்சி செய்ய முடியுமா? காலபாசம் கழுத்தில் விழும்பொழுது முடியுமா? முடியாதன்றோ?

‘காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு’

‘முற்றமூத்துக் கோல்துணையாய் முன்னடி நோக்கி வளைந்து
இற்ற கால்போல் தள்ளிமென்ன இருந்தங் கிளையாமுன்
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்றவாங்கி யுண்டவாயான் வதரி வணங்குதுமே’!

‘எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கேது நானுன்னை [நினைக்கமாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தர [வணைப் பள்ளியானே’

என்னும் ஆன்றோர் அருளிச் செயல்களும் ஈண்டறியத்தக்கனவாம்.

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.




(211-ம் பக்கத் தொடர்ச்சி)

## சமாதி.

சூரியன் சந்திரர்கள் பகல் இரவு வடிவமாய்க் காலத்தை உண்டாக்குகின்றன, சுழுமுனை அந்தக்காலத்தைப் புசிக்கின்றது. சூரியன் சந்திரன் என்றது இடைகலை பிங்கலைகளை. சூரியனில் இரண்டரை நாழிகை பிராணன் ஓடும். சந்திரனில் இரண்டரை நாழிகை ஓடும். சூரியனில் ஓடுகிற காலம் பகல் என்னப்படும். சந்திரனில் ஓடுகிறகாலம் இரவு என்னப்படும். இதனால் சாதாரணமான ஒரு இரவு ஒருபகலில் யோகிகள் பன்னிரண்டு இரவு பகல்களைக் கணக்கிடுவர். இவ்வாறு ஓடுகிற பிராணன் சுழுமுனையில் ஓடினால் அந்தக்கால நிர்ணயம் நீங்கிவிடுகின்றது. அதனால்தான் சுழுமுனை காலத்

தைப் புசிக்கின்றது என்று கூறியது. இதையறிந்த யோகிகள் நெடுங்காலப் பழக்கத்தினால் பிரமரந்திரமாகிய சுழுமுனையில் பிராணனைச் செலுத்திக் காலத்தையும் மரணத்தையும் வென்று நெடுங்காலம் ஜீவித்திருக்கிறார்கள். இதனால் சுழுமுனைநாடியைச் சாம்பவி என்று புகழ்ந்து கூறுவார்கள்.

முதுகின் நடுவில் வீணாதண்டம் என்று சொல்லப்பட்ட ஒரு எலும்புக் கூடு இருக்கின்றது. இந்தக் கூடு மேரு என்னப்படும். இதன் மத்தியில் சிறு துவாரம் ஒன்று உண்டு. அது சிரசின் வழி புகுந்து புருவ நடு வரையில் சென்று கூடும். இது சுழுமுனை. இதுவே பிரமரந்திரமாம். இதற்குச் சிவனாகிய சம்பு அதிதேவதையாதலால் அது சாம்பவி என்னப்பட்டது. அந்த நாடியில் பிராணன் பிரவேசித்தலால் உன்மணி அவஸ்தை சித்திக்கும். அஃதில்லாவிடில் யோகத்தால் யாதும் பயனில்லை. மனம் பிராணவாயு இரண்டில் ஒன்றை அடக்கினால் மற்றொன்று தானே அடங்கிவிடும். இதுபற்றியே ஞானிகள் அடக்குவதேபோதும்; வாயுவைத் தடுப்பதாகிய ஹடம் அனாவசியமாகுமென்பர். இதனாலேயே,

“ காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதல் மிகவெளி தேவழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே ”

என்று சான்றோர் கூறினார். ஸ்ரீமத் சங்கராமுனிநாதருக்கும் இதுவே கருத்தென்பது அவர்களியற்றிய நூல்களாற் புலப்படும்.

சித்தம், வாசனை, பிராணன் மூன்றும் அடங்கினவிடமே முத்தியாம். இம்மூன்றில் ஒன்று கட்டுப்பட்டால் அம்மூன்றும் கட்டுப்படும். இந்த அப்பியாசமே யோகிகளுக்குச் சிறப்பைத் தருவது. வாசனை, மனம், பிராணன் என்னும் இம்மூன்றையும் ஒருங்கே அடக்கினவனே யோகியாவான். இது செய்யப்படாவிடில் யோகியின் பிரயாசமெல்லாம் வீணாகவே முடியும். வாயு சித்தம் என்பவை பாலும் நீரும் போலவும், எள்ளும் எண்ணெயும் போலவும் கலந்துநிற்கும். இவை யிரண்டும் அடக்கப்பட்டால் அவைகளே மோட்சத்தை யளிக்கும். இல்லாவிடில் பந்தத்தைச் செய்யும். ஏனெனில் இவை அடங்காதபோது இந்திரியங்கள் விருத்தியாய்த் தத்தம் தொழில்களைச் செய்வதால் பிரபஞ்சவாசனை ஒழியாது. ஒழியாதாயின் மரணபவங்கள் மாறி மாறி வந்துகொண்டே யிருக்கும். அடங்கினால் மோட்சம் சித்திக்கும். வாயு பிராணாயாதி அப்பியாசத்தால் அடங்கும். மனம் குரு உபதேச மகிமையாலேயே அடங்கவேண்டும்.

சித்தலய மாவதற்கு சாம்பவிமுத்திரையே சிலாக்கியமாம். சாம்பவி முத்திரை முன்னமே கூறப்பட்டதாயினும் யோகத்தின் பலனாகிய சமாதியைக் கூறுதலால் சமாதிக் காதாரமாய் நிற்பது சாம்பவி முத்திரையாம். அதுபற்றி யிங்குச் சிறிது கூறவேண்டும். தனக்குள் மூலாதாரமுதல் பிரமரந்திரம் வரையிலுமுள்ள ஆதார சக்கரங்களில் ஒன்றைக் குறியாகவைத்து



அதில் கருத்தை நிலைநிறுத்தி, அரைக்கண் மூடி அரைக்கண் திறந்து புருவ மத்தியில் பார்வையைச் செலுத்துவது சாம்பவி முத்திரையாம். மனமும் வாயுவும் பிரமத்தினிடத்தில் ஒடுங்கும்படி நிற்கவேண்டியது. இவன் வெளிப் பார்வையுடையவனாயினும் உலகை அறியான். இந்த முத்திரையைக் குரு சேவைசெய்து நிச்சய முணர்ந்துகொள்ளவேண்டும். இதனால் பரம்பொருளைத் தனக்குள் தரிசிப்பது நிச்சயம். இது ஸ்ரீ பரமேசுவரனால் பார்வதி தேவியாருக்குச் சொல்லப்பட்டது. புருவமத்தியில் பார்வையை வைப்பது கேசரி முத்திரையாம். அகப்பார்வை சாம்பவியாம். சமாதிக்கு இவ்விரண்டு முத்திரைகளும் அவசியமாம். இவ்விரண்டு முத்திரைகளாலும் தன்னை மறந்து பிரபஞ்சத்தை உணராமையும், பரப்பிரமம் ஒன்றையே உணர்ந்து அதிலேயே இலயித்திருத்தலுமாகிய சமாதி சித்திக்கின்றது. இவ்வாறு கண்ணின் கருமணிகளைப் புருவமத்தியில் வைத்து, அதில் தோன்றும் ஜோதியில் கலக்கச் செய்யவேண்டும். அப்போது அகப் புறப்பார்வைகள் ஒன்றுபட்டுப் பரம்பொருளில் இலயிக்கும். இதுவே உன்மனாவஸ்தையென்று கூறப்படும் சமாதியாம்.

இரவு பகல் என்று கூறப்படும் சந்திர சூரியகலைகளை ஒடுக்குவதால் சித்தசலன மில்லாமை உண்டாகும். அதுவே யிராப்பக லற்ற விடமாம்.

“ இராப்பக லற்ற விடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்ற கரிபோற்ற நின்ற கடவுண்மெச்சும்
பராக்கிரம வேல நிருதசங் கார பயங்கரனே ”

என்று சான்றோர் கூறினார். இந்தவிடத்தி லிருந்துகொண்டு பரமான்மாவைப் பூஜித்துத் தியானிக்கவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. ஏனெனில் மாறி மாறி வரும் இரவு பகலென்னும் சந்திர சூரியர்களி னியக்கத்தினால் வாயுசபலிக்கின்றது. அதனால் மனம் நிலைகொள்ளாமல் அலைகின்றது. மனம் நிலையில்லாவிட்டால் செய்யப்படும் தியான பூஜைகளினால் பயன் பெறுவதில்லை. வீண் பிரயாசமாகவே முடியும். சித்திபெற முயலுகிறவன் முதலில் மனம் வாயு இவ்விரண்டையும் அடக்கி ஸ்திரமுடையவனா யிருக்கவேண்டும். இதற்கு இந்த முத்திரைகளினாலன்றி ஒருமைப்படாது. இதனால் தான் இராப்பகலற்ற விடத்திலிருந்துகொண்டு பூஜை செய்யவேண்டுமென்று நூல்கள் கூறுகின்றன. இந்தப் பூஜையிலாவது மனமடங்கித் தியானத்திலிருப்பதே பரமாத்ம பூஜையாம். இவ்வாறு வேத முதலிய சகல நூல்களும் கூறுகின்றன. சந்திர சூரிய கலைகளில் ஓடும் பிராணனை நடுநாடியிற் செலுத்துவதினால் உண்டாவதே சூனிய ஸ்தானமாம். அதாவது பரமாகாய ஸ்தானமாம். இந்த ஆகாயம் பரமான்மாவுக்குரிய ஸ்தானமாம். இந்த ஸ்தானத்தில் மனோவாயு ஒடுங்கும்போது துரியாவஸ்தை உண்டாகின்றது. அதாவது நான்காவது அவஸ்தை. அது ஜாக்கிரம் சொற்பனம் சுழுத்தியென்னும் மூன்றவஸ்தையும் நீங்கியதாம். இந்தவிடத்தில் சந்திர சூரியர்களில்லாமை

யால் காலமும் இல்லை. காலமில்லாதபோது காலத்தை யெதிர்பார்த்திருக்கும் காலனுமில்லை. இவ்விடத்தில் ஒடுங்கி நிற்பதே யோக நித்திரையாம் என்று கூறப்படும். இது பிரமாகாரத்தில் முழுகியிருக்கும் அவஸ்தையாம். இந்த யோகி மேலிருந்து ஒழுகும் அமிர்தப்பிரவாகத்தில் முழுகுகிறான். அவன் சித்தனுமாகிறான். இதில் நிலைத்து நான் அதுவென்னும் பேதமற்றிருப்பதே சமாதியாம். இந்நிலையில் சகல சிந்தனைகளையும் ஒழித்துவிடவேண்டும். ஒழித்தால் பிரமத்தில் நிலைபெறுவான். இவன்தான் ஜீவன் முக்தன் என்று புகழ்ந்து கூறப்படுகிறவன்.

இவ்வாறு இருப்பவன் நாதானு சந்தானம் செய்யவேண்டும். இந்த நாதம் சுழுமுனைநாடியிலுள்ளது. சித்தாசனத்தி லிருந்துகொண்டு சாம்பவி முத்திரையை அனுஷ்டித்து வலது காதினால் நாதத்தைக் கேட்கவேண்டும். இரண்டு கைப்பெருவிரல்களால் காதுகளை மூடவேண்டும். சுட்டுவிரல்களால் கண்களை மூடவேண்டும். பவுத்திர விரல்களால் மூக்குகளை அடைக்கவேண்டும். மற்ற விரல்களால் வாயை மூடவேண்டும். இப்படி மூடிக்கொண்டு நாதத்தைக் கேட்கவேண்டும்.


இப்படியிருந்து பிராணாப்பியாசம் செய்யும்போது பிரமகிரந்தி, விஷ்ணுகிரந்தி, ருத்திரகிரந்தி என்னும் முடிச்சுகள் பேதிக்கப்படுகின்றன. அநாகத முதலிய விடங்களிலிருந்து நாதம் கேட்கப்படும். அநாகதத்திலிருந்தே யுண்டாவதால் இது ஆரம்பாவஸ்தை என்னப்படும். விஷ்ணுகிரந்தியைப் பேதிக்கும்போது உண்டாகும் நாதம் பலவிதமாயும் பேரி போலவும் கேட்கப்படும். புருவமத்தியாகாசத்தில் நாதம் மத்தள ஓசை போலக் கேட்கப்படும். ஆரம்பாவஸ்தையைத் தரிசித்தவன் (கேட்டவன்) அழகிய சரீரத்தையும், கீர்த்தியையும் உடையவனாய் வாசனையுள்ளவனும் ரோகமற்றவனுமாவான். இரண்டாவது கடாவஸ்தையைக் கேட்கிறவன் புத்தி தீட்சண்யமுடையவனாய் அழகினால் தேவர்களுக்குச் சமானமானவனாயு மிருப்பான். புருவமத்தியாகாசத்தில் கேட்கப்படும் மூன்றாவதாகிய பரிசயாவஸ்தையால் (ருத்திரகிரந்தி பேதத்தால்) பசி வியாதி மரணம் மூப்பற்றவனாகிறான். பிராணன் பிரமரந்திரத்தை யடையும்போது வேணுநாதம் வீணாநாதம் போன்ற நாதம் கேட்கப்படும். இதற்கு நிஷ்பத்தி அவஸ்தை என்று பேர். இந்த அவஸ்தை யுடைய மனம் பிரமத்தில் ஒடுங்கிநிற்கும். இதுவே ராஜயோகமென்று புகழ்ந்து கூறப்படுவதுமாம். இந்த நாதத்தைக் கேட்ட யோகியானவன் முத்தொழில்களையும் செய்யும் சாமர்த்திய முடையவனாய் ஈசுவரனுக்குச் சமானமாவான்.

(தொடரும்) சிவானந்த சாகர யோகீஸ்வரர்.

---

**சந்தாதாரர்களுக்கு:**—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

சிவமயம்




## எறிபத்தநாயனார் புராணத்தின் சில விசேடக் குறிப்புகள்.

(214-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 8. சொல்வோரது தவறால் உண்மை மாறுபடு மெனல்.

ஒருவர் தாம் கண்டு கேட்டு அறிந்ததைப் பிறரிடம் கூறும்போது, கூறுவோரது சொற்சோர்வால், கேட்பவர் அதனை உண்மைக்கு மாறாகக் கிரகிப்பது முண்டு.

எறிபத்த நாயனார் யானையையும் பாகரையும் கொன்றமையைச் சில பாகரோடி அரசரது வாயிற் காப்போரை யணுகி "பட்டவர்த்தனமும் பட்டுப் பாகரும் பட்டாரென்று-முட்டநீர் கடிதுபுக்கு முதல்வனுக் குரையு" மென்றபோது அதைக் கேட்டறிந்த வாயிலாளர் அரசரைப் பணிந்து "பற்றலரிலாய் நின்பொற் பட்டமால் யானை வீழச் - செற்றனர் சிலராமென்று செப்பினார் பாக ரென்றார்." அதைக்கேட்ட புகழ்ச் சோழரும் ஒருமையிற் கூறாது செற்றனர் சிலராமெனப் பன்மையிற் கூறியதாலும், பாகர் செப்பினர் என்றமையாலும் மாற்றாரிற் சிலரால் நிகழ்ந்திருக்குமெனச் சீற்றங் கொள்ள நேர்ந்தது.

அதனையறிந்த சேனாதிபரும் சேனையை யுத்தகோலத்துடன் திரட்டிவர, அரசரும் "அண்ணலம் புரவிமேற்கொண்டார்".

அவர் படுகளத்தைக் குறுகியபோது "பகைப்புலத் தவரைக்காணான்" என்று சேக்கிழார் பெருமான் கூறுமாற்றானும், புகழ்ச்சோழர் இவ்வாறு தாம் கேட்டதொன்று நிகழ்ந்ததொன் றென்பதைத் தாமே எறிபத்த நாயனாரிடம் "செறிந்தவர் தம்மை நீக்கி யன்பர்முன் றொழுது சென்றீ - தறிந்திலேனடியே னங்குக் கேட்டதொன் றதுதா னிற்க" என்று கூறுமாற்றானும் மாற்றலரால் நிகழ்ந்ததெனப் புகழ்ச்சோழர் அறிந்ததாகவே துணியப்படும்.

"மொழிவ தறமொழி"

"ஐந்தறிவாற் கண்டாலு மாரேது சொன்னாலு
மெந்த விருப்புவெறுப் பேய்ந்தாலுஞ்—சிந்தையே
பார விசாரத்தைப் பண்ணாதே யேதேனுந்
தீர விசாரித்துச் செய். (சிவபோகசாரம்.)

### 9. கோபத்தின் செயல்.

தீவினைகளைச் செய்ய ஒருவனைத் தூண்டுவதில் கோபத்திற் சிறந்ததொன்றில்லை. அது ஒருவனிடத்தி லுண்டாகியபோது அவனதறிவைக் கெடுத்து தீரவிசாரிக்க வொட்டாது, நடுவறிய வொட்டாது தடுத்து, அவனதுள்ள மலர்ச்சி முகமலர்ச்சிகளைக் கெடுத்து, அவனது தேகசுகத்தை மின்சார வேகம்போல விரைந்து கெடுத்துவிடும்.

கோபமானது நன்மை தீமைகளை அறியவொட்டாது. ஒருவனுக்கு அதிக பகையாகவுள்ள காமத்தைப்போலவே கோபமும் சிறந்த பகையாகும்.

அக்கினி தன்னைச் சார்ந்தவைகளையே தகிக்கும். கோபமோ தானுண்டாகிய விடத்தையும், அதன்பக்கத்துள்ளவற்றையும் தகிக்கும். ஆதலால் சேர்ந்தாரைக்கொல்லி யெனக் கோபத்தைக் கூறலாம். ஒருவன் தன்னைத் தீமைகள் அணுகாது, நோய்வாய்ப்படாது காக்க விரும்பின், தான் அழியாதிருக்க விரும்பின், எவ்விதத்தினுங் கோபத்துக் கிடங்கொடுக்கலாகாது.

புகழ்ச் சோழரிடத்துக் காவலாளர்கள் "பட்டமால் யானைவீழச் செற்றனர் சிலராம்" என்ற மாத்திரையே "வளவனுங் கேட்டபோதின் மாறின்றி மண்காக் கின்ற—கிளர்மணித் தோள லங்கற் சுரும்பினங் கிளர்ந்து பொங்க, வளவில் சீற்றத்தினலே யார் செய்தா ரென்றுங் கேளா - விளவரி யேறுபோல வெழின்மணி வாயி னீங்க", சேனைத்தலைவர்களுஞ் சேனையுடன் தன்னைச் சூழத் தானும் பீடுற்ற வோர் குதிரைமேற்கொண்டு படுகளத்தைக் குறுகி "வென்றவர் யாவ ரென்றான் வெடிபட முழங்குஞ் சொல்லான்" என்றமையினலே "அந்தமில் புகழானென்றும்", "மண்ணுக்குயிராமன்னவனூர்" என்றும் சேக்கிழார் பெருமானல் சிறப்பிக்கப்பட்ட புகழ்ச் சோழரே கோப வலைப்பட்டுத் தீரவிசாரியாது யுத்தமேற் கொண்டா ரென்றால் கோபமானது யாரைத்தான் குடிகெடுக்காது. அம்மம்ம! முற்றத்துறந்த முனிவர் முதலியோரையும் ஓர் ஓர் காலத்து முதுக்குறை வுறுத்தியது கோபமேயன்றோ? ஆகையால் உயிர்க்குறுதி நாடுவோர் எவ்வகையினும் கோபமணுகாது தம்மைக் காக்கவேண்டும்.

"வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்."
(காஞ்சிப்புராணம்)

"பெற்றிடு]திருவினிற் பிறந்த வெஞ்சினங்
கற்றவ ருணர்வையுங் கடக்கு மன்னது
முற்றிறு கின்றதன் முன்ன மன்பினோ
ருற்றன கூறியே யுணர்த்தல் வேண்டுமால்." (கந்தபுராணம்.)

"சினத்தி ளுல்வருந் தீமையத் தீமைதீப் பிறப்பு
மனத்தி னீடிய மருட்கையும் வறுமையு நாகு
மினைத்து நல்கிடு மாதலா லொருபொழு தயர்த்துந்
தனக்கு நல்லவன் வளர்ப்பனோ சீற்றமாந் தழலை." (சேதுபுராணம்.)

"மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின் முதலற முறுக்குமாபோலத்-தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாஞ் சயிக்கு - மாங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லதனையுள் ளடக்கவு மடங்கா - தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ." (இராமாயணம்.)

"நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற." (திருக்குறள்.)

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்." (ஷை.)

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்." (ஷை.)

"ஆறுவதுசினம்." என்பது முதுமொழி.

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையானந்தம்.

ஸ்ரீ




## ஸ்ரீ ஆண்டாள்.

(216-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆயர் குலத்துதித்த வரிவளைக்கை நங்கையர், தம் கண்கள் காணத் தமக்கிடைப் புகுந்து தர்தம் மனம் உவப்பன பல செய்து போதருகின்ற ஸ்ரீ யசோதை மகனாரிடம் தத்தம் மனத்தைச் செலவிட்டுச் சிந்தை யொழிந்தவராய்ச் சித்திரமொத்தனர்.

திருவாய்ப்பாடியிலுள்ள பெண்கள், தாம் ஸ்நாநஞ் செய்தற்கு மஞ்சளரைப்பார்களன்றே. ஒருத்தி அரைத்த மஞ்சள் பற்றுதலில் நல்லது, அல்லது காணத் தம் மேனியிலன்றோ ஒருபுறத்துப் பூசிக் காண்பாள். ஆனால் ஆய்ப்பாடிப் பெண்களோ, சுலபனுகித் தோழரோடேவரும் யசோதைமகனார், தாங்கள் ஸ்நாநஞ் செய்யுமிடத்தே வருதலாலே, அவன்றன் திருமேனியிலே தாம் அரைத்த மஞ்சளின் பற்றுகையைக் காண்கைக்குப் புன்முறுவலித்த முகத்துடன் வலக்கை குவித்துக் "கண்ணு அருகேவா" என்றழைப்பர். அன்பு கொடுத் தழைக்க முன்வரும் எளியன் 'அவர்கள் அழைக்கப் பெற்றோமே' என்ற மகிழ்ச்சியுடன் அவர்கள் முன் சென்று நிற்பன். அப்பொழுது வருகை மகிழ்ந்த அம்மடந்தையர் ஒவ்வொருவரும் தத்தம் மஞ்சளின் பற்றுக்காண அவன் திருமேனியையே இடமாக்கி அரைத்த மஞ்சளைத் தீற்றிப் பற்றுக் கண்டு உள்ளம் மகிழ்வர். ஓரொருவரும் தீற்றப் பெற்றதால் தன் திருமேனியெங்கும் மஞ்சட்பூச்சேகொண்ட அழகன், மீண்டு தன் தோழருடன் பசுக்களை மேய்க்கைக்குச் செல்வான்.

ஸ்ரீ கண்ணன் திருவாய்ப் பாடியிலே அவதரித்த காலத்தே அவனோடொத்த ஆயிரம் பிள்ளைகள் பிறந்தார்கள் என்பர் பெரியர், ஆகவே பிறப்பாலும், வளர்ப்பாலும், வயதாலும் ஒருபுடை யொப்பவராகின்ற ஆயப்பிள்ளைகளுடன் ஆயர்குலக் கொழுந்து மகிழ்ந்து பசுக்களையும் கன்றுகளையும் மேய்க்கைக்குச் செல்லுவான். ஆயப்பிள்ளைகளும், ஸ்ரீராமபிரானை யன்றித் தனித்துறைதவிற் றரியாத இளையபெருமாளைப் போலே ஸ்ரீ கண்ணனைப் பின்பற்றியே நிற்பவராயினர். பசுக்களை மேய்க்கைக்குச் செல்லுமவர்கள் பகைவரைப்படுத்தற்கும், விளையாட்டிற்குமாகத் தெறி (சுண்டு) வில்லும் சுரிகை (சூர்க்கத்தி) யும் பிறவும் ஆயதங்களாகக் கொண்டு செல்வர். அவர்கள் தமக்குள் ஏற்பட்ட சிநேக விசேஷத்தால் ஒருவர் ஆயுதத்தை யொருவர் பற்றியோடியும், ஒருவர் மேலாடையை ஒருவர்பற்றி யிழுத்தும் பலதிறப்பட விளையாடிக் குதுகலித்துத் திரிவர், ஸ்ரீ கண்ணன் அவர்களுடன் கலந்து, புல்லுள்ளவிடத்தே ஆநிரைகளை மேயவிட்டுத் தன் கையிற்கொண்ட குழலொலியால் அவைகள் பாந்து செல்லாமல் ஓரிடமே அமைந்து மேய விடுத்துத் தன் தோழரோடு விளையாடி யிருப்பன். மேல், மாலைக்காலமானவாறே ஆனிரைகளுடன் வீடு திரும்புவான்.

கோவலர் சிறுவனாகிய கண்ணன், தன்னைச் சூழத் தோழன்மாரும் ஆனிரைகளும் வரப் பெருமிதத்துடன் வருவான். அதுகாலை, மயில் தோகை

யால் செய்யப்பெற்றுப் பலவடிவங்கள் அமைந்து தழை, தொங்கல் எனப் பெயர் வாய்ந்த குடைகள் எங்கும் நிறைந்து தோன்றும். ஆயச் சிறுவர்கள் தம் இடுப்பில் கட்டிய சிறிய பறையை ஒலிப்பர். மத்தளியென்ற பெரு முழக்கு வாத்தியம் முழங்கும். இலையாலும், மூங்கிலாலும் செய்யப்பெற்ற குழல்கள் இனிமையான வொலியைக் கொடுக்கும். தம் குலத்திற் கேற்ப ஆயப்பிள்ளைகள் பாடிவரும் பாட்டொலி ஒருபுறம் பரவும். இவ்வகை ஒலி களுக்கு ஏற்ப அவ்வவ்விடம் அச்சிறுவர் பலதிறப்பட நடித்து வருவர். இம் முறையே கண்ணனுள்ளிட்டா ரனைவரும் கதிரவன் படுகைகண்டு வீடு நோக்கி விளையாடி வருவர். ஸ்ரீ பரந்தாமன், தோழர்களில் உயிர்த்தோழ னாய், பிரியனுமாய், இதமே செய்வானுமா யிருப்பானொருவனுடைய தோளை ஒரு திருக்கையாலே ஸ்பரிசித்தும் மற்றொரு திருக்கையிலே பசுக்கள், மேய் கைக்கும், பக்கத்து விலங்காமைக்கும் மீளுகைக்கும் பழக்கும் வேறு வேறு குறிப்பு த்வநியைச் செய்கைக்கு உறுப்பாகவமைந்த சங்கத்தைத் தன் திருப் பவள வாயிடை மடுத்துப் பசுக்கள் தன்னைத் தொடர்ந்து வருதலைக்குறிக் கும் த்வநியைச் செய்துகொண்டே கோகுலத்தைக் கிட்டிவருவான். இந்த த்வநிதானே, காலையில் மஞ்சட்பற்றுக் காண்கைக்கு இடமாகத் தன்னைத் தங்களுக்கு எளியனாக்கித் தந்த அழகன் (கண்ணன்) வருதலை மாலைக் காலத்தே அவன்வருங் கோலங் காணுதற்கு வழிபார்த்திருக்கும் கோபிகை களுக்கும் அவன் வரவை உணர்த்துவதாகவுமாகும்.

ஆயர் மடமக்களில், சிலர், அவ்வொலி கேட்டுத் தரிக்கமாட்டாராய்த் தாம் இட்டவும் தொட்டவுமாகிய பொருள்கள் அவ்வவ்விடத்தனவாகப் போகட்டு, தலையசைத்துக் காளையென எடுத்த நடையுடன் தம் மனம் குளிர் தற்கு வரும் ஒருவனை அவனைக் காணும் ஒட்டமெடுத்த அவாவினராய், அவன் கோலங்காணப் பலகணியூடு பார்த்திருப்பர். சிலர் அவன்விடுத்த த்வநி கேளாமே அவனே நினைவாக அயர்ந்திருந்தாரை விரைந்துட்புக்குத் துகில் பற்றி யிழுத் தழைத்துக்காட்டி அவர் தம் அயர்வு தீர்ப்பர். சிலர் தமக்குள் ஏற்றன, இன்பந்தருவன, தத்தம் மனம் அறிவன வெளிப்படையாக வாய் விட்டுச் சொல்லியும், குறிப்பால் தம்முள்ளுணர்ந்தும் மகிழ்ந்தயர்வர். சிலர் ஆங்காங்கு இருவர், மூவர் கூடித் தமக்குள் சில பேசி மகிழ்வர்.

ஒருத்தி:—தோழி, அவன் திருமேனியழகும், ஒப்பனையழகும், வருவழகு மாகிய ஓரொன்றனையும் எத்தனை அறிவுடையவரும் புகழ்தற்கு ஆகுமோ! யாம் அவனை நம்பக்கத்திலிருத்திக் கண்டு களிக்கும் கருத்துடையோம். அவனோ நம்முள்ள மறிந்த மாயன். நம்முள்ள மறிந்த அவன் நம் எண் ணத்திற்கு இணங்கும் எண்ணம் இல்லாதவனாயின் இவ்வீதியோடு வருத லாகாது. அவன் அறிந்துவைத்தும் இவ்வீதியில், நாமிருக்கும் மிவ் விடை, நம்மிடைப் புகுந்து போகுவானாயின், தோழி, மயக்குக் குழலேந் திய அக்கள்வனை, கண்ணுக்கும் மனத்திற்கும் இனியானை இறுகப் பிணித்துப் பிடித்திழுத்து நம்மிடைத் தகைந்திடுவம்.

பிறள்:—தோழி: என் கருத்தே சொல்லினை. நல்லது என்றாலும், நம் நிலைமை யறியாத பேச்சு அதாகும். பெண்கள் அல்லவோயாம். யாம் சென்று சிறியன் குழலேந்திய கையைச் சிக்கெனப் பிடித்து மகிழ்ந்து, மனம் உவக்க இழுத்துவந்து, உடலெங்கும் உவகைபூப்ப நம்மிடை வைத்துக் களிப்பின், வெறும் வாயை மெல்லும் இவ்வூரவர்வாய்க்கு அவலும் அன்றோ கொடுத்தவராவோம். மேலும் தோழர் திரளோடு வருமவனை வளைக்கும் வகையாது?



ஒருத்தி:—வகைகூறக்கேள். "நாங்கள் மேலிடத்தே பந்துகொண்டு விளை யாடினோம். பந்து பலகணியூடு பறந்து அம்மிடுக்கன் அருகு வீழ்ந்தது. அக்கள்வன் அப்பந்து வீழ்ந்த அப்பலகணியூடு, அது எடுக்க முகங்காட் டிய எங்களூடு நோக்கிக் கண்வாங்கிப் பந்து எடுத்துச் சென்றான். ஆத லின் அவன் கைதீண்டப்பெற்ற அப்பந்தே பெறுதற்கு அது செய் தோம் என்பம். இவ்வகையில் அவனைத் தழுவிப்பிடிப்பம். நம் மனம் அறிந்த மாயன் நம் செய்கைகண்டு செந்துவர்வாய் சிறிதே விள்ள முறு வலிப்பான். யாம் அம்முறுவல் கண்டு உவத்தலைச் செய்வோம் தோழி.

இவ்வகையில், பற்று மஞ்சள் பூசித் திருமேனிகாட்டிச் சென்ற கோவ லச் சிறுவன், காலிப்பின் வருகை காணுதலில், பலகணி யூடுபார்ப்பவரும், காணாதார்க்குக் காட்டி அயர்வு தீர்ப்பாரும் தம்முள் கலந்து மகிழ்வாரு மாகிய கோபிகைகள் பலரும் தம் பெண்மையும், வீட்டவர் வெகுளியும், மற் றையவர் சிறு சொல்லையும் பேணாதே, அவன் குழல் தாங்கிய கோலமே பேணித் தம் அகமும் முகமும் மலர அவன் குழலெடுத்தூதும் திறத்தழகில் ஈடுபட்டுப் பாவையராயினர்.

ஸ்ரீ குழற்கோவிந்தன், இடப்பக்கம் இடத்தோளைச் சாய்த்தும், இரு கைகளும் குழலிடமாகவும், பண்ணிற்குத் தகுதியாகச் சிறுவிரல்கள் குழல் தடவிப் பறிமாறவும், இடப்பக்கம் சாய்ந்து நிற்றலாலே அவ்வளவே செங் கண்களும் குழல்நுனியை நோக்கக் கோடினவாகவும், "வாய்கடைகூட" என்றபடியே இரண்டு கடைவாயையும் குவித்து ஊதுகிறபோது சிவந்த வாயினது அகவாயிலுண்டான வாயுவினுடைய பூரிப்பாலே குமிழ்க்கவும், உலாவி யுலாவிக் குழலூதுதலாலே ஆயாசம் பொறாமல் ஸௌகுமார்யத்தாலே குறு வியர்வை அரும்பின திருப்புருவம் மேலே கிளர்ந்து வளையவும், இனிய இசையை எவருங் களிக்க உதவினன். மங்கைமார்கள் புஷ்பத்தாலே அலங் க்ருதமான கூந்தல் நெகிழ்ந்து அலைய, ஒப்பித்து உடுத்தியவஸ்திரம் நெகிழ (தலைகுலைய அரைகுலைய) அக்குழலோசை வழியே யோடிவந்து செவ்வரி கருவரி பரந்த கண்கள் அவனிடத்தனவாக மனமும் அவை சென்ற வழியே செல்ல, சிந்தை யழிந்தவராய்ச் சித்திரமொத்தனர்.

இங்குக் காட்டிய முறைமையிலே புத்திரவாத்ஸல்யத்தால் யசோதைப் பிராட்டியாரும், திருமேனியின் சௌந்தரியத்திலும் பிறகுணங்களிலும் ஈடு பட்ட காதலால் கோபிகைகளும் பிரேமை மிகுதியும் கொள்ள, எல்லாம் வல்ல எம்பெருமானாய் எழிலார் திருமருவு மார்பனாய் வேங்கடம் நின்று அருள் புரிந்தருளும் ஆதிமூர்த்தியே காரணனாக வந்தவதரித்த கோலவடி வினையும் குணங்களையும் தந்தையார் பேசக்கேட்டுக் கிடந்தனள் அல்லவோ எந்தாய் ஸ்ரீ ஆண்டாள். அவள், அவர்களெல்லாம் காணப்பெற்ற பாக்கியம் தனக்குக் கிடையாமைக்குப் பெரிதும் வருந்தினாள். கோகுலவாசிகளான இடைப்பெண்கள் நோன்புநோற்கையை வியாஜமாகக்கொள்ள ஸ்ரீ யசோதை மகன் அவர்கள் பக்கல் நீங்காது அந்நோன்பிற்கு நிர்வாகனாய் உறைந்தா னன்றே. அது உணர்ந்த ஆண்டாள், தானும் அந்நோன்பு நோற்கும் கொள்கைகொண்டு அவனைப் பக்கத்தவனாக்கிக் கொள்ளத் துணிந்து அப் பெண்கள் நோற்றபடியைத் தான் எவரும் மகிழ்ச் 'சங்கத் தமிழ்மாலை முப் பது" எனப் புகழ்ப்பெற்ற திருப்பாவை யெனுங் கிரந்தத்திற் சொல்லிய முறைமையே மார்கழி மாதத்தே நோற்றலை மேற்கொள்ளுவாளாயினள்.

(தொடரும்) N. திருவேங்கடத்தையங்கார்.



# மாணவர்பகுதி

## தங்கத் தாடி.

ஒருதேசத்தில் ஒரு அரசனிருந்தான். அவனுக்குக் கற்பிற்சிறந்த நற்குண மனைவி ஒருத்தி இருந்தாள். இவர்களுக்கு அழகிற் சிறந்தவனும், சகல கலாவல்லபனும், வெகு புத்தி சாதுரியம் வாய்ந்தவனும், ஈவு, இரக்கம், பச்சாத்தாபம் முதலிய நற்குணங்கட்கே ஓரிருப்பிடம் போன்றவனுமான ஓர் புதல்வனிருந்தான். அவனுக்கு 5-வயது நடந்துகொண்டிருக்கையிலொரு நாள், அரசன், தனது ஆருயிர் மனைவியை அழைத்து, அன்புடனிறுகத்தழுவி, "பிரியையே! எனக்கு இப்பொழுது 45-வயதே ஆகின்றதெனினும், எனக்கு வந்திருக்கும் காசநோயாலின்னுஞ் சின்னேரத்தில் நான் இறந்துவிடுவேன் போற்றோன்றுகின்றது. மரணம் எப்பொழுது வருமென்ற ஓர் நியதியில்லையன்றோ? ஆறிலுஞ்சாவு, நூறிலுஞ்சாவாதலின், நானங்ஙன மிறத்தலுக்குச் சிறிது மஞ்சவேயில்லை. ஆனால் எனக்கு வெகு நாட்களாக ஒரே ஒரு கவலையிருக்கின்றது. அது என்மனதில் வெகு நாட்களாக வாசஞ்செய்து, தினம் என்னைச் செல்லரித்தல்போல் அரித்து, இன்னல்களுக்கு ஆளாக்கி, துன்புறுத்துகின்றது. அந்தக்கவலையைத் தீர்க்கவல்லவ ளிப்பூவுலகில் நீயே. அந்தக் கவலை யாதெனில், நானிறந்தபிறகு, நீ, வேறொருவனை மணந்து புது மோகத்தில் நமதருங்குழவியைக் கவனியாதுவிட்டு விடுவாயோ என்னவோ என்பதே. நீ அங்ஙனம் வேறொரு ஆடவனை மணத்தலினால் அனேகங் கெடுதிகளுண்டு. அவற்றில் முதலாவது உன் பதிவிரதாத்தன்மைக்குப் பங்கமேற்படும். அவன் மோகம் முப்பதுநாள், ஆசை அறுபதுநாள் என்றபடி சின்னாட்களுக்குப் பிறகு, பலவிதமாக உன்னைத் துன்புறுத்துவான். ஆனால் நீ அதனாலடையுமிலாபம் உனது ஆசையைப் பூர்த்தி பண்ணுவதே. அதனால் நீ இறந்த பிறகு முனக்கு இன்னலேயன்றி இன்பம் ஒரு சிறிதுமில்லை. நீ ரௌரவாதி நரகிற்கே போவாய். இந்தப் பரதகண்டம் பதிவிரதைகள் நிறைந்த பூமி. இப்பொழுதுதான் ஒவ்வோரிடத்தில் சில ஸ்திரீகளும், மனிதரும் கெட்டுப்போவதாகக் கேள்வியுறுகின்றோம். அவர்களுடையுந் துன்பங்களை நீயே நன்கறிவை யாதலின் அவற்றைப்பற்றி நானதிகம் விவரிக்காமல் விடுகின்றேன். நீ பேரரசியானமையின் பதிவிரதையா யிருந்தால்தான் ஏனையோரு மங்ஙனமே பதிவிரதையரா யிருப்பார்கள். ஜனங்களுக்குத் தர்மார்த்தத்தைக் காட்டும் பொருட்டே தசரத சக்கரவர்த்தியின் புதல்வன் ஸ்ரீராமனவதரித்தனன் என்பதாக நாம் படித்தும் கேட்டு மிருக்கின்றோம். ஆகையால் நீ வேறு புனர் விவாகஞ்செய்து கொள்ளா திருத்தலே நலம்" என்றான். இதனைக் கேட்ட அரசி, அரசன்மேல் சாய்ந்து கொஞ்சியவாறாகப் பேசத்தொடங்கி, "அரசே! தாங்களிறந்த பிறகும் நான் மணம் வேறு செய்துகொண்டு உயிருடனிருப்பேனா? இதனைத் தாங்கள் கனவிற்கூடச் சந்தேகிக்கலாமோ? நான் உடனே சககமனஞ்செய்வேனாயினும், தேவரீர் சொல்லியபடி நமதருங்குழவியின் நிமித்த முயிருடனிருப்பேன். ஆனாலும், நான் வேறொரு புருஷனை ஏறெடுத்தும் பாரேனென்பது முற்றிலு முண்மை" என்றாள். அரசன் பேருவகையுட னவளை இறுகத் தழுவினான்.



பிறகு ஒருநாளரசனுக்குக் காசநோயதிகரிக்க, அவனதைப் பொறுக்கமாட்டாம லுயிர் துறக்கவே, அரசி, தன் ஆருயிர்த்தலைவனிடம் வாக்களித்ததற்குமாறாக, இறந்துபோன அரசனின் உறவினனொருவனை மணந்து இன்புற்றிருந்தாள். அவனியற்கையிலேயே கொடியவனானமையி னரசிக்கு, முதற்கணவனிடம் பிறந்த வீரவரனைக் கொடுமையாக நடத்திப் பலவிதமாகத் துன்புறுத்தினான். அதனைக்கண்டு மபலையான அரசியால் ஒன்றுஞ்செய்ய இயலாமையினால் அவள் வெகுவாய்த் துக்கித்து, சாகுந்தறுவாயில் தனதாருயிர்க்குச் சமானமான முதற்கணவன் சொல்லிய வார்த்தையை எண்ணி ஏங்கினாள். இஃதிங்ஙனமிருக்க, அரண்மனைக் கருகாண்மையில் கண்டோரதிசயிக்கத் தக்கவாறு வெகு அழகாயிருந்த நந்தவனத்திலுள்ள புஷ்பங்கள் தினந்தோறுங்காணமற் போவதைக் கவனித்த புது அரசன், தன் காவலரிடம் திருடனை எங்ஙனமேனும் பிடித்துக் கொணராவிடி லவர்களைச் சித்திரவதை செய்வதாய்ச் சொல்லவே, அவர்கள், செய்வதறியாது பெரிதும் வருந்தியிருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற, காவலர்களின் தலைவன் மனைவி, காவலர்களிடம், திருடன் புஷ்பம் பறிக்கையிலவனைச் சுற்றிலும் நெருப்பைப் போட்டுச் சுலபமாகவே பிடிக்கலாமென்றாள். அங்ஙனமே காவலருஞ்செய்து திருடனைப் பிடித்து அரசனிடங் கொண்டுபோயினர். அரசன் கள்வனது தாடி தங்கமா யிருந்ததாலதிசயித் தவனை ஒருபொற்கூண்டிலடைத்து விநோதார்த்தமாக வைத்திருந்தான். நிற்க.

அத்தேயம், செல்வத்திலும், நாகரீகத்திலும், வளமையுற்றுப் பார்ப்போருக்கதனையடையவேண்டுமென்ற வோரபாரமான ஆவலைத்தந்துகொண்டிருந்தது. அதனாலதனை வெல்ல வெண்ணிய மகமத்கோரி அத்தேயத்தை முற்றுகையிட, வீரவானுடைய சிற்றப்பன் வீரவரனைத் தன்னருகிலன்புடனழைத்து, முத்தமிட்டு, "சிறுவ! இப்பொழுது சுல்தான் நமது தேசத்தை முற்றுகையிட்டிருப்பதால், நான் போருக்கேக வேண்டும். நான் இங்கில்லாத சமயத்திலிந்த நூதன தங்கத்தாடியுள்ள மனிதனை எக்காரணத்தின் பொருட்டும் வெளிவிடாது காப்பாற்றிவா. அங்ஙனமின்றி, அவனை விட்டுவிடுவையாயின், உனது சரீரம், சித்திரவதை செய்யப்படும்" என்று சொல்லிவிட்டுப் போருக்கேகினான். சிறுவன், தன் சிற்றப்பனது வார்த்தைப்படி வெகு ஜாக்கிரதையாகவே யிருந்து வருகையில், விதிவலிதானமையி னதற்கடிமையாகினான். எங்ஙனமெனி லவன் ஒருநாள் வழக்கம்போல் வில்லெய்து விளையாடிக் கொண்டிருக்கையி லவன் கையிலிருந்த அம்பு, தங்கதாடி மனிதனிருந்த கூட்டில்விழ, அதனைத் தருமாறு சிறுவனெவ்வளவு வேண்டியும் அவனதனைக் கொடுக்க மறுத்துப் பிறகதனைச் சிறுவனிடமளித்துத் தன்னை வெளியே விடு

மாறு வெகுவா யிரக்கம்வரும்படி கெஞ்சிக் கேட்டான். சிறுவனு மவனை விடுதலைசெய்ய, தங்கத்தாடி மனிதன், சிறுவனைநோக்கி, 'உனக்கு ஆபத்து வேளையில் உதவுவேன்'' என்று சொல்லிவிட்டுக் காட்டை நோக்கிச் சென்றான்.

சிறுவனும், தன் சிற்றப்பன்வந்து, தன்னைக் கோபிப்பன் என்றஞ்சி, காட்டு வழியாகச்செல்ல, பசி வெகுவாயவனை வருத்தத் தொடங்கியது. அதனால், சிறுவன் களைத்துப்போய் ஒரு மரத்தடியிலுட்கார, அவ்வழியே போன ஒரு பன்றியைக்கண்டு, அதனைக் கொல்ல நினைத்து எழுந்திருக்க, பன்றி அவனை நோக்கி, "இளவரசே! எனதிரு குட்டிகள் பசியால் வருந்தியிருக்குமாதலால், அவற்றிற்கு உணவுகொண்டு போகிறேன். அதனால், நீர் என்னைக் கொல்லாது காப்பாற்றுவீரானால், நான் உமக்கொரு சமயத்தில் உதவிபுரிவேன்'' என்றது. அதனைக்கேட்ட, இளவரசன், இது என்ன உதவிபுரியப் போகிறதென ஒருவாறு ஏளனமாய் நகைக்க, பன்றி, "இளவரசே! சிறுதுரும்பும் பற்குத்த உதவும்'' என்றபடி நான் உமக்கு உதவுவதைப் பாரும்'' என்று சொல்லிவிட்டுத் தன் வழியே யேகியது. பின்பு, அவ்வழியேவந்த கொக்கு ஒன்றும், வீரவான், தன்னைக்கொல்ல நினைப்பதைப்பார்த்தஞ்சி, "இளவரசே! என்னைக் கிருபைகூர்ந்து காப்பாற்றும். உமக்கு ஒரு சமயத்தில் தக்க உதவி புரிவேன்'' என்றுசொல்லிவிட்டு, மீண்டும், "இளவரசே! உயிரற்ற அசேதனப் பொருள்கள் ஒன்று சேர்வது கடினம். ஆனால் உயிருள்ளவைகள் மீண்டும் கூடும் என்பதை மறக்காதீர்'' என்று சொல்லிவிட்டுத் தன் வழியே போயிற்று. பிறகு இளவரசன், அங்கொரு நீரோடையிலிருந்த வாத்தைக் கண்டு அதனைக் கொல்ல முயல, அதுவும், பன்றியும், கொக்கு முரைத்தபடி உரைத்தது. இதைக்கேட்ட இளவரசன் அதையும் விட்டுவிட்டு அங்கு கிடைத்த கந்தமூல பலங்களையுண்டு, வலிவடைந்து, மீண்டும் பிரயாணஞ் செய்து ஒரு நகரையடைந்தான்.

அங்கு வீதியிலொரு பறையன் தமுக்கடித்துக்கொண்டு செல்வதைக் கவனித்த வீரவா னவனை நோக்கி, "என்ன விசேஷம்?'' என்று வினவ, அவன் அவ்வூரரசன் புதல்வியின், மூன்று கட்டளைகளை நிறைவேற்றுவோ ரவளை மணந்து அந்நகருக்கு மரசனாகலாம் என்றான். இளவரசனப் பெண்ணினரண்மனைஏகி, அங்குள்ள காவலரிடம் தன் விவரமுரைத்தான். உடனே அவர்களவனை யழைத்துப்போய் இளவரசியின்முன் விட்டனர். இளவரசியாகிய சிந்தாமணி, வீரவானை அழைத்து, பக்கத்தறைக்குப்போ யங்குள்ள ஒரு மூட்டையைக்காட்டி, "இளவரசே! இதோவிருக்கும் மூட்டையில் நெல்லும், உளுந்தும் கலந்திருக்கின்றன. அவற்றை வெவ்வேறாக ஒருநாளில் பிரித்துத் தனித்தனியான சாக்கில் கட்டவேண்டுமென்று உரைத்து அவனை அவ்வறையிலேயே தனியாக விடுத்துக் கதவை மூடிக்கொண்டு போய்விட்டாள். தனியேயிருந்த சிறுவன், "ஏண்டா இதில் வந்து மாட்டிக்கொண்டோம்'' என்று பலவாறு எண்ணித் துக்கித்திருக்கையி லவ்வறையிலிருந்து புற்றிலிருந்து ஈசல் கிளம்பவதுபோல் பன்றிகள் பூமியைப் பிளந்துகொண்டுவந்து,



இளவரசனிடமிருந்து, இளவரசி கட்டளையை அறிந்துகொண்டு தானியத்தை வெவ்வேறாகப் பிரித்துவைத்துவிட்டு அவனிடம் விடைகொண்டேகின பின்பு அதனைக்கண்ட இளவரசி பெரிதும் மகிழ்ந்து அவனை நோக்கி, 'என்விரலி லிருக்கு மிம் மோதிரத்தை இவ்வாற்றில் போடுகிறேன். அதனை எடுத்துத்தரவேண்டுமென்று அதனைப் போட்டாள். இவ்வரசனால் காட்டில் காப்பாற்றப்பட்ட வாத்து, இரண்டாவது கட்டளையை நிறைவேற்றிக் கொடுக்க, பிறகு இளவரசி, "காதல! நீர் என்மனதைக் கொள்ளையிட்டுவிட்டீர். எனது மூன்றாவது கட்டளையாவது இப்பொழுது பிறந்த குழந்தை ஒன்று சகலவித பாஷையிலும் சம்பாஷிக்க வேண்டும். அதுவுமன்றி அக்குழந்தை உலகிலுள்ள வாத்தியங்கள் எதனாலும் பாடவேண்டும்'' என்றாள். இதனைக் கொக்கு நிறைவேற்றிவைக்க, இளவரசன் சிந்தாமணியை மணந்து, அரசனானான். பிறகு, தன்னால் விடுதலை செய்யப்பட்ட தங்கத்தாடியே பன்றி, வாத்து, கொக்காக வந்ததென அவன் அறிந்தான். அதனுடனந்த நூதன தங்கத்தாடி மனிதன் ஒரு பெரிய மந்திரவாதி என்பதனையும், அவன் தன் சக்தியாலேயே தன் தாடியைத் தங்கமாக்கினனென்பதையும், அந்தச் சுவர்ண தாடியினுதவியாலவன் எந்த ரூபம் வேண்டுமானாலுந் தரிக்கவல்லவன் என்பதனையுமறிந்தான். வீரவான் பின்பு உவகையுடனந்த மந்திரவாதியைக் கண்டு தனக்குச்செய்த பேருபகாரத்திற்குப் பிரதியாக அவனைத் தன்னிடம் பிரதான மந்திரியாக வைத்துக்கொண்டான்.

கோபால ஸ்ரீநிவாஸன்.

குறிப்பு :—இக்கதை அற்பமானதாயினும், பரோபகார சிந்தை மக்கட்கு இன்றியமையாத தொன்றென்றும், அதனை இளம்வயதிலிருந்தே கைப்பற்றுவது அத்தியாவசியமென்றும், அதனால் நன்மையே சித்திக்குமென்றும் அறிவிப்பதை இளைஞர் உணர்ந்து, உதாரகுணத்தி லீடுபடுவாராக. ப-ரீ.

## வாசக சாலை.

*சகோதர சகோதரிகளே!*

ஒரு தேசமோ அல்லது ஒருமனித வகுப்பினரோ, சகல வழிகளிலும் முன்னேற்றமடைந்து சீர்பெற்று விளங்குவதற்கு அறிவே காரணம். அந்த அறிவை மென்மேலும் விசாலப்படுத்திக் கொள்வதும் அவசியமே! இப்படி ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அதை விருத்தியாக்கும்படி செய்ய அநேக சாதனங்கள் உண்டு. அச்சாதனங்களில் பொது வாசகசாலைகளை ஏற்படுத்துவது ஒன்றாகும். சில இடங்களில் உத்தம புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் வரவழைத்து வாசகசாலையை யேற்படுத்துவது கஷ்டமான காரியமாக இருக்கலாம். அப்படி இருந்தாலும் ஒருவரே தம்முடைய செலவில் ஒன்றிரண்டு தினசரிப் பத்திரிகைகளையும், வார, மாதாந்தரப் பத்திரிகைகளையும் தருவித்து அவைகளைக் கொண்டு வாசகசாலை ஏற்படுத்திப் பொது ஜன நன்மையைச் செய்வது மிகவும் சிலாக்யமே. "ஒன்றுமில்லாததற்குக் கொஞ்சமிருந்தாலும் நல்லதே'' என்னும் பழமொழிப் பிரகாரம் கையில் இருப்பதைக் கொண்டு பொதுஜன நன்மைக்காக வாசகசாலைகள் ஏற்படுத்துவது மிகவும் நல்லதென்றெண்ணாமலும், அதன்பொருட்டு ஒரு கட்டிடம் கட்டுவதைத் தடுக்க இடைஞ்சல் செய்ய வேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு "துர்வியாஜ்யம்'' செய்யத் தலையிடுவதும் சிலர்க்கு அழகாகத் தோற்றலாம்.

"நன்மை கடைப்பிடி" என்னும் முது மொழியை நல்லெண்ணமுன்னோர் யாவரும் கவனித்து, வாதகசாலை ஸ்தாபிப்பது நமக்கேயன்றி நமது மக்களின் முன்னேற்றத்திற்கும் மிக்க அனுகூலமென்று கருதி அவ்விஷயத்தில் முந்துவது பெரும் புண்ணியமாகும். ஒற்றுமைக்கும் பேராதாரமாகும். ஆதலால் அன்பர்களே!

(1) "நம்மை அறநெறியில் நிற்கக் கற்பிப்பதே சகல சமயங்களிலும் மெய்ச் சமயமாகும்"

(2) "அறநெறியில் ஆசைகொள்; அதுதான் சுதந்தரம் அளிப்பது"
(3) "துக்க மார்க்கம் ஒன்றே துக்க நிவர்த்திக்குச் செல்லும் மார்க்கம்"
(4) "கற்றவர் என்பவர் யார்? கற்றபடி நிற்பவரே"

(5) "நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமுண்டு, அது இல்லாதவனுக்கு ஒன்றுமே இல்லை"

(6) உள்ளொன்று வைத்து வெளியொன்று காட்டாது பரந்தநோக்கத்துடன் வாழ்வது நலமாக இருக்கும்.

இந்நீதி வசனங்களை யனுசரித்து வாசகசாலை எற்படுத்துவதில் சிரத்தை கொள்வீர்களாக.

லீலாகம்பெனியார், கிருஸ்தியாநகரம்.




## மாதரும் குடும்பமும்.

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் செய்த சிறு ஆராய்ச்சியால் மனிதர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்தற்குரியவர்களேயன்றித் தனித்து வாழக்கூடியவர்களல்லவென்றும், அதுவே சிருஷ்டி கர்த்தாவின் நோக்கமுமாமென்றும், ஆகவே நாம் பரஸ்பரம் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றோமென்றும், அப்படிச் சேர்ந்துவாழ்வதிலும் தமக்குரிய சொந்தபந்துக்களுடன் வாழ்வதே சிறப்புடையதென்றும், ஆதலால் அவர்களுடன் விரோத பாவமின்றிச் சிநேகத் தன்மையுடன் வாழவேண்டுமென்றும், அவ்வாறு ஒற்றுமைப்பட்டு வாழ்வதற்குக் காரணமானவர்கள் மாதர்களேயென்றும், அவர்களாலேயே குடும்பத்தில் கலகமுண்டாகி அதனால் விரோத முண்டாகின்றதாகலின் சகோதரிகள் அவ்வாறு கலகங்கள் நேராதபடியும் நேர்ந்தாலும் தங்கள் அறிவாலும் பொறுமையாலும் அதை அடக்கிக்கொண்டுபோவதே உத்தமமாமென்றும் பெற்றோம்.

சில குடும்பங்களில் புருஷர்களே கலகத்திற்குக் காரணமாகின்றனர். ஒரு வயிற்றிற் பிறந்த சகோதரர்கள் பல காரணங்களால் ஒற்றுமையிழந்து ஈச்சரவிட்டுக்கொள்வர். அதனாலும் குடும்பப்பிரிவினை யுண்டாகும். இத்



தகைய சமயங்களில்தான் சகோதரிகள் புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ள வேண்டியவராவர். தம் கணவரே அவர்களுக்கு விரோதமாகப் பேசினாரேயென்று தாங்களும் கணவருக்குப் பரிந்து பேசுவதுபோல அவர்களோடு மல்லாடுவதும் ஒன்றைப் பத்தாகக் கணவரிடம் சொல்லிக் கலகத்தை யதிகப்படுத்துவதுமாகா. கூடுமானவரை புருஷர்களை யடக்கவும் ஓரகத்திகளுடனும் மற்றவர்களுடனும் அன்பா யிருக்கவும் சகோதரிகள் முயலவேண்டும். சாமர்த்திய முள்ளவர்களாயிருந்தால் சகோதரிகள் அவர்களுக்கு அக்கலகத்தை யொழித்து சகோதரர்களுக்குள் ஒற்றுமை யுண்டாக்குவது பெரிய காரியமல்ல.

அங்ஙனமின்றிக் கலகம் முற்றிவிடுமெனத் தோன்றினால் உடனே பிரிந்துவிடுவதே நலமாயினும் மாதர்கள் மட்டும் 'நல்லது கெட்டது' நடக்கும் காலங்களில் ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொள்ளும்படியான நிலைமையி லிருக்கவேண்டுமேயன்றி ஜென்மப்பகையாளரா யிருத்தல் கூடாது. குடும்பத்தில் மாமன் மாமிகளாகிய பெரியோர்களும் சிறுவர் சிறுமியரும் இருப்பார்களாயின் ஒவ்வொருவரும் இவர்கள் நம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களெனக்கருதி அவர்களைச் சம்ரக்ஷிக்கக் கடமைப்பட்டவர்களா யிருத்தல் வேண்டுமேயன்றி 'இங்கென்ன அங்கே போங்கள், இங்கென்ன அங்கே போங்கள்' என்று சொல்லிவிடக்கூடாது. எல்லோரும் இப்படியே சொல்லிக் கழித்துவிட்டால் அவர்கள் கதி யாதாம்! இதுபற்றியேபோலும் ஒருபிள்ளை பெற்றவர்களுக்கு உறியில் சோறு; நாலுபிள்ளை பெற்றவர்களுக்கு நடுத்தெருவிற் சோறு என்னும் பழமொழி வழங்கலாயிற்று.

இனி, மாமிகளா யுள்ளோர் மருகியரிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

மருமகள் என்னும் சொல்லுக்கு அர்த்தமென்னவென்று பார்க்கவேண்டிய தத்தியாவசியமாகிறது. இதில் 'மரு' என்னும் பதம் ஒன்றும் 'மகள்' என்னும் பதம் ஒன்றும் ஆக இரண்டு பதங்கள் சேர்ந்திருக்கின்றன. மகள் என்னும் பதத்தின் அர்த்தம் அனைவர்க்கும் தெரியும். அதாவது புத்திரி அல்லது வயிற்றிற் பிறந்தபெண் என்பதாகும். மகள் என்னும் பதத்திற்கு 'மரு' என்னும் பதம் அடைமொழியாக அதாவது அதன் சிறப்பைக்காட்டும் பதமாக வந்துள்ளது. மரு என்பதற்கு வாசனை என்பது பொருளாம். ஆயினும் இங்கு வாசனை என்பதற்கு சிறந்த என்று பொருள் கொள்ளலாம். ஆகவே மருமகள் என்பதற்குச் சிறந்த மகள் என்றாகின்றது. இதனால் மகளைக்காட்டிலும் மருமகளே சிறந்தவளென்பது விளங்கவில்லையா! (இவ்வாறு சொன்னதைக்கொண்டு, அப்படியானால் மகளையே மகனுக்குக் கலியாணம் செய்துகொண்டார்களா? மருமகள் என்பதற்கு மகளைவிட சிறந்தமகள் என்று பொருள் கொள்ளலாமா? என்னும் கேள்விகளைக் கிளப்பக்கூடாது.) ஏன் அப்படியெனில், இதற்கு நியாயமிருக்கின்றது.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், சித்தூர்.




## பட்டு உற்பத்தி செய்யும் விதம்.

(224-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறவற்றைப்போல 'மூகா' பட்டுப்பூச்சிகளை உஷ்ணத்திரவக முறை வாயிலாகக் கொன்று பட்டெடுத்தல் கூடாத காரியமாதலின் இம்முறையை அவர்கள் அனுசரித்து வருகிறார்கள். நூற்பதற்குத் தேவையான பொழுது அப்பட்டுப்பூச்சிகளின் கூடுகளை எடுத்து இளஞ்சூடுள்ள தண்ணீரில் போடுவார்கள். இப்பட்டு மிகவும் நயமாகவும் பளபளப்புள்ளதாகவுமிருக்கும்.

**பயன்** :—ஒரு எகர் விஸ்தீரணமுள்ள பூமியில் சுமார் 100 'சம்' என்ற மேற்கூறிய பட்டுப்பூச்சிகள் கூடுவேய்வதற்கு அனுகூலமான சிறு மரங்கள் உண்டாகும். இவற்றினின்று சாதாரணமாகச் சராசரி ஒரு லக்ஷம் கூடுகள் (பட்டடைகள்) எடுக்கப்படலாமாயினும், அதன் நாலிலொருபங்குக் கூடுகள் தான் அநேகமாகத் தேரும். சற்றேறக்குறைய 5000 கூடுகள் ஒருசேர் உயர்ந்த பட்டைத் தரும். மூகாப்பூச்சியின் வாயிலாகக் கிடைக்கும் எந்தப் பட்டும் உபயோகமற்றதென்று தள்ளிவிடற் கியலாதது. ஆகவே, அவை யாவும் பயனுடையவைகளேயாம். இந்த 'மூகா' பட்டைக்கொண்டு, தரியிடப்பெற்ற ஆடைகள் மிக்க நயமாயிருப்பதுமன்றி, சாயமும் போகாது; சலவைக்குங் கெடாது; ஆடை நைந்துபோகும் வரையில் ஒரே விதமாயிருக்கும்.

### தாஸர் பட்டு.

**வளர்ப்பு** :—இதுதான் 'டசூர்ஸில்க்' என வழங்கப்படுவது. பீகார் மாகாணத்தைச் சேர்ந்த பகல்பூரே இதன் உற்பத்தி ஸ்தானம். இங்கு அரசாங்கத்தாரால் நிறுவப்பெற்ற ஓர் 'டசூர் பட்டுக்' கைத்தொழிற் சாலையுண்டு. இக்கைத்தொழிற் சாலையில் மேற்குறித்த நால்வகைப் பட்டடைகளையும் விருத்திசெய்து பட்டிற்கே அவ்வூரையோர் உறைவிடமாகச்செய்ய அரசாங்கத்தார் ஊக்கத்துடன் முயற்சி செய்துவருகின்றனர்.

'டசூர்' பட்டுக்கு வருடத்தில் இரண்டு பருவகாலங்களுண்டு. அவை வைகாசித் திங்களிலும், கார்த்திகை மாதத்திலும் தொடங்கப் பெறுகின்றன. இக்கைத்தொழில் அவ்வப்பருவகாலங்களிற் றொடங்கப்பட்டுப் பூர்த்தியாக ஐந்துமாதகால மாகின்றது. இப்பூச்சிகளின் கூடுகள் காடுகளிலேயே சேகரிக்கப்படுகின்றன. தட்டையான பெரிய பட்டடைகளைப் பொறுக்கிக் கூடைகளில் வைப்பார்கள். பட்டுப்பூச்சிகள், கூடுபோன்ற அக்கூடைகளிலிருந்து இராக்காலங்களில் வெளிப்பட்டு, விரைவில் பெண்பூச்சிகளைக் கண்டு கூடுகின்றன. அவை கூட்டினின்றும் வெளிப்பட்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் பசை தடவப்பெற்ற இலைகளை யக்கூடையின்



அடிப்பாகத்திற் பரப்பிவைக்க, பெண்பூச்சிகள் அவ்விலைகளின்மீது முட்டையிட வாரம்பித்து 50 முதல் 200 முட்டைகள் வரையில் முதல் மூன்று நாட்களுக்குள் இட்டுவிட்டு, ஒருவாரம் அல்லது பத்துநாட்களுக்குள்ளிறந்துபடுகின்றன. அம்முட்டைகள் உருண்டையாகவும், சிறியனவாகவும், ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டும் சங்கிலித் தொடர்போலிருக்கின்றன. ஒன்பதாம்நாள் இம்முட்டைகள் உருண்டை வடிவம் நீங்கப்பெற்று, தட்டையுருவினதாகப் பூச்சிகள் வெளிப்பட்டு இலைகளைத்தின்று துவாரமிட்டுக்கொண்டே வெளிப்படுகின்றன. இப்பொழுது அக்கூடை (கூண்டுபோன்றவை)களை மரங்களில் தொங்கவிட, புழுக்கள் துவாரமிட்ட இலைகளை விலக்கி அம்மரங்களிலுள்ள புது இலைகளை விரும்பிச் செல்லுகின்றன. இங்கு அவை ஐந்து முதல் எட்டுநாட்களுக் கொருமுறையாக ஐந்துமுறை சட்டையுரிருக்கின்றன. இதன் பின்னர் 36 முதல் 40 நாட்களுக்குள் இப்பட்டுப்பூச்சிகள் கூடுகள் கட்டத்தொடங்கும். முதிர்ந்த பூச்சிகள் நான்கங்குல நீளமுடன், மங்கலான மஞ்சள் நிறமுள்ளதாயிருக்கும். அப்பட்டடைகள் முற்றிலும் முட்டை வடிவினதாகவும், மிருதுவாகவும் வெளிறின (Grey) நிறமுடன் கருநிறக்கோடுகள் மேற்பாகத்திற் குறுக்கே பாவியதாகவு மிருக்கும். அதன் சராசரி அளவு $1\frac{1}{2}$ அங்குல நீளமும் $1\frac{1}{4}$ அங்குள அகலமுமாம்.

**உற்பத்தி** :—இப்பட்டடைகளை ஓர் இருப்புக் கொப்பரையிலிட்டுக் காய்ச்சுவார்கள். அப்பாத்திரத்தில் மரவுப்பு கலக்கப்பட்ட தண்ணீர் நிறைந்திருக்கும். பின்னர் அதிலிருந்து ஓர் சுத்தமான பானையில், கொப்பரையில் தனிப்பட்டுத் தங்கிநிற்கும் க்ஷாரசுபாவமான சத்தை (Alkaline) ஒதுக்கிவிட்டுக் கொட்டிவிடுவார்கள். இப்பானை மூன்று நாட்கள்வரை சூரிய வெப்பம் படுமாறு வைக்கப்படும். முன்காய்ச்சியவாறே மறுமுறையும் நான்காம்நாள் அக்கொப்பரையில் பட்டடை முதலியவற்றை யிட்டுக்காய்ச்சிக் குளிர்ச்சி பொருந்திய ஓர் (சல்லடை போன்ற) கூடையில் அவற்றைக்கொட்டி வடிக்கட்டுவார்கள். காய்ச்சும்போது மட்டும் மிருதுவான அப் பட்டடைகள் தீய்ந்துபோகாவண்ணம் தக்க எச்சரிக்கையுடன் வேலை செய்வார்கள். இவ்விதம் பதப்பட்ட பட்டடைகளைச் சுத்த ஜலத்தால் கழுவி உலர்த்துவார்கள். இப்பொழுது இவை நூற்கக்கூடிய நன்னிலையெய்தி ஆறுமணி நேரத்தில் நூற்கத் தகுதியுடையவையாகின்றன. மேற்கூறிய முறைப்படிக் காய்ச்சும்போது 'தாஸர்' பூச்சிகளையும் சேர்த்துக்காய்ச்சிக் கொன்றுவிடுவது இம்முறையிலில்லை. அவை வெளியேயுள்ள கூடையில் பறந்துபறந்து உலாவும்படியாக விட்டுவைக்கப்படுகின்றன. முதற்றிறமானதும், மிருதுவானதுமான தாஸர் பட்டுநூலுக்கு 'லக் (Lak) என்றும், சற்று தாழ்ந்தபட்டிழைக்கு 'ஜீஹீரி' (Jhuri) என்றும் பெயர்.

### இரிப்பட்டு.

இந்தியாவில் உண்டாக்கப்படும் இரிப்பட்டு 'அடகஸ் ரிசினி' (Attacus ricini) என்றும், 'அடகஸ் சிந்தியா' (Attacus Synthia) என்றும் இரு

பெரும் பிரிவினதாகும். இப்பூச்சிகள் வருடத்தில் ஏழுமுறை அடைகாக்கின்றன. இவ்வேழு பருவங்களுள்ளும் இரண்டே அதிகப் பலன் தருவன. இவ்விரு உற்பத்திகள் செப்டெம்பர் முதல் நவம்பர் வரையில் ஒன்றாகவும், பிப்ரவரி முதல் மார்ச்சு வரையில் ஒன்றாகவும் சீதோஷ்ண நிலை சாதகமாயிருக்கின்ற இவ்விரு காலங்களிலுமே நடைபெறுகின்றன. முதற் பருவத்தில் கூட்டப்பெறும் அடைகள் வெண்ணிறமுடன் தளர்வுடையனவாயிருக்கும். இரண்டாம் விளைவில் சேகரிக்கப்படும் கூடுகள் மிருதுவாகவும், இறுக்கமாகவும் பழுப்பு ஊதாவண்ண முள்ளதாயுமிருக்கும் இரிப்பூச்சிகளில் முதற் பிரிவினது †'எண்டி' (Castor) என்று பட்டுத் தொழிலாளர்கள் பரிபாஷையாக வழங்கும்—கிராமங்களின் சுற்றுப்பக்கங்களில் வளரும் மரங்களிலும், இரண்டாம் பிரிவினது 'கேசரு' என்னும் கிராமங்களுக்குப் பக்கங்களிலுள்ள காட்டு மரங்களிலும் வளரும் தன்மையன. 'எண்டி' என்பது இப்பூச்சிகளுக்கு நல்ல ஆகாரமாகவும் அதிக உபயோகமுள்ளதாயுமிருக்கின்றது.

(தொடரும்) S. V. வரதராஜையங்கார், உறையூர்.

# பூர்வகால நாடகங்கள்.

(129-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்தலையங்கத்தில் இந்நாடக வரலாற்றை நீ வரைவதன் நோக்கமென்னை? பண்டைக்கால நாடகங்களின் பான்மையை விளக்குவதால் இப்பொழுது நாமடையும் பயன் ஏதேனுமுளதோ? என்று இக்கட்டுரையை வரையுங்கால் எனது மனச்சாட்சி என்னை உசாவுகின்றது. அதற்கு இது வரையிலும் ஒருவாறு சாக்குச்சொல்லி வந்த யான், வேறு போக்கில்லாமல் இங்கு மறுமொழிபுகன்றே செல்லவேண்டியிருக்கின்றது. புராதன காலத்திய நமது நாட்டு நாடக இயலை விளக்கி, ஆங்கிலேயர்களாலேயே நாம் நாகரீகமாக நாடகம் நடத்தக் கற்றுக்கொடுக்கப்பட்டோமென்று சில ஆராய்ச்சிக்காரர்கள் வரையுந்தன்மையையும் அதனை ஆதரிக்கும் தன்மையையும் அன்பர்கள் மனத்தினின்றும் விலக்கி, இத்துணைச் சிறப்புடைய நமதுநாட்டு நாடகம், இப்பொழுது அடைந்துள்ள, ஜனசமூக முன்னேற்றத்திற்கு மாறுபாடான, அழகும் பயனுமற்ற நிலையை எடுத்துக்காட்டி, பண்டை முறைகளை வலியுறுத்தவேண்டுமென்பதே எனது கருத்து.

பெரும்பாலும் நிகழ் காலத்தில் நடைபெறுகின்ற நாடகத்தை, நாடகமென்று பழங்காலத்தவர் எப்பொருளில், எந்த விதத்தில் அதனைப்போற்றி வந்தனரோ அவ்வழியில் நினைப்பதற்குமில்லை. முற்காலத்தவர் இயற்றிவந்த புண்ணியச் சரித்திரங்களே இப்பொழுது அநேகமாக நடிக்கப்பெறுவதில்லை. அவ்வாறு வெகுசிலர் நடத்திவருவதாகக்கூறி முன்வருவாராயினும்,

† ஆமணக்கு மரம்' என்று தமிழ்நாட்டாரால் வழங்கப்படுவது.



அவை மேல் நாட்டு நாடக முறையிலேயே நடிக்கப்படுகின்றனவென்பதையவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். முக்கியமாக 'நாடகம்' என்ற சொல்லே இப்பொழுது வழக்கிலில்லா தொழிந்தது. 'டிராமா' என்ற சொல்லே நாடகமென்ற பதத்தின் போலியுருவங் கொண்டது. நாடகத் துண்டுவிளம்பரங்களைப் படிக்குங்கால் முன்பின் கேட்டிராத பலகதைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் நன்கு காணலாம். நாடக உலகத்திலும் நவீனன் புகுந்து கொள்ளையடிக்கின்றான். முதலாவதாக நடிகரிற் பலரும் எவ்வித பக்தியுடனும் நாடகத்தி லீடுபட்டிருக்கின்றார்களென்பது அவர்கள் ஒழுக்கம், நடையுடைபாவனை, கல்வி முதலியவற்றால் அறிய இயலவில்லை. முன்பு நாம் குறிப்பிட்ட சில முக்கியப் பிரமாணங்கள் இப்பொழுது நாடக இயலிலில்லையென்பது நாமுணர்த்தாமலே ஈண்டறியப்படும். அவற்றுள் மிகையஞ்சிச் சிற்சிலவற்றை மட்டும் இப்பொழுது எடுத்துரைப்போம். நவீன நாடகங்களில் முக்கியமாக நடிகர்கள் அந்தந்த வேடத்திற்குரிய உடுப்பும், உருவமுமுடையவராக மேடையிற் காணப்படுகின்றாரில்லை. உதாரணமாக, நாரத வேடந்தரிப்போர் சட்டை முதலியவை தரித்தும், அரசர் காற்சட்டை முதலியன உடுத்தியும் வருவதைக் காண்கின்றோம். முற்கால மன்னர்கள் உயர்ந்த பட்டாடை தரித்திருந்ததாகப் பூர்வகாலச் சரித்திரம், கற்சிலை நூலாதார சிலாசாசனங்கள் முதலியவற்றால் நாமறிகின்றோம். வெகு சமீபத்தில், ஆங்கிலேயர் இந்தியாவுக்குவந்த பின்னர், பதினாறும் நூற்றாண்டில் அரசாண்ட நாயக்க வம்சத்தாரின் சிலைகள் மதுரைமா நகரில் ஆடையுடனேயே அமைக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் பல சுதேச மன்னர்கள் பரம்பரை வழக்கத்தைக் கைவிடாது ஆடையே அணிந்து வருகின்றார்கள்.

நிற்க, நாடக இயலின் முக்கியமான சங்கீதம், சங்கை கீதமாகிவிட்டது. நரம்பு வாச்சியங்களோடு நாடகக்காரர்கள் ஒத்துழையாமை விரதம் பூண்டிருக்கின்றனர். மிருதங்கம்—மிருதுவான அங்கம் தன் விருதுகளுடனே 'தபலா' வாத்தியம் தாண்டவ மாடுகின்றது. நய நரம்பு வாச்சியங்களின் இனிமையை யடக்கி, 'ஹார்மோனியம்' என்ற கட்டைவாச்சியம் நாடகத்தைப் பொட்டையாக்கி விட்டது. தந்தி வாச்சியங்களை வாச்சியங்களைப் போல 'கார்வு, கமகம், ஸ்வரஸ்தானபேத நலம் முதலியன பொருந்துதலில்லாத இந்த நாத வாச்சியத்தை நாடிச் சங்கீத உலகமே இங்கிதமில்லாததாயிற்று. கணக்கெடுத்தால் நவீனன் புகுந்துள்ள வீடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு வீடுகளில் 'ஆர்மோனியம்' இல்லாதிராது. விவாகமாக வேண்டிய பெண்ணுக்கு 'ஆர்மோனியம்' வாசிக்கத் தெரியவேண்டியது 'வரதக்ஷிணை வாதனை உலகின்' ஓர் உற்ற அம்சமாம்.

இனிப் பாட்டுகளைக் கவனிக்குங்கால் செவிப்பூட்டு அவசியமெனப் பலர் உணர்ந்திருப்பர். அவை, இலக்கண வரம்பில்லாமலும், நயச்சொற்களின்மையாலும், ரஸம் நீக்கப்பெற்ற கருப்பஞ் சக்கையைப்போன்றேயிருக்கின்றன. பழங்காலச் சங்கீத இனிமை அவற்றுள் காண்டல் கடினமாயிருக்கின்றது. ஆலாபனங்களில் இராகங்கள் மாறி இந்துஸ்தானி—பியாக் வழியிலேயே தொடரப் பெறுகின்றன. சிலர் சமஸ்கிருத ஸ்லோகங்களைக் கூறுவதால் நாடகத்திற்குச் சிறப்பதிகமென்றெண்ணி உச்சரிப்பு பேதமாகப் பாடுகின்றனர். நாடகத்தில் வசனம் வியசனமான நிலையை யடைந்து, கொச்சை மொழிகள் கலக்கப்பெற்று, ஏதோ மாணவர் ஆசிரியரிடத்தில் மனப்பாடம் ஒப்பிப்பதைப்போன்ற ஒருவித நிலையை யடைந்துவிட்டது. வசனமழை நாடக இயலைவிட்டு நீங்க, வசனப்பிழை யதிகரிக்கின்றது. நாடகத்தின் நவீன முக்கியாம்சம் 'பணம் சம்பாதிக்கும் வழி'களில் ஒன்றாம்.

இத்தகைய நாடகங்கள், தேசத்தில் மக்களின் பக்தியையாவது, தேச நன்மையையாவது, சமூகத்தில் ஒழுக்கத்தை ஓங்கச் செய்வதாகவாவது எள்ளளவும் நாம் எண்ணமுடியாது. நாடகப் பழனத்திலுள்ள நற்பயிர்களை அநியாய வடிவான களைகள் உயர்ந்து வளர்ந்து ஒடுக்கிவிட்டன. இகலோக நரகத்திற்கே போவதாக எண்ணி நாம் தற்கால நாடகங்களைப் பார்க்கப் போகவேண்டியிருக்கின்றது. நம் நாட்டில் இத்தகைய நாடகங்கள் மிகுந்து மாதரின் ஒழுக்கநிலையைப் பலவகையிலும் பாதிக்கின்றதேயன்றி, தினையளவும், உயிரினும் பெரிதென ஓம்பப்படும் ஒழுக்கத்தை ஊக்குவதாயில்லை. நாடக மேடைகளில் நடக்கத்தகாத—மனிதத்தன்மைக்கு விரோதமான சில சம்பவங்களைப் பார்க்கின்றவர் மனம் புண்படாதிரார். ஆபாஸமான வார்த்தைகளை அளவுக்கு மிஞ்சிச் சிலர் மேடைகளிற் பேசிவிடுகின்றனர். லாகிரி மேருகிரியவ்வளவு உயர்ந்து நாடகசாலையின் நவநீதமாகிய நன்நாடக இயலை நாசமாக்குகின்றது. மனிதன் நல்வழிப்படும் வகையில் நாடகம் சிறிதும் பயன்படுவதாயில்லை. காதல் அம்சம் நாகரீக முறையில் பகிரங்க அளவுக்கு மேற்பட்டு நிற்கின்றது.

(தொடரும்) துத்துடநகர், ஆத்மநாதன்,

## விசூவியஸ் எரிமலையின் சரித்திரம்

(180-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்படி இந்த எரிமலையால் புதையுண்ட பட்டணங்களும், நாடகசாலை மண்டபங்களும் பல. 1748-ம் ஆண்டு பாம்பியை நகரை வெட்டிப் பரிசோதிக்க ஆரம்பித்து, வேலை முடிவுபெறாமலே கைவிடப்பட்டது. இவ்வேலையை இத்தாலிதேசத்து இராஜாங்கத்தார் 1861-ல் கைப்பற்றினர். இதில் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்த உரோமர்களுடைய வீட்டின் அந்தஸ்துகளும், தட்டுமுட்டுச் சாமான்களும், உடைகளும் ஆகிய இவற்றின் அறிகுறிகள் காணப்பட்டன. கி. பி. 63-79-லும் பூகம்பம் உண்டாகிப் பல நஷ்டங்கள் நேர்ந்தன.

1631-ல் நேர்ந்த பெருங் கொதிப்பாலேற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் அளவு கடந்தவை. 1766-1767-1779-1794-, 1822-1872 இந்த வருஷங்களிலும் விசூவியஸ் எரிமலையாலுண்டாகிய கெடுதிகள் அனேகம். இவ்வெரிமலையின் செயலை யறிய, சோதிமண்டபமொன்று, மலைச்சரிவில் கட்டப்பட்டுத் துரைத்தனத்தாரா லாதரிக்கப்பட்டு வருகின்றது.

எரிமலையின் விசேஷங்களைப் பார்க்கப் பிரயாணிகள் இங்கு அடிக்கடி வருகிறார்கள்; இவர்கள் மலையடிவாரத்திலிருந்து மேலே யேறிப்போக அநுகூலமில்லாத இடத்தில், கம்பி வட இருப்புப்பாதை யொன்றேற்பாடாயிருக்கிறது; போகிறவர்கள் உலைவாயின் அற்புதக் காட்சியைக்கண்டு களித்து வருகின்றார்கள்.

A. R. M. உடையப்ப செட்டியார், சொக்கநகரம்.




(234-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிராணாயாமம்.

பிராணாயாமம் செய்யும் காலத்தில் முன்சஞ்சிகையில் சொல்லியபடி அதை அனுஷ்டிக்க ஆரம்பித்த காலமுதல் ½-மணி நேரத்திற்குக் குறையாமல் காலை வேளையில் 5-மணியிலிருந்து 7-மணிக்குள்ளும், மாலையில் இரவு 9-மணியிலிருந்து 12-மணிக்குள்ளும் பிராணாயாமம் செய்யவேண்டும்.

பிராணாயாமம் செய்யும்காலத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விதிகளில் முக்கியமானது யாதெனில், பிராணாயாமம் செய்கின்றவர்கள் அமர்ந்திருக்கும் அறை அல்லது இடம் சந்தடியற்றதாயும், யாதொரு சப்தமும் அவர்களின் காதில் விழாதபடி அமைந்ததாயும் இருத்தல்வேண்டும்.

அவர்கள் பிராணாயாமம் செய்யும் காலத்தில் குறைந்த அளவாக ஆகாரத்தைப் புசித்தல் வேண்டும்; அதாவது வயிற்றில் 2-பங்கு ஆகாரமும் 1-பங்கு வாய்வும் தங்கும்படி ஆகாரம் உட்கொள்ளுதல் வேண்டும். சுவாசத்தை அடக்கும் காலத்திற் சேரும் வாய்வு சரீரத்தில் வியாபிக்கும் காலத்தில் வயிற்றின்கண் ஆகாரம் குறைந்திருந்தால் சரீரத்திற்கு ஆரோக்கியத்தை உண்டு பண்ணும்.

நாம், கும்பகத்தின் மூலமாகத் தடுக்கும் வாயுவானது, சுவாசக்குழாயின் வழியாக இரத்தத்துடன் கலந்து, இருதயத்திற்சென்று இரத்தநாளங்களில் புகுந்து நமது சரீரத்திலுள்ள 72000 நாடி நரம்புகளையும் ஒழுங்குபெற நடத்தி நமக்கு ஆரோக்கியத்தை எப்படி உண்டு பண்ணுகின்றதோ, அது போலவே நீனிப்பை, பெருங்குடல், சிறுகுடல் முதலியவைகளிலும் பிராணவாயு சென்று அப்பாகங்களையும் நல்ல நிலைமையில் வைக்கும். அதற்காகச் சில முறைகளை நாம் செய்யவேண்டும். அவையாவன:—

பிரதிதினமும் பிராணாயாமம் செய்து முடிக்கும் காலத்தில் நமது வலது கைப் பெருவிரலால் வலது காதைமூடி, ஆள்காட்டி விரலை வலது கண்ணின் மீதும், வலது நடுவிரலை வலது நாசியின்மீதும், மோதிர விரலை வலது மேல் உதட்டின்மீதும், சுண்டு விரலை வலதுகீழ் உதட்டின்மீதும் சேர்த்து, இடது பெருவிரலை இடது செவியிலும், இடது ஆள்காட்டி விரலை இடது கண்ணிமைமீதும், இடது நடுவிரலை இடது நாசியின்மீதும், இடது மோதிரவிரலை இடது மேல் உதட்டின்மீதும், இடது சுண்டு விரலை இடது கீழ் உதட்டின் மீதும் சேர்த்துச் சுவாசத்தைக் கூடுமானவரையில் நாசியின் மூலமாக இழுத்து முன் சொல்லியபடி சேர்த்துள்ள விரல்களை அழுத்தி மூடிக்கொண்டு, நாசின் மூலமாக இழுத்து அடக்கி வைத்திருக்கும் சுவாசத்தை நாம் உட்கொள்ளும்

ஆகாரம் செல்லக்கூடிய குழாயின் மூலமாக விழுங்குதல் வேண்டும். இந்தப்படி. 10-தடவை காலையிலும், 10-தடவை இரவிலும் செய்தல்வேண்டும். ஒவ்வொரு தரமும் சுவாசத்தை விழுங்கும் கால அளவு யாதெனில், ஒரு தடவை இழுத்த சுவாசத்தைச் சுவாசக் குழாயிலிருந்து தீனிக்குழாய் மூலமாக எவ்வளவு காலம் விழுங்கமுடியுமோ அவ்வளவு காலமே அதற்குரியதாம். இந்த அளவின்படிதான் 10-முறை செய்தல்வேண்டும்.

பிராண வாயுவானது சரீரத்தின் உட்சென்று 5-விதமான மாறுதல்களை அடைகின்றது. அவையாவன:— முதல் உட்சென்ற பிராணவாயு ஒன்று; அபானவாயு இரண்டு, வியானவாயு மூன்று, உதானவாயு நான்கு, சமானவாயு ஐந்து. இந்த 5-வாயுக்களும் ஆகாயத்தின் ஆதரவால் தம்தம் வேலைகளைச் செய்கின்றன. இவைகளில் நாம் கவனிக்கவேண்டியதும், சாதனம் செய்ய வேண்டியதும் ஆகிய வாயு பிராண வாயுவே. மற்ற வாயுக்களை நாம் கவனிக்க வேண்டிய அவசியம் கிடையாது. நாம் பிராணயாமம் பழகும் காலத்தில் மற்ற வாயுக்களின் தொழில்கள் நன்றாய் விளங்கும்.

பிராணயாமம் செய்வதால் சரீரபலம், மனோதிடம், வீரத்தன்மை, சுயமதிப்பு முதலிய அநேக பலன்கள் கிடைப்பதோடு இவை யாவையினும் சிறந்ததாய் உள்ள மனோஒருமை என்னும் ஒரு பெருத்த நன்மையும் நமக்குச் சித்திக்கும்.

முன் சொல்லியபடி வலது நாசியை மூடி இடது நாசியால் சுவாசத்தை இழுத்துக் கூடுமான வரையில் அடக்கி வலது நாசியால் மெதுவாக வெளிப்படுத்தும் சாதனத்தை ஆறுமாத காலம் பழகிய பின்னர், அதை வேறொரு விதமாக மாற்றி நாள் ஒன்றுக்குக் காலை 5-மணி, உச்சி 12-மணி, மாலை 6-மணி, இரவு 10-மணி ஆகிய நான்குகாலங்களில் மொத்தம் இருபத்தைந்து முறைக்குக் குறையாமல் செய்யவேண்டும். செய்யவேண்டிய விதம் எப்படியெனில், முன் சொன்னபடி வலது நாசியை மூடுதலைவிட்டு, இடது நாசியை இடது பெருவிரலால் மூடி, வலது நாசியால் சுவாசத்தை இழுத்து, முன்சொன்ன மந்திரமாகிய ‘ஓம் சோகங்’ என்பதைத் தியானித்து, இழுத்த சுவாசத்தை அடக்கி மீண்டும் இடது நாசியால் மெதுவாக வெளிப்படுத்தல் வேண்டும். இப்படி 6-மாதம் பழகினால் பிராணயாமம் செய்கின்றவனுடைய மனமானது ஓர் உன்னத நிலைமை அடையும். அன்றியும் அவன் சரீரத்தினின்று உண்டாகும் வியர்வையானது துர்நாற்றம் இன்றி நல்ல வாசனையோடு கூடியிருக்கும். அவன் எத்தகைய ஆகாரத்தை உட்கொண்ட போதிலும் அவனுடைய சரீரத்தினின்று உண்டாகும் வியர்வையானது நல்ல வாசனையோடு கூடியதாயிருக்குமே தவிரக் கெட்ட வாசனையுடையதா யிராது. இக்குறியே பிராணயாமம் கைவந்ததற்கு அடையாளமாம்.

எப்பொழுதும், பிராணயாமம் செய்பவர்கள் ஆகாரம் புசிப்பதற்கு ½-மணி அல்லது 1-மணி நேரத்திற்கு முந்தியே அதைச் செய்தல் வேண்டும். இதன்படி 6-வருஷம் பிராணயாமம் செய்பவர்களுக்கு ஒரு பெரிய சக்தி



சக்தி உண்டாகும். அச்சக்தியால் அவர்கள் உலகத்தில் அனேக அற்புத காரியங்களை நிகழ்த்தலாம். உலகிலுள்ள வியாதியஸ்தர்களுக்கு, இத்தகைய சக்திவாய்ந்தவர்களுடைய ஸ்பரிசத்தாலும், வாக்காலும் சகல வியாதிகளும் நிவர்த்தியாகும்.

நமது சரீரத்தில் 10 வாயுக்கள் இருக்கின்றன. அவையாவன:—

பிராணவாயு, அபானவாயு, சமானவாயு, உதானவாயு, வியானவாயு, நாகவாயு, கர்மவாயு, கிரிகோதரவாயு, தேவதத்தவாயு, தனஞ்செயவாயு என்பனவாம். இந்தப் பத்து வாயுக்களும் நமது சரீரத்தில் 10-பாகங்களில் அமர்ந்து தம் தம் தொழில்களைச் செய்கின்றன. இவற்றுள் ஐந்து வாயுக்கள் மாத்திரம் முக்கியமான இடங்களில் அமர்ந்திருக்கின்றன. அவை பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்பனவாம். இவற்றுள் பிராணவாயுவானது இருதயத்திலும், அபானவாயுவானது குதத்திலும், சமானவாயுவானது நாபியிலும், உதானவாயுவானது தொண்டையிலும், வியானவாயுவானது சரீர முழுவதிலும் இருந்துவருகின்றன. இந்த ஐந்து வாயுக்களையும் பெரியோர் ஞானேந்திரியம் என்று கூறுவார்கள். மற்ற ஐந்து வாயுக்களையும் கர்மேந்திரியம் என்று சொல்லுவார்கள். அவற்றுள் நாகவாயுவானது ஜீரணப்பையிலும், கர்மவாயுவானது நேத்திரத்திலும், கிரிகோதரம் என்னும் வாயுவானது பசிதாகங்களிடத்திலும், தேவதத்தவாயுவானது வாயினிடத்திலும், தனஞ்செயன் என்னும் வாயுவானது விக்கலிலும் இருந்து வருகின்றன. கடைசியில் சொல்லிய தனஞ்செய வாயுமாத்திரம், சரீரத்தினின்று சகல வாயுக்களும் நீங்கி, நாம் மரணமடைந்த காலத்திலும் நம்முடைய சரீரத்தினின்று அகலாமல் இருக்கும்.

இந்த வாயுக்களின் சொரூபமும், இவற்றின் தொழில்களும் பிராணயாமம் செய்கின்றவர்களுக்கே நன்கு விளக்கமாகும்.

இதுவரையில் சொல்லிவந்த அப்பியாசமானது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. பக்தி யோகம் முதலிய சாதனங்களைச் செய்ய இச்சிப்பவர்களும் இதனால் தம் மனத்தைத் தம் இஷ்டப்படி ஒருமைப்படுத்தி அவற்றிற்குமேலுள்ள சாதனங்களை அடையலாம்.

சரீரம் நாசமடையாதபடி அதை நெடுங்காலம்வரை உலகத்தில் வைத்திருக்க எண்ணமுடையவர்கள், தம் சரீரத்திலுள்ள ஒவ்வொரு வாயுவின் சாதனத்தையும் செய்தல் வேண்டும். மூலபந்தமும், பிரத்தியாகாரமும், தாரணையும் செய்தல்வேண்டும். மூலபந்தம், பிரத்தியாகாரம், தாரணை இவைகளைச் செய்கிறவர்களுக்குப் பசி, தாகம் இரா. பசி, தாகம் உண்டாகும் காலத்தில் வாயுவே பசியை அடக்கிவிடும். இத்தகையார்கள் மரணமடைவதில்லை. இத்தகைய சாதனம் கைவரப் பெற்றவர்களே கேசரி ... தகுதி உடையவர்களாவார்கள். இவர்கள் கேசரி ... அடைந்து பரமார்த்த தரிசனத்தை அடை... கைடார்கள்.

187486

ரிஸ தரிசன மாத்திரத்தினாலேயே மனிதர்க்குள்ள சகல வியாதிகளும் நீங்கி விடும். அத்தகையார்களே உடல் சித்திபெற்றவர்கள் எனப்படுவார்கள்.

**குறிப்பு:**— மூலபந்தமானது சித்த ஆசனத்தினால் கைவரும். சித்தாசனம் என்பது இரண்டு குதிக்கால்களையும் குதத்தில் சேர்த்து உட்காருவதாம்.

**பிரத்தியாகாரம்** என்பது யாதெனில், பிராணாயாமம் செய்தவர்கள் சுமார் 12-வருஷங்களுக்குப் பிறகு உப்பையும், சுக்கையும் பொடிசெய்து நாக்கில் தேய்த்து, ஒவ்வொரு காலையிலும் நாவை இழுத்து இழுத்துப்பழகி, அப்பழக்கத்தால் கொஞ்சக் காலத்தில் நாவானது நீண்டபிறகு அப்படி நீண்ட நாவை வளைத்துச் சுவாசக்குழாயை அடைத்துப்பழகி அச்சாதனத்தால் வாயுவை பிரம்மரந்திரத்திற்குச் செலுத்துதலாம். இத்தகைய சாதனம் செய்கின்றவர்கள் சம்பூரணமாகப். பிராணாயாமத்தைச் செய்து முடித்தவர்களாய் இருத்தல்வேண்டும்.

**தாரணை** என்பது சித்தாஸனத்திலிருந்து செய்யும் ஒருவகைச் சாதனமாம். தாரணைசெய்ய ஆரம்பிக்கும் புருஷர்கள் சுவாசத்தை 20-நிமிஷம் வரையில் அடக்கக்கூடிய சாதனத்தை உடையவர்களா யிருக்கவேண்டும். அன்றியும் அவர்கள் பிராணாயாமத்தின் பலத்தினாலேயே நீண்ட நாவைச் சுவாசக் குழாயில் செலுத்தி அடைத்துத் தம்முடைய மனத்தைப் புருவமத்தியில் நிறுத்திக் கர்ம வாயுவை பிரம்மரந்திரத்திற் செலுத்தல் வேண்டு r. இத்தகைய சாதனம் உடையவர்களே தாரணை கைவரப்பெற்றவர்கள். இதையே பெரியோர்கள் கேசரி முத்திரை என்று சொல்லுவார்கள். இம்முத்திரை கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் என்றும், காயசித்தி பெற்றவர்கள் என்றும், பிரம்மரந்திரத்தில் இருந்து உண்டாகும் ஆனந்தாமிர்தத்தை உண் காயகல்பத்தை அடைந்தவர்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இனி சந்தியாவந்தனம், காயத்திரி என்பவைகளை அடுத்த சஞ்சிகையில் விளக்கி வெளியிடுவோம்.

**குறிப்பு:**—சென்ற மாத சஞ்சிகையில் 'சோகங்' என்ற மந்திரமானது யாவற்றினும் சிறந்ததென்றும், அதன் இரகசியங்கள் அடுத்த சஞ்சிகையில் வெளியிடப்படும் என்றும் கூறியுள்ளோம். ஆதலின் அவற்றைப்பற்றியும் சிறிது விளக்குவாம்:—

நம் பெரியார்கள் ஒவ்வொரு மந்திரத்திலும் சில முக்கிய விஷயங்களை யடக்கியும், நம்முடைய சாதனங்களுக்குச் சாத்தியமாகும் வழியை ஏற்படுத்தியும் அக்ஷரங்களை அமைத்துள்ளார்கள். பா, ம, என்னும் எழுத்துக்கள் மேல் உதடு, கீழ் உதடு ஆகிய இரண்டின் சம்பந்தத்தால் உண்டாகும் சப்தங்கள். வ. என்னும் சப்தமானது மேல்வரிசைப் பற்களும் கீழ் உதடும் சேருதலால் உண்டாவது. ங. என்னும் சப்தமானது உள்நாக்கின் சம்பந்தத்தால் உண்டாகக்கூடியது. இங் என்னும் சப்தமானது உள்நாவால் சுவாசக்குழாய் அடைபட்டு உண்டாகும் சப்தம். ஆகையால் சுவாசத்தை அடக்கும் சாதனத்திற்கு உபயோகிக்கும் மந்திரங்களில் இங்என்னும் அக்ஷரத்தைக் கடைசியில் வகித்துள்ள மந்திரங்கள் சிலாக்கியமானவையாம். இவ்விஷயத்தை விரிக்கின் பெருகுமாதலின் இத்துடன் நிறுத்துகிறோம்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

---

# ஸ்ரீமதி சாரதாமணி தேவியார்.

(178-ம் பக்கத் தொடர்ச்சி.)

அம்மையாரை இத்தினங்களிலெல்லாம் ஸ்ரீராம கிருஷ்ணர் தம் அறையிலேயே வைத்து அவருக்குவேண்டிய மருந்துகளையும் ஆகாராதிகளையும் தாமே கொடுத்துவந்தார். அம்மையார் குணப்பட்டவுடன், அவர், கோயிலின் எல்லைக்குச் சிறிது தூரத்திலிருந்த ஓர் அறையில் தேவியாரைத் தம் தாயாருடன் வசித்துவரச் செய்தார். ஸ்ரீராம கிருஷ்ணருக்கும் அவருடைய தாயாருக்கும் அம்மையார் ஊழியஞ் செய்வதிலேயே தம் காலத்தைக் கழிக்கலானார். தேவியாரின் தகப்பனாரும் வந்து அவரிருக்கும் சந்தோஷ நிலைமையைக்கண்டு ஆனந்தித்துச் சென்றார். ஸ்ரீ இராம கிருஷ்ணர் தம் மனைவிக்கு ஒழிந்த வேளைகளில் ஆத்மார்த்தமான உபதேசங்களையும், கைக்கொள்ள வேண்டிய கடமைகளையும் சொல்லி வந்தார். இச்சந்தர்ப்பத்தில்தான் அவர் தம் மனைவிக்கு "சந்திரனானவன் குழந்தைகளுக்கெல்லாம் மாமனா யிருப்பதைப்போல் கடவுள் அனைவருக்கும் சமீபமாகவும் அன்புடையவனாகவு மிருக்கிறான். ஒவ்வொருவருக்கும் அவனிடம் முறையிட்டுக் கொள்ள உரிமையுண்டு" என்று கூறினார்.

வங்காளத்தில் குழந்தைகள் சந்திரனைத் தாயுடன் பிறந்த சகோதரன் அல்லது மாமா என்று அழைப்பது மரபு. அவர் தம்மிடம் வந்து கல்விகற்கும் மாணாக்கர்களுக்கு வாசா கைங்கர்யமாகப் போதிப்பதுடன் நின்று விடுவதில்லை; அவர்களை அருகில் வைத்துக்கொண்டு தம் அன்பினால் அவர்கள் மனதைக் கொள்ளைகொள்வது வழக்கம். அவர் அங்ஙனஞ்செய்து அதற்குமேல் அவர்களுக்கு முறையான கல்வியைக் கற்றுக்கொடுத்து அதன்படி செய்கையில் நடக்கிறார்களா என்று கவனித்து, தவறும் காலையில் அத்தவறுகளினின்று நீக்கி நல்வழியில் பிரவர்த்திக்கச் செய்வது வழக்கம். இதே வழக்கத்தை அவர் ஸ்ரீமதி தேவியார் விஷயத்திலும், கையாளவாரம்பித்தார். அவர் சிறுசிறு விஷயங்களையும் ஸ்ரீமதி தேவியாருக்கு மிகவும் உன்னிப்பாய்க் கற்றுக்கொடுத்து வந்தார். உதாரணமாக அவர் தேவியாரைப் பார்த்து 'நீ வண்டி அல்லது படகில் ஏறுவதா யிருந்தால் முதலில் ஏறிக்கொள். இறங்கும்போது கடைசியில் இறங்கு. வண்டி யல்லது படகில் சாமான்கள் மறதியாய் வைக்கப்பட்டு விட்டனவா என்பதையும் பார்த்துக் கொள்' என்று சொல்லி வந்தார்.

பிறகு ஷோடசி பூசையை (Shodasi Puja) நடத்த ஏற்பாடு செய்தார். இப்பூசை, நல்ல யௌவன கன்னிகை ஒருத்தியைத் தேவமாதாவாகக் கருதி வணங்கி வருவதாகும். அதன்படியே ஸ்ரீராம கிருஷ்ணர் தம் தேவியாரைப் பூசை புனஸ்காரங்களுடன் வணங்கினார். இங்ஙனம் அவ்வம்மையாரை அவர் [illegible]க் கொண்டிருக்கையில் தேவியார் பூசையின் பிற்பகுதியில் தம்மை

மறந்து சமாதிநிலையை யடைந்துவிட்டார். இதனால் அம்மையார் கர்வங் கொள்ளாது எப்போதும் போலவே இருந்தார் என்க.

க்ஷோதசி பூசை முடிந்த ஐந்துமாதங்கள்வரை தேவியார் தக்ஷிணேஸ்வரத்திலேயே யிருந்துவந்தார்; பிறகு ஸ்ரீராம கிருஷ்ணருக்கும் அவருடைய தாயாருக்கும் வேண்டிய பணிவிடைகளைச் செய்துவந்தார். பகற்காலத்தை அம்மையார் 'நகவத்' எனுமிடத்திலும், இராக்காலத்தை இராம கிருஷ்ணர் அருகிலும் கழித்துவந்தார். ஸ்ரீராம கிருஷ்ணர் இரவும் பகலும் சமாதியில் அழுந்தி விடுவது வழக்கம். அப்போது அவர் இறந்தவரைப்போல காணப்படுவார். இதைக்கண்டு தேவியார் பயங்கொள்வதுண்டு. இதையறிந்த ஸ்ரீராம கிருஷ்ணர் தேவியாரைத் தம் தாயாருடன் படுக்கும்படி செய்துவிட்டார். இங்ஙனம் பதினாறு மாதத்தைக் கழித்துவிட்டு ஸ்ரீமதி தேவியார் வங்காளி 1280-வருஷம் கார்த்திகைமாதத்தில் காமார்பூகூர் போய்ச் சேர்ந்தார்.

ஸ்ரீமதி தேவியார் இதைப்பற்றித் தம்முடைய பிற்கால வாழ்க்கையில் தம் மாணவிகளிடம் சொல்லியிருப்பதாவது:—

ஸ்ரீராம கிருஷ்ணர் என்னுடன் வசித்துக்கொண்டிருக்கையில் காட்டிய கடவுள் பக்தியை வெளியிட வார்த்தைகள் போதா. ஓர் இராத்திரி முழுமையிலும் பைத்தியக்காரனைப் போல் அவர் பேசிக்கொண்டிருப்பார்; தமக்குத் தாமாகவே சிரித்துக் கொள்வார்; கடவுளை நோக்கி அழுவார்; தம்மை மறந்து சமாதியில் மணிக் கணக்காகவும் ஆழ்ந்துவிடுவார். அவர் இங்ஙனம் எல்லாம் செய்தது எதைக்காட்டியது என்றால் கடவுளிடம் ஒன்றாய்க் கலந்திருந்ததைக் காட்டியதாம். அவர் இங்ஙனம் இருந்ததைக் கண்டு நான் பயமும் ஆச்சரியமுங் கொண்டு பொழுது எப்போது விடியப்போகிறதென்று பார்த்துக்கொண் டிருப்பேன். முதலில் எனக்குச் சமாதியைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஒரு தினத்தில் அவர் நீண்ட நேரம் வரைக்கும் சமாதியிலேயே இருந்து விட்டார். அதைக்கண்டு நான் பயமடைந்து கூச்சலும் அழுகையும் கொண்டவளாய் ஹிருதே என்பாருக்கு ஆள்விட்டனுப்ப அவர் வந்து ஸ்ரீராம கிருஷ்ணருடைய செவிகளில் கடவுளுடைய நாமங்களை உச்சரித்தார். உடனே அவர் சமாதி கலைந்து எழுந்தார். பின்னர் நான் பயப்படுவதை அறிந்து தம்மைச் சமாதியினின்று எழுப்புவதற்குரிய மந்திரங்களையும் நாமதேயங்களையும் எனக்கு அவர் சொல்லிக்கொடுத்தார். அது முதற்கொண்டு நான் அவருடைய சமாதி நிலையைக்கண்டு பயப்படுவதேயில்லை. அவரைச் சமாதியினின்று கலைக்கவேண்டுமானால் அவர் எனக்குச் சொல்லிக்கொடுத்த மந்திரங்களையோ உச்சரிப்புக்களையோ அவருடைய காதில் ஓதுவது வழக்கம். இங்ஙனம் செய்தால் அவர் சமாதியினின்று எழுந்து விடுவார். அவர் எனக்கு இலௌகீக சம்பந்தமான விஷயங்களையும் வைதீக சம்பந்தமான விஷயங்களையும் கற்றுக் கொடுத்தார். அவர் கடவுளை நோக்கிச் சிந்திப்பதனால் எய்தப்படக்கூடிய நலன்களையும் சமாதியை எங்ஙனம் அநுசரிப்பது என்பதைப் பற்றியும் பிரம்மம் என்பது யாது அதைத் தெரிந்துகொள்வதெப்படி என்பதைப் பற்றியும் எனக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொடுத்தார்.



ஸ்ரீராம கிருஷ்ணரைக்கண்டு தரிசித்துச் செல்வதற்காக அநேக ஸ்திரீகள் கல்கத்தாவினின்றும் தக்ஷிணேஸ்வரத்திற்குச் செல்வது வழக்கம். அவர்களுக்காகவும் ஸ்ரீமத் தேவியார் சமையல் செய்ய வேண்டிவரும். இங்ஙனம் பார்க்க வருகிறவர்களில் சிலர் விதவைகளாகவுமிருப்பார்கள். இவர்கள் மாமிசாகாரங்களை உட்கொள்ள மாட்டார்கள்; இவர்களுக்காக ஸ்ரீமதி தேவியார் அடுப்பங்கரையைத் தினம் மூன்று தடவை மெழுகிச் சாதாரண சமையலைச் செய்ய வேண்டி வரும்.

ஒரு சந்தர்ப்பத்தில் பானிஹாதி எனுமிடத்தில் விசேட வைஷ்ண உற்சவம் ஒன்று நடைபெற்றது. அதற்கு ஸ்ரீமதி தேவியார் போகப் பிரியப்படுகிறார்களாவென்று ஸ்ரீராம கிருஷ்ணர் தம்முடைய சிஷ்யைகள் மூலமாய்த் தேவியாரைக் கேட்டனுப்பினார். அதற்குப் பதிலளிக்கையில் தேவியார் ஏராளமான ஜனங்கள் உற்சவத்தைக் கண்டுகளிக்க வருவார்கள். ஆகையால் படகினின்றும் இறங்கி உற்சவங் காண்பது எனக்குக் கூடாத காரியமாகும். ஆதலால் நான் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இதைப் பற்றி ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு சந்தர்ப்பத்தில் பேசுகையில் 'அவள் அந்த உற்சவத்திற்கு வராமல் இருந்துவிட்டதே நல்ல காரியம்; ஜனக்கூட்டம் அதிகம். எல்லாரும் என்னுடைய பைத்தியக்கார சேஷ்டைகளையும் சமாதி நிலையையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவள் உண்மையிலே புத்தி சாலி,' என்று கூறினார். அத்துடன் நில்லாமல் ஸ்ரீமதி தேவியாரின் புத்தி சாதுர்யத்தையும் ஆசையின்மையையும் விளக்குவதற்காக என்னிடம் பற்றுக்கொண்ட மார்வாரி ஒருவர் எனக்குப் பத்தாயிரம் ரூபா கொடுத்து அதை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார். அது என்னுடைய இருதயத்திற்குள் ஈட்டியைப் பாய்ச்சியதைப்போல் ஆய்விட்டது. அதற்குமேல் நான் உலகமாதாவை நோக்கி 'என்னுடைய தாயே! கடைசியாக என்னைப் பரிசோதிக்கவா வந்துவிட்டாய்?' என்று கதறினேன். பிறகு என்னுடைய மனைவிக்கு இப்பணத்தின்மீது ஆசை இருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க அவளைக் கூப்பிட்டு, இந்த பக்தர் இப்பணத்தையெல்லாம் என்னை எடுத்துக் கொள்ளச் சொல்லுகிறார். எனக்கு இஷ்டமில்லை. ஆதலால் உனக்குக் கொடுத்துவிடப் பிரியப்படுகிறார். நீ ஏன் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது? உன்னுடைய அபிப்பிராயம் என்னை?' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீமதி தேவியார், 'பணத்தை நான் ஏற்றுக்கொள்வதும் தாங்கள் ஏற்றுக்கொள்வதும் ஒன்றேயாகும். ஜனங்கள் தங்களைத் தங்களுடைய துறவுக்காக மெச்சுகிறார்கள். ஆதலால் இப்பணத்தை எக்காரணம் பற்றியும் ஏற்றுக் கொள்ளக் கூடாது,' என்று கூறினார். இதைக்கேட்டு ஸ்ரீராம கிருஷ்ணர் பெரிதும் சந்தோஷமடைந்தார்.

இதைவிட அவா அறுத்தலுக்கும் புத்தி சாதுர்யத்திற்கும் வேறு என்ன உதாரணம் வேண்டியிருக்கிறது என்றார்.

(தொடரும்) A. துரை.

---

குறிப்பு:—விடுகவி விளக்கள் முதலிய நமது சஞ்சிகையில் பிரசுரிக்குமாறு சந்தாநேயர்களும் பிற நண்பரும் எழுதி வருகிறார்கள். இவற்றைப் பிரசுரிப்பதால் பலருக்குப் பதிலெழுதும் வேலை யதிகரிக்கின்றது. ஆகவே இவற்றைச் சிறிது காலம் நிறுத்தி வைத்திருக்கிறோம். ப-ர்.




## நிலக்கடலை.

நம் நாட்டில் விளையும் தைல வித்துக்களில் நிலக்கடலை என்பது ஒன்று.

இதற்கு மணிலாக்கடலை, மல்லாக்கொட்டையெனப் பெயர்கள் உண்டு. இது செடியின் வேரிற் காய்ப்பதால் வேர்க்கடலை என்று மற்றோர் பெயரு மிதற்குண்டு. இச் செடியின் பூ ஓர்வித மஞ்சள் நிறமுள்ளதாயிருக்கும். ஆற்காடு முதலிய சில ஜில்லாக்களிலும், சேலம் ஜில்லாவிற் சில பாகங்களிலும் கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நம் நாட்டார் இக்கடலையை முறைப்படி விருத்தி செய்வதற்குச் சிறிதேனும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லைபோலும்.

2. இந்திய வியவசாயிகள் இதைப் பயிர்செய்வதில் பேராசைக் கடலில் மூழ்கிக் கஷ்டமுற்று நஷ்டமாகிற கப்பலிலேறுகின்றனர்; விதைகளை அமிதமாக விதைத்து விடின் விளைவு அதிமாகுமென்று எண்ணுகின்றனர். ஓர் செடிக்கும் மற்றோர் செடிக்கு மிடையிலுள்ள நீளம் ஒரு அடிக்குக் குறையாதிருக்கும்படி வித்துக்களை விதைக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் வேர்கள் நிலத்தி லதிகமாகப் பாவவும், செடிக்குவேண்டிய உணவைக் கிரஹிக்கவும் ஏது உண்டு.

3. இந்நிலக்கடலையின் பயன் தேங்காயின் பயனைவிட அதிகமாயிருக்குமென்றே சொல்லலாம். நம் நாட்டில் இதன் பருப்பைச் செக்கிலிட்டு எண்ணெயெடுப்பதற்கும் நீரிட்டு வேகவைத்தும் மணலிட்டு வறுத்துந் தின்பதற்குமட்டும் நம்மவர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் தரிசாகவிருந்த நிலங்கள் யாவும் இக்கடலையே விதைக்கப்பட்டு வருகிறது. இதனால் அங்குள்ளவர்கள் அதிக ஊதியத்தை யடைந்திருக்கின்றனர். இக்கடலைச் செடி ஆகாயத்திலுள்ள நைட்ரஜன் என்னு மோர் சத்தைப் பூமிக்கு இழுத்துக் கொடுக்கிறது. ஆதலால் பூமி காரமுடையதா யிருக்கிறது. இச்செடிகளை வயல்களுக்கு எருவாகவும் கால் நடைகளுக்குத் தீனியாகவு முபயோகிக்கலாம்.

4. "வேர்க்கடலைப் பருப்பில் கொழுப்பு அதிகமாயிருக்கிறது. ஒரு இராத்தல் மாட்டு இறைச்சியிலுள்ள கொழுப்பைவிட ஒரு இராத்தல் கடலைப் பருப்பில் அதிகமான கொழுப்பிருக்கிறது; இதன் பாலைச் சுத்திசெய்து நோயாளிகளும் உட்கொள்ளலாம்; பசுவின் பாலுக்குச் சமானமாக இப்பாலைச் சொல்லலாம்; கடலைவித்துக்களால் ரொட்டி, உலோகங்களுக்கு மெருகு கொடுக்கும் வஸ்து (Metal polish), சவுக்காரம், தோர்சாயம், இங்கி (Ink), மெழுகுவர்த்தி முதலியவற்றையும், கடலையின்மேலுள்ள மெல்லிய சிவந்த தோலினால் க்வொய்னுவும் செய்கிறார்கள்," என்று ஓர் நண்பர் அறிவிக்கிறார்.

நம் நாட்டில் வியவசாயம் விருத்தியுற ஈசன் அருள் புரிவானாக.

K. S. வீராசாமி செட்டி, செவிந்திப்பாளையம்.

---

## அறிஞரின் அமுதமொழிகள்.

(235-ம் பக்கத் தொடர்ச்சி)

123. Rare is the union of beauty and virtue. *Juvenal.*
அழகும் நற்குணமும் எப்போதாகிலும் ஒரு சந்தர்ப்பத்தில்தான் ஐக்கியப்பட்டிருக்கும். (ஜுவினல்.)

124 We cannot learn men from books *Disraeli.*
மனிதர்களைப் புத்தகங்களைக் கொண்டு அறியமுடியாது. (டிஸ்ரேய்லி.)

125. The true University of these days is a collection of books. *Carlyle.*
இந்நாட்களின் உண்மையான சர்வகலாசாலை, புத்தகங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ளுதலாகும். (கார்லைல்.)

126. Endure, endure, be faithful to the end. *Hamilton King.*
நீ பொறுத்துக்கொள், பொறுத்துக்கொள், கடைசிவரை விசுவாசமாயிரு. (ஹாமில்டன் கிங்.)

127. England has educated us, has awakened in our minds ambitions which she is bound to satisfy. *Surendranath Banerji.*
இங்கிலாந்து நமக்குக் கல்வியை யூட்டியிருக்கிறது; நம்முடைய மனதில் எண்ணங்களை அது கிளப்பிவிட்டிருக்கிறது; அந்த எண்ணங்களைத் திருப்தி செய்வது அதனுடைய கடமையாகும். (சுரேந்திரநாத் பானர்ஜி.)

128. The greatest glory of a Ruler is to create popular government. *Solon.*
ஓர் அரசனுக்குரிய பெருத்த் புகழானது ஜனங்களுடைய சம்மதத்தைப்பெற்ற அரசாங்கத்தை ஏற்படுத்துவதாகும். (சோலன்.)

129. You cannot and ought not to emasculate a whole nation. *P. M. Mehta.*
அடியோடு ஓர் இனத்தவரின் ஆண்மையை நசுக்க முடியாது. அப்படிச் செய்வதுங் கூடாதகாரியமாம். (பி. எம். மேதா.)

130 Words are women, deeds are men. *Herbert.*
வார்த்தைகள் ஸ்திரீகள், செயல்கள் ஆண்கள். (ஹெர்பர்ட்)

131. Education is the chief defence of nations. *Burke.*
கல்வியானது இனங்களை முக்கியமாய்க் காப்பாற்றக் கூடியதாயிருக்கிறது. (பர்க்)

132. Evil must be conquered by good. *Amiel.*
கெடுதலையும் நல்லதால் ஜெயிக்கவேண்டும். (ஏமியல்.)

(தொடரும்.) A. P. இராமன், B. A.

# நற்போத மஞ்சரி.

1. அநுதினமுங் 'கடவுளை' மனவாக்குக் காயமெனுந் திரிகரண சுத்தியோடு வணக்கஞ் செய்யவேண்டும்!
2. பிரதிதினமுங் காலையில் படுக்கை விட்டெழுந்து 'ஈசுர நாமசங்கீர்த்தனம்' செய்யவேண்டும்!
3. கடவுளை வணங்கும்போது 'வேறெண்ணங்கள்' மனதில் எழும்படி இடங்கொடாது 'ஒரு நினைவாக' வணங்கவேண்டும்!
4. அன்புருவாய 'இறைவனை' அன்பு செலுத்தி 'அன்பால்' அறியவேண்டும்!
5. 'ஐங்குரவர்களிடத்து' வணக்கத்துடனும், விசுவாசத்துடனும் பட்சமாக நடக்கவேண்டும்!
6. 'பெரியோர்களிடம்' மரியாதையாகவும், வணக்கமாகவும் நடக்கவேண்டும்!
7. 'ஸத்ஜனசங்க' சகவாசஞ் செய்யவேண்டும்!
8. 'கெட்ட சகவாசத்தை' அடியோடு நீக்கவேண்டும்!
9. கற்கவேண்டிய 'விஷயங்களை' ஐயந்திரிபறக்கற்று அதன்படி நடக்கவேண்டும்.
10. மிதமிஞ்சி-அதிகமாக 'சாப்பிடுவதையும் பேசுவதையும்' நீக்கிவிடவேண்டும்!
11. 'வஞ்சகத்தை' அடியோடு நீக்கவேண்டும்!
12. 'நாணயத்தை' நன்றாகக் காப்பாற்ற வேண்டும்!
13. 'நல்வழி'யில் நடந்து "நல்லவன்" என்ற நற்பெயரெடுக்கவேண்டும்!
14. 'செல்வச் செருக்கென்பதை' 'அறவே' நீக்கவேண்டும்!
15. சகல ஜனங்களிடத்தும் 'பட்சமாக' இருக்கவேண்டும்!
16. மதக்குறியாகிய 'விபூதி-உருத்திராக்கம்' சரீரத்தில் அணியவேண்டும்.
17. ஒவ்வொரு நாளும் சுத்தநீரில் மூழ்கி, 'சுத்தமாய்' இருக்கவேண்டும்!
18. தேக சுகத்தைப்போல 'மனதை'யுஞ் 'சுத்தமாக' வைத்துக்கொள்ளவேண்டும்!
19. மனதிலெழுங் 'கெட்ட எண்ணங்களை' நீங்கி 'நல்லெண்ணங்களை' மனதிற் படியச் செய்யவேண்டும்!
20. வெளியிடங்களுக்குச் சென்று வீடுபுகின் 'கால் கழுவி'ப் புகவேண்டும்!
21. 'நித்திய கருமவிதி' களைத் தவறாது செய்யவேண்டும்!
22. 'தருமம்' செய்யுங் குணத்தை சதா கைக்கொள்ளவேண்டும்!
23. 'ஜீவ ஹிம்சை' யைக் கனவிலுஞ் செய்யாதிருக்கவேண்டும்!
24. 'புலாலுண்ணுந் தீய வழக்கத்தை' இன்றே இன்னே இப்பொழுதே நீக்கவேண்டும்!
25. 'புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு' அடிக்கடி சென்று தெரிசிக்கவேண்டும்!

க. அ. கந்தசுவாமி, தமிழ்மாணவர், குரும்பூர்.




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்

(237-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்தஸிங்:—"ஜெயமடையாவிட்டால் அது என் குற்றமே யாகும். ஆயினும் நான் ஜெயம்பெறுவே னென்றே நம்புகிறேன்; தாங்கள் அஞ்சவேண்டாம்" என்றான்.

பின் ஆனந்தஸிங் ஒரு விநாடியில் தன் மாறு உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு, தற்காப்பிற்கு வேண்டிய ஆயுதங்களையு மெடுத்துக்கொண்டு ஆயத்தமாய்ப் புறப்பட்டான். துப்பறிவோர் என்னென்ன உதவியோடு வெளியிற் புறப்படவேண்டு மென்பது அவனுக்கு நன்றாய்த்தெரியும். வழியில் அக்கன்னிகையின் படத்தை நன்றாய்க் கவனிப்போடு பார்த்து அவள் மிக்க வனப்புடையவ ளென்று வியப்படைந்தான்.

அவள் படத்தால், அவள் தந்தை கூறியபடி மிக்க புத்திசாலியென்றும், அறிவாளி யென்றும், யோக்கியமானவ ளென்றும், மனதறியக்குற்றம் செய்யாதவளென்றும் எவரும் அறிந்துகொள்ளலாகும்.

ஆயினும் ஒருபடம் எவ்வளவுதான் ஆளின் உருவத்தைப்போலவேயிருந்தாலும், அந்த ஆளின் நடவடிக்கையை யறியப் பூரணமாய் அப்படத்தை நம்பலாகாதென்று ஆனந்தஸிங் நன்கறிவான். அவன் அக்கன்னிகையின் உருவத்தை நன்றாய் மனதில் பதியவைத்துக்கொண்டு அப்படத்தை மடியில் வைத்துக் கொண்டான்.

---

### 3-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங் உலகநாதம் பிள்ளையின் மாளிகையெதிரில் வந்ததே அதை நன்றா யுற்றுநோக்கியபின் உள்ளே பிரவேசித்தான். அவன் நேராய்ப் புத்தகசாலைக்கு அழைத்துகொண்டு போகப்பட்டான். அவன் வீட்டின் வாசற்படியைக் கடந்தது முதல், அவன் கண்களும் செவிகளும் மிக்க ஜாக்கிரதையோடும் சுறுசுறுப்போடும் வேலை செய்துகொண்டிருந்தன. ஆங்காங்கு இருக்கும் சாமான்களில் ஒரு மிக்க-சிறு குச்சிகூட அவன் கண்களுக்குத் தப்ப முடியாது. அற்பசத்தமும் அவன் செவிகளுக்குப் புலப்படாமல் போகாது.

ஆனந்தஸிங் பாங்கிக்காரரைக் கண்டு கைகுலுக்கிக் கொண்டபின் அவரைநோக்கி "இதோ விருக்கிற பெட்டிதானே? இதன் பூட்டின் இரகசியமென்ன கூறும்" என்றான்.

உலகநாதர் உடனே அதைத் திறக்கவேண்டிய இரகசியத்தை விவரமாகக் கூறினார்.

ஆனந்த:—ஹா! மிக்க கஷ்டமானது.

உலக:—ஆம். நான் அதை யெழுதிவைத்துக்கொண்டு மிக்க வருத்தத்தோடு மனப்பாடம் பண்ணினேன்.

ஆனந்த:—"இனி தங்கள் மனைவியைக் காண[illegible]ல்லவா?" என்றான்.

உலகநாதர் உடனே அவனைத் தம் மனைவியி னறைக்கு அழைத்துச் சென்றார்.

ஆனந்தஸிங் அவர் மனைவியின் முகத்தைக் கண்டதே அவன் மனதில் மிக்க கலவரமும் வேதனையு மிருக்கிறதென்று அறிந்து கொண்டான். அவள் கண்கள் சிவந்து கறுத்த வளையங்கள் சூழ்ந்துகொண் டிருந்தன. ஆனந்த ஸிங் தன் மாறுவேடத்தைச் சற்றும் மறவாமல் வயோதிகனைப்போல் " அம்மா ! நான் உனக்குத் தொந்தரை கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டு கிறேன். என் அறுபதுவயதில் நான் உலகில் கண்ட அனுபவத்தால் எப் போதும் புத்திரியைப் பற்றித் தந்தையைவிடத் தாய்க்கே அதிகமாய்த் தெரி யும்." என்றான்.

அம்மாது தலையசைத்து "தாங்கள் கூறுவது உண்மையே. ஆனால் இச் சந்தர்ப்பத்தில் அல்ல. நாங்கள் ஒருவருக்கொருவர் உயிர்போல் நேசித்திருப் பவர்கள்; எங்களுக்குள் ஒரு இரகசியமும் கிடையாது. அந்தோ! என் அருமை மகளே ! எப்படி மனந்துணிந்து எங்களை யித்தகைய துயரத்தில் விட்டுவிட் டுச் சென்றாயோ?" என்றாள்.

ஆனந்தஸிங் அவளுடைய துயரத்தைப்பற்றிச் சந்தேகிக்கவில்லை. ஆனால் அவள் எங்களுக்குள் இரகசியம் ஒன்றுமில்லை யென்றது பொய்யென அவன் தெரிந்துகொண்டான். இச்சங்கதி யறிந்ததே இந்த விவகாரத்திற்கு உளவு இந்த வீட்டிற்குள்ளேயே யிருப்பது நிச்சயம் என்று தீர்மானம் செய்துகொண்டான். அதன்மேல் அம்மாதை நோக்கி,

"அம்மா! நான் மிக்க விசனப்படுகிறேன். தாங்கள் ஏதாவது விசேஷ மாய்க் கூறுவீர்களென்று நான் நம்பியிருந்தேன். இனிப் பெட்டியைச் சோதிப்பதில் ஒரு பயனுமில்லை" யென்றான்.

அவ்வாறு கூறிக்கொண்டே ஆனந்தஸிங் அவள் முகத்தைக் கீழ்நோக் காய்க் கவனித்துக்கொண்டே யிருந்தான். பெட்டியைப் பார்ப்பதில் பய னில்லையென்று அவன் கூறியதே அவள் முகத்தில் ஒருவிதச் சந்தோஷ முண்டாயிற்று. அதைக்கண்டதே ஆனந்தஸிங் "பெட்டியைப் பார்ப்பதில் பயனில்லை" யென்று கூறியவன் "அப்படியாயினும் நான் பார்ப்பதே நல மென்று நினைக்கிறேன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே யம்மாது துயரத்தோடு தன் கரங்களை நெறித்துக்கொண்டாள்.

ஆனந்தஸிங் "அப்பெட்டி யெங்கே?" என்றான்.

உலக:—"இதோவிருக்கிறது" என்று அங்கிருந்த பெட்டியைக் காட்டினார்.

ஆனந்தஸிங் அப்பெட்டியினருகிற் சென்று அதைப்பார்த்ததும் "ஆ இதுவும் இரகசியமான பூட்டே; இதன் இரகசியம் யாராருக்குத் தெரியும்?" என்றான்.

உலக:—"இதன் இரகசியம் என் மனைவிக்குமட்டுமே தெரியும். நான் சொல் வது உண்மைதானே ?" என்றார்.

அதைக்கேட்டதே அம்மாது மிக்க மனக்கலவரமடைந்து தன் ஆசனத் தில் சாய்ந்துவிட்டுத் தடுமாற்றத்தோடு ஆம் என்று தலை யசைத்தாள்.

ஆனந்த:—"அம்மா! எனக்காகத் தயவுசெய்து பெட்டியைத் திறக்கிறீர் களா?" என்றான்.

அம்மாதின் கரங்கள் நடுங்கினாலும் அவள் சற்றும் தவறின்றிப் பெட்டி யைத் திறந்தாள்.



பிறகு ஆனந்தஸிங்:—"அதில் தாங்கள் வைத்தவை யனைத்தும் அப்படி யப்படியே இருக்கின்றனவாவென்று பாருங்கள்—" என்றான்.

அம்மாது சற்றுநேரம் பதில் கூறாமல் இருந்தாள். அவள் மனதைத் தைரியம் செய்துகொள்கிறாள் என்று ஆனந்தஸிங் தெரிந்துகொண்டான்.

சற்று நேரங்கழித்து அம்மாது "யாவும் அப்படியேதான் இருக்கின் றனவென்றே நம்புகிறேன். ஆயினும் நிச்சயமாய்க் கூறமுடியாது" என்றாள்.

ஆனந்தஸிங் "இவள் மிக்க முன்யோசனை யுடையவள்" என்று தனக் குள்ளேயே கூறிக்கொண்டு, "இரும்புப்பெட்டியின் பூட்டைத்திறக்கும் இரக சியம் எழுதப்பட்டிருக்கும் ஸீல் செய்த கடிதவுறை யிருக்கிறதே அதைத் தயவுசெய்து எடுத்துக் காட்டுங்கள்" என்றான். அம்மாது உடனே தன் கடியாரச் சங்கிலியில் இருந்த ஒரு சிறிய பொன் சாவியை யெடுத்துப் பெட் டியி லிருந்த ஒரு அறையைத் திறந்து அதிலிருந்த ஒரு சீல்செய்த கடித வுறையை யெடுத்து ஆனந்தஸிங்கிடம் கொடுத்தாள்.

ஆனந்தஸிங் அந்த உறையை யெடுத்துக்கொண்டு, சாளரத்தினருகிற் சென்று தன் முகத்தை யவர்கள் யாரும் காணாவண்ணம் மறைத்துக் கொண்டு, அம்மாதின் முகத்தைமட்டும் தான் கள்ளப்பார்வையாகப் பார்த்துக்கொண்டே அக்கடித உறையை நன்றாய்க் கவனித்தான்.

ஆனந்தஸிங் அக்கடித உறையைப் பார்த்தவுடனே அது யாராலே திறக் கப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொண்டான். ஆனால் அவன் அதைப்பற்றி வியப்படையவில்லை. ஏனெனில், அப்படி நடந்திருக்குமென்று அவன் எதிர் பார்த்திருந்தான். தான் ஏதோ ஆச்சரியமான விஷயத்தைக் கண்டதுபோல் திடுக்கிட்ட பாவனையாய், "ஹா! இதென்ன இதில்!" என்றான்.

இதைக்கேட்டதே அம்மாதின் முகத்தில் பெருந்திகிலும் கலவரமும் தோன்றின. ஆனந்தஸிங் ஏதோ தவறிவிட்டவன்போல், "இல்லையில்லை; இது யாராலேயோ திறக்கப்பட்டதுபோல் தோன்றியது. நான் தவறாய் நினைத்து விட்டேன். அப்படியே யிருந்திருந்தால் அது தங்கள் குமாரத்தி நிரபராதியென்று நிரூபித்து விட்டிருக்கும். அவள் அப்பணத்தைக் களவாடி யிருப்பாளென்று என்னால் நம்ப முடியாது" என்றான்.

உலகநாதம் பிள்ளையின் மனைவி மேற்கண்ட விஷயத்தைக் கேட்டதும் அடக்கமுடியாத மனோவேதனையடைந்து தன் கரங்களை நெறித்துக் கொண்டு மிக்க வியாகூலத்தோடு "அவள் செய்திருக்கமாட்டாள். அவள் நிரபராதி" என்றாள்.

ஆனந்தஸிங் துயரத்தோடு உலகநாதரை நோக்கி,

"இங்கு என்னால் அறிந்துகொள்ளக் கூடியது ஒன்றையும் காணோம், நாம் மறுபடி உமது பெட்டியைப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு அவர் மனைவியை நோக்கி, தங்கள் துயரத்தோடு நான் தங்களுக்குத் தொந்திரை கொடுத்ததற்காக மன்னிக்கக் கோருகிறேன்" என்றான்.

ஆனந்தஸிங்கும் உலகநாதரும் பெட்டியின் எதிரில்சென்று நின்றதே ஆனந்தஸிங் அவரை நோக்கி, "தங்கள் மனைவி தன் புத்திரிமேல் மிக்க அன்புகொண்டிருப்பதாகத் தெரிகிறது" என்றான்.

அச்சமயம் உலகநாதர் முகத்தில் சற்று சந்தோஷக்குறி தோன்றிய தென்று ஆனந்தஸிங் மனதிற்பட்டது. அவர் ஆனந்தஸிங்கை நோக்கி "ஆம்; அவர்களுக்குள் இருக்கும் அன்பு மிக்க வியப்பானதே. இதில் ஏதோ மிக்க ஆழ்ந்த மர்மம் இருக்கிறது" என்றார்.

(தொடரும்) ஆரணி-குப்புசாமி முதலியார்.

## விநோதம்.

(1) எல்லா விரதத்திலும் புரட்டாசிமாத விரதம் மிகச்சிறந்ததாம். புலாலுண்போரும், அந்த மாதமுழுதும் புலாலை மறுத்து விரதமிருப்பதுடன், அம்மாதத்தில் வருகிற 5. சனிக்கிழமைகளையும் சிறப்பாகப் போற்றி, அம்மாதத்தைப் பரிசுத்த மாதமாகக் கொண்டாடி வருவது இந்தியா முழுதும் நன்கறியும். ஆனால், சில "குட்டிப் பக்தகோடி" களும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கப் புறப்பட்டுவிட்டார்களாம். இவர்களுடைய விரதமுறை மிகச் சிறந்ததாம். இவர்களிற் சிலர் புரட்டாசி பிறப்பதற்கு முந்திய ஏழுநாளும், புரட்டாசி முடிந்த பிந்திய ஏழுநாளும் அதிகமாய்ப் புலாலை உண்டு புரட்டாசி மாதத்தைப் பரிசுத்தப்படுத்துகிறார்களாம்; இன்னும் சிலர் ஐப்பசி பிறந்ததும் கொலைசெய்து உண்பதற்காகப் புரட்டாசிமீ 22-ம் தேதியிலே ஆட்டுக் குட்டியை விலை மலிவாக வாங்கி, வீட்டில் கட்டி வளர்த்துப் புரட்டாசி மாதத்தைப் பரிசுத்தப் படுத்துகிறார்களாம். வேறு சிலர் புரட்டாசி மாதமுதல் சனிக்கிழமை விரதத்தின் போதே கோழிக்குஞ்சுகளை வாங்கி, வளர்த்து அம்மாதத்தைப் பரிசுத்தப் படுத்துகிறார்களாம். இக் குட்டி பக்தகோடிகளின் விரதமுறைகள் நாளுக்கு நாள் அதிகரிக்குமானால், புரட்டாசி மாதம் மிக்க விரைவில் பரிசுத்தப் பட்டுப் போகுமாம்.

(2) "மேல்நாட்டுக் கைத்தொழில்களை ஒழிக்கவும், நம்நாட்டுக் கைத்தொழில்களை வளர்க்கவும் ஒரே ஒரு வழியைத் தவிர வேறு வழியில்லை" யென்று கண்டுபிடித்த பிறகுதான் நம்நாட்டு மக்கள் சீட்டு விளையாடும் வழக்கத்தைக் கையாண்டு வருகிறார்களாம். இன்னும் மண்பாண்டம் செய்பவர்களும், பித்தளைப் பாத்திரம் செய்பவர்களும், நெசவுத் தொழில் செய்பவர்களும், கதர் ராட்டினம் சுற்றுபவர்களும் சீட்டு விளையாட ஆரம்பித்து, நேரத்தையும், மூளையையும் சீட்டுக்கட்டுகளிலேயே செலுத்திவிட்டால், நம்நாட்டுக் கைத்தொழில்கள் மிகவிரைவில் வளர்ந்து விடுமாம். சீட்டு விளையாட்டினால் ஒரு நாளைக்கு இரண்டு சீட்டுக் கட்டுகள் அழுக்காகி வருவதினால், மேல்நாட்டிலிருந்து மாதம் 1-க்கு இருபது கப்பல் சீட்டுக்கட்டுகளை மட்டும் இந்தியாவுக்கு அனுப்பி, சீட்டு இயந்திரசாலைகளையெல்லாம் மூடிவிடுவார்களாம். இந்திய நாட்டு மக்களுக்கு நல்ல சமயத்தில் நல்ல யோசனைகள் தாம் தோன்றியிருக்கின்றனவாம்.

(3) ஒரு ரோட்மேஸ்திரி வர்ணவேலைக்காரனிடம் சென்று "ரோட் ரிபேரில் இருக்கிறது" என்று ஒருபலகையில் எழுதிக்கொடுக்கும்படி மிக அவசரமாய்க் கேட்டானாம். அதற்குப் பலகை எழுதுவோன் "என்ன மேஸ்திரியாரே! மூன்று மாதங்களாய் ரோட்ராமத்து வேலைசெய்கிறீர்களே; இன்றைக்குவந்து பலகை எழுதும்படி சொல்லுகிறீர்களே" என்று கேட்டானாம். அதற்கு மேஸ்திரி "நாளைக்குத்தானே இஞ்சினீர் வருகிறார்" என்று பதில் சொன்னானாம்.

(4) புதிதாகவந்த ஸ்டேஷன் மாஸ்டர் ஒருவர் பழைய ஸ்டேஷன்மாஸ்டரை நோக்கி "ஏன் சார்! நேரமாகிறதே. என்னிடம் சார்ஜ் ஒப்புக்கொடுத்து விட்டுப்போகலாமே" எனக்கூறினாராம். அதற்குப் பழையஸ்டேஷன் மாஸ்டர் புதிதாகவந்தவரிடம் ஒருகடிதத்தைக் கொடுத்து, எழுதிக்கொள்ளச் சொல்லி, "பரங்கிக்காய்க்கு 0—0—3, வெற்றிலைக்கூடைக்கு 0—0—6, இலைக்கட்டுக்கு, 0—0—8, அரிசிமூட்டைக்கு 0—0—9, ஆட்டுக்கல்லுக்கு, 0—1—0, சின்னபார்சலுக்கு, 0—1—0, பெரியபார்சலுக்கு, 0—2—0, புகையிலைமூட்டைக்கு, 0—3—0, ஜவுளிபேலுக்கு. 0—4—0, என்று வேதவேகமாய்க் கூறினாராம்.

உ. அ. பெ. விசுவநாத பிள்ளை, திருச்சிராப்பள்ளி.



## வர்த்தமானப்பகுதி

**சென்னையில் காங்கிரஸ் மகாநாடு:**—டை மகாநாடு டிசம்பர் மாதம் 26, 27, 28-ந் தேதிகளில் கூடும். ஆனால் அதற்கு முன்னரே விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் கூடும். காங்கிரஸ் மகாநாட்டைப் பார்க்க வருகிறவர்களுக்கு 20, 15, 10 ரூபாய் வீதம் டிக்கட்டுகள் கொடுக்கப்படும். மகாநாட்டில் தலைவர்கள் பேசுகிற பேச்சு எல்லோருக்கும் கேட்குமாறு ஒலி பெருக்கும் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும்.

* * *

**ஆகாய விமானிகளுக்கு வைத்தியசாலை:**—பக்கிங்ஹாம்ஷயரிலுள்ள ஹால்டன் என்னுமிடத்தில் கட்டப்பட்ட ஆகாய விமான வைத்திய சாலையை மேரி இராஜகுமாரியார் திறந்து வைத்தார். அச்சந்தர்ப்பத்தில், ஆகாய விமான காரியதரிசியாகிய சர் சாமுவேல் ஹோர், உலகத்திலுள்ள ஆகாய விமானச் சாலைகளில் பெரிதானது ஹால்டன் ஆகாய விமானச்சாலையாம் என்று குறிப்பிட்டதுடன், அவ்விடத்தில் கட்டப்பட்டுள்ள ஆகாய விமான வைத்தியசாலை அரசாங்க ஆகாய விமான சாலைகளின் பிரதம வைத்திய சாலையா யிருக்குமென்றும் குறிப்பிட்டார். அவ் வைத்திய சாலையில் 204-நபர்களுக்கு வேண்டிய படுக்கை முதலானவைகள் போடப்பட் டிருக்கின்றன. இவ்வைத்தியசாலையில் ஹில்டன் என்னுமிடத்திய ஆகாய விமானிகளல்லாமல் தேசத்தின் பல பாகங்களி லிருந்து வரும் ஆகாய விமானிகளும் கவனிக்கப்படுவார்கள். சமுத்திரத்திற்கு அப்பாலிருந்துவரும் ஆகாய விமானிகளுக்கும் வைத்தியம் இவ்விடத்தில் செய்யப்படும். உலகத்திலுள்ள எல்லா வேலைகளைக் காட்டிலும் ஆகாய விமான வேலைக்கு நல்ல மாதிரியான வைத்திய உதவியும் ஆபரேஷன் உதவியும் இன்றியமையாதனவா யிருக்கின்றன. ஹால்டன் வைத்திய சாலையில் ஆகாய விமானிகளுக்குரிய எல்லாவித சௌகரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

* * *

**இந்தியாவும் ஆகாய விமான விருத்தியும்:**— இந்தியாவில் ஆகாய விமானப் பிரயாணத்தை விருத்தியாக்குவதற்காக, இந்தியா அரசாங்கத்தினர் இன்னுஞ் சில சௌகரியங்களைச் செய்து வருகின்றனர். காரச்சி ஆகாய விமான சாலையில் காலக்குறி அறியும் விற்பன்னராயிருக்கும் டாக்டர் பி. என். பானர்ஜி எம். எஸ். ஸி. பி. எச். டி. என்பாரை இந்தியா அரசாங்கத்தார் ஐரோப்பாவுக்கு அனுப்பி அவ்விடத்தில் காலக்குறி அறியும் சாஸ்திர சம்பந்தமாக அநுபவம் பெற்றும், அதனால் இந்திய ஆகாயவிமான விருத்திக்குரிய சௌகரியங்கள் ஏதாயினு மிருக்கிறதாவென்று பார்த்தும் வரும்படி செய்திருக்கிறார்கள். டாக்டர் பானர்ஜி என்பார் இங்கிலாந்துக்குச் சென்று அவ்விடத்தினின்று நார்வேக்குச்சென்று அறிஞர் பிஜர்கினீஸ் காலக்குறி அறியும் சாலையில் வேலைசெய்வார். அவர் ஜெர்மனிக்குச் சென்று பெர்லின், லிண்டன்பர்க் என்னுமிடங்களில் ஆகாயவிமானவிருத்தி சம்பந்தமாகச் செய்யப்பட்டுள்ள காரியங்களைக் கவனித்து வருவார்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரபவ௵ தைமூ—கலியுகாதி 5029, சாலிவாகனம் 1850,
பசலி 1337—கொல்லமாண்டு 1103—ஷிஜரி 1346,
இங்கிலீஷ் 1928௵ ஜனவரிமூ—பிப்ரவரிமூ

| தை௴ | ஜனவரி௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | சனி | சப்17-5 | அஸ்12-43 | மர60 | உத்திராயணபுண்யகாலம், காழிகை 9-24 க்குமேல் சங்கராந்தி பண்டிகை |
| 2 | 15 | ஞா | அ23-30 | சித்20-3 | சித்60 | கரிநாள், மாட்டுப் பொங் |
| 3 | 16 | திங் | நவ30-5 | சுவா27-43 | அ27-43ம | கரிநாள் [கல் |
| 4 | 17 | செவ் | தச36-13 | விசா34-58 | ம34-58சி | தானியம் செலவிட |
| 5 | 18 | புத | ஏ41-30 | அனு41-25 | சித்60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 6 | 19 | வியா | து45-25 | கேட்46-38 | பி46-38சி | வியாதியஸ்தர் குளிக்க |
| 7 | 20 | வெ | திர-4745 | மூல50-15 | அ50-15பி | பிரதோஷம், விவாகம் |
| 8 | 21 | சனி | சது48 33 | பூரா52-23 | சித்60 | மாசசிவராத்திரி |
| 9 | 22 | ஞா | ●47-55 | உத்52-55 | அமி60 | தை அமாவாசை |
| 10 | 23 | திங் | பிர45-35 | திரு52-10 | அ52-10சி | கதிரறுக்க, மாடுவாங்க |
| 11 | 24 | செவ் | துதி42-18 | அவி50-23 | சி50-28ம | |
| 12 | 25 | புத | திரி38-13 | சதை47-53 | சி47-53அ | |
| 13 | 26 | வியா | சது33-33 | பூரட்44-38 | சித்60 | |
| 14 | 27 | வெ | பஞ்28-35 | உத்41-23 | சி41-23அ | |
| 15 | 28 | சனி | சஷ்23-23 | ரேவ37-55 | ம37-55சி | |
| 16 | 29 | ஞா | சப்18 18 | அஸ்34-33 | சித்60 | |
| 17 | 30 | திங் | அ13-10 | பர31-15 | சி31-15ம | |
| 18 | 31 | செவ் | நவ8-20 | கிரு✕28-8 | சி28-8அ | |
| 19 | 1 | புத | தச3-43 ஏகா59-23 | ரோ25-20 | சித்60 | |
| 20 | 2 | வியா | து55-25 | மிரு22-50 | மர60 | வைஷ்ணவ,மத்வ,ஏகாதசி |
| 21 | 3 | வெ | திர52-3 | திரு20-45 | சித்60 | பிரதோஷம், காதுகுத்த |
| 22 | 4 | சனி | சது49-30 | புன19-20 | சித்60 | கோடியுடுக்க, கதிரறுக்க |
| 23 | 5 | ஞா | ○47-38 | பூசம்18-40 | சித்60 | பௌர்ணமி, தைப்பூசம், புஷ்யஸ்நானம் |
| 24 | 6 | திங் | பிர47-10 | ஆயி19-5 | சித்19-5ம | நவக்கிரக சாந்திசெய்ய |
| 25 | 7 | செவ் | துதி47-55 | மக20-38 | சித்60 | தானியம், களஞ்சியம் சேர்க்க [எழுத |
| 26 | 8 | புத | திரி50-8 | பூரம்23-35 | அமி60 | மாடுவாங்க, சித்திரம் |
| 27 | 9 | வியா | சது53-55 | உத்28-3 | ம28-3சித் | தானியம் செலவிட |
| 28 | 10 | வெ | பஞ்58-55 | அஸ்33-53 | அ33-53சி | சுபமுகூர்த்தம் செய்ய |
| 29 | 11 | சனி | சஷ்60 | சித்40-45 | ம40-45அ | திருதினஸ்பிருக் |
| 30 | 12 | ஞா | சஷ்5-3 | சுவா48-23 | சி48-23ம | கும்பரவி நாழி-37-3-வி, * மாசி௴ சப்தமிதிதி |


| | | | |
|---|---|---|---|
| குரு | | ராகு | |
| சூரி புத | 9௳ தனு-சுக் 16,, கும்-புத | | |
| செ | சுக்-ச கேது | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.


கடிதம் எழுதினல் அழகிய காலண்டர் இனும்.




1928௵ ஜனவரி௴ 31௳க்குள் தங்களுக்கு தெரிந்த கல் நகை வேலைசெய்யும் ஆச்சாரிகள் விலாசங்களும் — ஷராப், நகை வியாபாரிகளின் விலாசங்கள் விவரமாய் தெரியப் படுத்துபவர்களுக்கு எமது 1928௵த்திய இரண்டு வர்ணங்களில் 14½" × 9½" சைஸ்உள்ள 12தாள்களில் இங்கிலீஷ், தமிழ் ௵ ௴ ௳ முக்கிய பண்டிகைகள் முதலியன பிரிண்ட் செய்த அழகிய காலண்டர் இனமாய் அனுப்பப்படும்...

புஷ்பராகம், செயற்கை புஷ்பராகம், இமிடேஷன் புஷ்பராகம், இமிடேஷன் சிகப்பு பச்சை, நீலம் முதலிய ஆபரணங்கள் டங்கிய கேட்லாக் தேவையுள்ளவர்களுக்கு அனுப்பப்படும்.

பி. கோபால் ஸ்வாமி நாயுடு & சன்ஸ்,
ஆபரணக் கற்கள் வியாபாரம்,
ஆலந்தூர் போஸ்ட், (மதராஸ் சமீபம்.)

பத்திரிகையின் பெயரைக் குறிக்கவும்.



## நோயாளிகளுக்கு சுகம் கொடுங்கள்.

நம்மால் நேசிக்கப்பட்டவர்கள் வியாதியாய்ப் படுத்தால் அன்னவர்களைக் கவலையுடன் சௌக்கியப்படுத்துவது நம்முடைய கடமையும் சுதந்திரமுமாகும்.

கணவனோ, மனைவியோ, குழந்தைகளோ, தாயோ, தகப்பனோ, சகோதரியோ, சகோதரனோ, அல்லது உத்தம நண்பனோ எப்பொழுதாகிலும் ஒருவராகவோ, பலர்களாகவோ வியாதியாய்ப் படுத்தால் மற்றொருவருடைய உதவி அவர்களுக்கு அவசியம் வேண்டியிருக்கிறது. இப்படி நேர்ந்தால் ராபின்சனுடைய பேடண்ட் பார்லியை பார்லித் தண்ணீராகவோ கஞ்சியாகவோ செய்து இலேசான ஆகாரமாக சாப்பிட்டால் மிகுந்த நன்மையைத்தரும். இலகுவில் ஜீரணிக்கக்கூடியதாயும், உடம்புக்கு போஷிப்பைத் தருவதாயும், சுறுசுறுப்பு உண்டுபண்ணுவதாயும், அதேசமயம் இளைப்பாறுதலைக் கொடுக்கக் கூடியதாயும், தாகத்தைத் தணிக்கின்றதாயும், சாப்பிட ருசியுள்ளதாயு மிருப்பதால், நோயாளிகளின் அறைகளுக்கு அது அத்தியாவசியமானது. முக்கியமாய் ஜுரங்கண்டவர்கள் சாப்பிட்டால், மற்றவைகள் வாந்தியாகிவிட்டாலுங்கூட அது வயிற்றிலேயே தங்கியிருக்கும்.

ஆனால் அது ராபின்சனுடைய பேடண்ட் பார்லியா யிருக்கவேண்டும். தூசி நிறைந்ததும், அசுத்தத்தை மறைப்பதற்காக சீமைச் சுண்ணாம்புடன் கலந்த சாதாரண பார்லி நொய்யை விலக்குங்கள். எப்பொழுதும் ராபின்சனுடைய பேடண்ட் பார்லியையே கேளுங்கள். அது கையினால் தொடாமற் செய்யப்பட்டது.



**ROBINSON'S PATENT BARLEY**

**ராபின்சனுடைய பேடண்ட் பார்லியைக் கேளுங்கள்.**

---

## கணித ஜோதிடம்.

பரித கணிதப்படி கணனஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூ. 2. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதியனுப்ப ரூ. 1. விவாக விஷயம் ரூ. 1. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும் புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிட நூற்கள் பல உளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப் பலன்களா யிராமல் விவரமாகவும் சாஸ்திரீயமாகவு மிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

---

**உண்ணும் உணவிற்கு ஜீரணதாரமாயுள்ளது எது?**

முதல்தரமான—A Quality

## பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததை தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும்.

வேண்டுவோர்கள் தெரிவித்து வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2. }
½-இராத்தல் ரூபா 1-1-0. } தபாற்கூலி வேறு.

## நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்.

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.

ஜகசீலமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல் போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும் சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு, வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0



விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## காந்தசத்தி வைத்திய சாத்திரம்.
(தமிழ்ப் பதிப்பு)

இப்புஸ்தகமானது, ஔஷதப் பிரயோக மின்றிப் பிணிகளைத் தீர்க்கும்




சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்கமடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் தீர்த்துக் கொள்ளக்கூடிய பல வழிகளையும் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பல வியாதிகளையும் காந்த சத்தினால் தீர்க்கும் மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது, யாவரும் தெரிந்து கொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி



சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். விலை ரூபா 2—0—0

இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167,
மதராஸ்.

---

# ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

பெரிய எழுத்து ஐதீகப் படத்துடன்.

இது, இராமாயணம் உத்தரகாண்டத்திலுள்ளது; இதில் இராமாயண கதை முழுவதும் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதோடு, இராவண சம்மாரம் முடிந்தபின் நடந்த கதைகளெல்லாம் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன; குபேரன் கதை, அசுரர் உற்பத்தி, மாலியவான் வரலாறு, இராவணன் முதலியவர் உற்பத்தி, இராவணன் கலியாணம், அவனுடைய திக்கு விஜயம், அனுமார் வரலாறு, வாலி சுக்கிரீவன் வரலாறு, இராமர் சீதையை வனத்திற்கனுப்புதல், சீதை வால்மீகர் ஆச்சிரமம் சேர்ந்து லவ குசலவர்களைப் பெறுதல், இராமர் அஸ்வமேதயாகம் செய்தல், லவ குசலவர்கள் குதிரையைப் பிடித்துக் கட்டல், எல்லோரையும் ஜெயங்கொள்ளல், இராமர் சீதையையும் தம் புத்திரரையுங் காணுதல், சீதை பூமியில் மறைதல், இராமர் முதலியவர்கள் பிள்ளைகளுக்குப் பட்டங்கட்டி ஜோதிக்கெழுந்தருளுதல் முதலிய அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூ. 2.

# அடங்காச் சிறிப்பு.

கனவான்களே! அவுட்டுக் கிளம்புவது போலத் தொந்தி குலுங்கச் சிரித்து ஆனந்தமாக பொழுது போக்கவேண்டுமானால் "மலையை விழுங்கிய மகாதேவன்" கதையை வரவழைத்து வாசியுங்கள். இதன் விலை அணா 6.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது. நீதியைப்போதிப்பது. இதன் விலை அணா 8.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, இல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்திரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 தோலா எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் தீரும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

# புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
மான்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சோரிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1 அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிட வேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் சகல குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் இல்லை.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# மலச்சிக்கல்

## நீங்கக்கூடிய திராட்சைப்பழ லேகியம்.

எல்லா வியாதிகளுக்கும் மலச்சிக்கலே காரணம் என்பது சுருதி யுக்தி அநுபவங்களால் தெரிந்துகொண்ட விஷயம். தினந்தோறும் மலம் தாராளமாய்க் கழிந்துவிட்டால் வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலையில் நிற்கும் சில தினங்களில் நீங்கள் மிக ஆரோக்கியமாய் இருப்பீர்கள். அதற்கு காரணம் என்னவென்று யோசித்திருப்பீர்களானால் மலம் தாராளமாய்க் கழிந்ததனாலேயென்று தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகையால் நோயுள்ளவர்களும் நோய் இல்லாதவர்களும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

நமது திராட்சைப்பழ லேகியமானது மலத்தைத் தாராளமாய்க்கழித்து சகல நோய்களையும் கண்டித்து தேகத்தை ஆரோக்யமாய் வைத்திருக்கும்.

முழுவதும் பச்சிலை, புஷ்பம், பழம், தேன் இவைகளைக்கொண்டு பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. குமட்டல் வாந்தி காகரப்பு முதலிய கெட்ட செய்கைகள் ஒன்றும் கிடையாது. வாலம் முதலிய பேதியாகும் மருந்துகள் கண்டிப்பாய்ச் சேர்க்கப்படவில்லை யென்பதற்கு உத்தரவாதம் செய்கிறோம். சாப்பிட மிக இனிப்பாய் இருக்கும்.

டப்பி 1-க்கு ரூ. 1—4—0 4-டப்பி ரூ. 4—8—0

விலாசம்:-தனலட்சமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# பூஷ்கை வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்று மில்லை.

இந்த லேகிய செந்தூரங்கள் சர்வ சிறந்த மானவையுமல்ல, அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. ஆதலின் யாவரும் இவற்றை வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

# இந்த லேகிய செந்தூரங்களால்

## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த வெப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரிப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இந்த மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக டை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட [illegible] [illegible] செய்யாமல் சாப்பிடவேண்டியது. இவற்றைப் புசிப்பவர் [illegible]தெல்லாம் பலகாராதிகள் சாப்பிடவேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிடலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் [illegible] மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது [illegible]த்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிடுவார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0. 48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

விலாசம்:—லேகியம் டிபோ,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

[illegible]ல் துணியில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், கட்டுவாய்ப்பூச்சி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் [illegible] களை இரண்டொரு நிமிஷங்களில் இது [illegible] நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனை [illegible]க்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் [illegible] பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. [illegible] இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை [illegible]க்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8, தபாற்கூலி அணா 4, டஜன் 1-க்கு ரூபா 5. ஒரே தடவையில் 8-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# சீதபேதி (டிசென்டரி) பவுடர்.



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ண பிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் கனம்ச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வப்படை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத கனம்ச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோ லீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிக்வும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும், இன்பத்தையும் தந்து




இதற்கு நிகரான சுகந்த மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

சிரயம் புட்டி 1-க்கு அணா 10. ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள இடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, [illegible] வழித்தால் மேற்படி மருந்து தடவிய இடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வெக்கை எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.



# [illegible] பல் பொடி.



இந்தச் [illegible] பல் பொடி மற்ற இதர பல்பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல்வலி, பல்லில் சொத்தை சீழ் வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம் பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.


6-டப்பிகள் விலை அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி [illegible] இது நிகாற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கருப்பாக்கும், [illegible]த்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் நீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களால் உண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சுக்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது [illegible] ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக [illegible]த்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1, 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

## கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாகவாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4-மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

## காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான கழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், சுக்கநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து.




இதன் விலை ரூபா 1-8-0.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீக்கிக் காலையில் எழுந்திருக்கும்போது தேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



## ஜி. கியூர் வெள்ளை என்னும்

### வெள்ளை நோயை 8 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூத்திரத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதைப்படைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமேகம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அநுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை. பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.

## கண்நோய் மருந்து.



இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைதட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# சோடாவாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதிருப்பவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடாவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். அதை உடனே சாப்பிடவும். ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோவு நின்றுவிடும். புட்டி 1-க்கு அணா 6.



# யூகலிப்டஸ் ஆயில்.

## (சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்ஷியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வெட்டுக்காயங்கள், சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன ரணங்கள், இன்புளூவென்ஸா, மலேரியா முதலிய சகலவித ஜுரங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வு பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி. முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 „ 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

# நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்குமுன்பு இருந்த கருமை நிறத்தையும், பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற சிறந்த தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்குக் கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டுகளைக் கணக்கிடல் முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூபா 1.





# கூந்தல் வளரும் துளி.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்,

புட்டி 1-க்கு விலை அணா 12.









# அன்பிரேக்கபில் கிளாஸ் பாக்கட் நிக்கல் கெடியாரங்கள்.

சாதாரணமாக பாக்கட் கெடியாரங்களின் மேல்புறம் கண்ணாடியால் மூடிபோட்டு வந்தன. இக்கண்ணாடிகள் அடிக்கடி உடைந்துபோவதாலும் உடைந்துபோன கண்ணாடிக்கு பதிலாக வேறு கண்ணாடிகள் அனேக இடங்களில் கிடைக்காமையாலும், எக்காலமும் உடையாத கண்ணாடிகள் போட்ட பாக்கட் கெடியாரங்களை வரவழைத்திருக்கிறோம். கெடியாரங்களின் மேற்புறம் மூராடான அடிபட்டாலும், கீழ் வீழ்ந்தாலும் மேற்படி கண்ணாடி உடையாது. இது நிச்சயம்.

நெ 1. இதன் விலை கெடியாரம் 1-க்கு விலை ரூ. 3—12—0

# விசித்திர கட்டயல் ரிஸ்ட்லெட் கெடியாரங்கள்.



இக் கெடியாரத்தின் டையல் படத்திலுள்ளபடியே வெகு விசித்திரமாயும் அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். இவைகள் உறுதியாகத் தயார் செய்யப்பட்டவை; வெகு காலம் நன்றாய்ப்போகக்கூடியவை. விலையும் சகாயம். இது வரையில் உயர்ந்த பொன் கெடியாரங்களில் இம்மாதிரியான கெடியாரங்கள் வந்தன. இப்பொழுது நாம் குறைந்த விலையுள்ள கெடியாரங்களில் இம்மாதிரியான கெடியாரங்களை வரவழைத்திருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| நெ. 2. | டை நிக்கில் கேஸ் கெடியாரம் | விலை ரூ. 5—8—0 |
| நெ. 3. | பொன்கில்ட் கொடுத்த விசித்திர கட்டயல் | 6—4—0 |
| நெ. 4. | சொக்கவெள்ளி கேஸ் கெடியாரம் | 6—8—0 |
| நெ. 5. | ரோல்ட் கோல்ட் கேஸ் பிரிட்ஜ் மூவ்மெண்ட் | 10—8—0 |

# நூதன பாக்கெட் லீவர் கெடியாரம்.




இந்த நூதன பாக்கெட் லீவர் கெடியாரங்களைக் குறைந்த விலையில் கேட்பவர்களுக்காக வரவழைத்திருக்கிறோம். இவை வெகு உசத்த சாமான்களால் செய்யப்பட்டவை, சரியானகாலம் காட்டக்கூடியவை. தலை சாவியோடு தலைசாவியை அழுத்தி முள் திருப்பக்கூடியவுமானவை; கனத்த கண்ணாடியால் மூடி போட்டவை. ஒரு பக்கம் திறக்கக் கூடியவை.

நெ. 6 நிக்கல் பாக்கெட் லீவர் 3—2—0
நெ. 7 டை கெடியாரத்தில் இரவில் மணி பார்க்க ரேடியம் டயல் உள்ளது. 1-க்கு விலை ரூபா 4—4—0
நெ. 8 டை பொன்கில்ட் உள்ள சாதாடயல் 3-12—0



## இமிடேஷன் 8-நாள் சாவி பாக்கெட் கெடியாரம்.

இக்கெடியாரங்கள் பார்வையிலும் சைசிலும் மேற்பக்கம் பாலன்ஸ் போவதிலும் மற்றெல்லா விதத்திலும் 8-நாள் சாவி பாக்கெட் கெடியாரங்களைப் போலவே தோற்றும். வெகு அழகுடைய கெடியாரம் 30-மணி நேரம் ஓடக்கூடியது (தினசாவி)


நெ. 9. இதன் விலை ரூபா 5—12—0

## ராஸ்கோப் சிஸ்டம் கெடியாரம்.




உரத்த சாமான்களால் செய்யப்பட்டது, வெகு காலம் போகக்கூடியதும் கனத்த கண்ணாடியால் மூடி போட்டதும் தலைசாவி யுள்ளதுமாக ஜெர்மன் சில்வரினால் செய்யப்பட்டது. முரட்டு வேலைகள் செய்பவர்களுக்கு வெகு அனுகூலமானது. எவ்வித முரட்டான வேலை செய்தாலும் கீழே விழுந்தாலும் நிற்காமல் போகும்.

நெ. 10. ராஸ்கோப் ரூ. 3—8—0
நெ. 11. மேற்படி உயர்ந்ததில் சின்னது ரூ. 4—0—0



## மேல் மூடியுள்ள அரை ஹண்டிங் கெடியாரம்.

இதற்கு அரைஹண்டிங் கெடியார மென்று ஏன் சொல்வதென்றால் இக்கெடியாரத்தில் மேல்மூடியின் மேல்புறத்திலும் டயல் எழுதி மத்தியில் இப்படத்தில் காட்டியிருப்பதைப் போல துவாரம் செய்து அத்துவாரத்திற்கு கண்ணாடி போட்டிருக்கிறபடியால் இதன் மேல்மூடியைத் திறக்காமலே மணி பார்த்துக் கொள்ளலாம். மேல் மூடியைத் திறக்கவேண்டுமானால் தலையிலிருக்கும் ஸ்பிரிங் வில்லை அழுத்தினால் தானே திறந்து கொள்ளும்.

நெ. 12. நிக்கல் வெள்ளி அரை ஹண்டிங் கெடியாரம் ரூ. 7-12—0
„ 13. தங்க஗ில்ட் கேஸ் ராஸ்கோப் மூவ்மெண்ட் ரூ. 6—4—0





## ஜெர்மன் 2-இன்சி டயல் டைம்பீஸ்.

இந்த டைம்பீஸ்கள் அமெரிக்கன் "பீ" மார்க்குள்ள டைம்பீஸ்போல நெடுநாள் உழைக்கும் உழைக்கக் கூடியவை; பார்வைக்கு சிறியவையாகவும், அழகியவையாகவும் இருக்கும். 2-இன்சி டயல், நிக்கல் கேஸ், வெகு அழகாயிருக்கும்.

நெ. 14. ஜெர்மன் டைம்பீஸ் 2-இன்சி டயல் உள்ளது. 1-க்கு விலை ரூபா 2—8—0


## ஆடொமாடிக் அலாரம் டைம்பீஸ்கள்.



புதிய சரக்குப் ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டது. இதைப்பார்ப்பதற்கு மிக்க அழகாயும் ஆச்சரியமாயு மிருக்கும்; இதில் கண்ட பொம்மையின் கண்கள் எப்பொழுதும் ஆடிக்கொண்டே மணியைக் காட்டும்; பார்ப்பதற்கு மிக்க சந்தோஷமாக இருக்கும்; சரியான மணியைக் காட்டக்கூடிய கெடியாரம்; இதில் அலாரமும் உண்டு.


நெ. 15. இதன் விலை 1-க்கு ரூ. 5—4—0
நெ. 16. ஷை ஒட்டகத்தின்பேரில் குரங்கு ஆடும் கெடியாரம் ரூ. 5—4—0
நெ. 17. யானை தும்பிக்கை ஆடும் டைம்பீஸ் 5—4—0

## பாலில் தண்ணீர் அளவு பார்க்கும் இயந்திரம்.



ஒவ்வொரு குடும்பத்திலிருக்க வேண்டிய பொருட்களில் இது ஒன்று, இடையர்கள் பாலில் தண்ணீர் இவ்வளவு கலந்திருக்கிறார்களென்பதை தென்னென தெரிவிக்கும். பாலை பரீக்ஷிக்கும் விதம் யந்திரத்துடன் அனுப்பப்படும்.


இதன் விலை ரூபா 1—0—0



## கலர்பாக்ஸ் என்னும் வர்ணம் தீர்க்கும் பெட்டி.

பள்ளிக்கூட மாணாக்கர்களுக்கும் சித்திரவேலை, வீடு கட்டட பிளான் வேலை செய்பவர்களுக்கும் வெகு உபயோகமானது. தேசப்படம் பிளான் வீட்டுப்படம் வர்ணம் தீர்க்க வெகு அனுகூலமானது; 12 வித கலர் அடங்கிய பெட்டி 1-க்கு அணா 10.


## டாய்லட் பவுடர் என்னும் முகவசீகரப் பொடி.



இதை முகத்திற்கு உபயோகப்படுத்துவதினால் முகத்திலுள்ள மாசு மறுவோக்குரு சிறு கட்டிகள் நீங்கி முகம் சுத்தமாகவும் தோன்றும்; இதன் மணம் முதல்தரம் சென்டுக்கு சமமாக இருக்கும்; இத்துடன் பொடியை தூவும் கல்கி மயிர் பந்து ஒன்று அனுப்பப்படும். அன்று பிறந்த குழந்தைகள் முதல் விருத்தர் வரையில் உபயோகிக்கலாம்.

| | | |
|---|---|---|
| அதிக வாசனையுள்ள பவுடரும் பந்தும் சேர்ந்தது | ரூ. | 1—0—0 |
| தனி ரோஸ் பவுடர் மட்டிலும் | ,, | 0-14—0 |


## இரட்டைப் பேனுக்கத்திகள்.



இந்தப் பேனுக்கத்திகள் அதிக உயர்ந்தவை. எந்த வேலைக்கும் உபயோகிக்கலாம். இரட்டைக் கத்தி தந்தப்பிடியும் பித்தளைப் பிடியும் போட்ட இரட்டை பேனுகத்தி முதல் தரம் ... ... ... ரூ. 0—9—0

| | | |
|---|---|---|
| 2-ந்தாம் தந்த பிடிபோட்ட இரட்டை பேனு கத்தி | ,, | 0—7—0 |
| முதல்தாம் ஒத்தைகத்தி 0—8—0 2-ந்தரம் ஒத்தைகத்தி | ,, | 0—6—0 |
| ஹென்றி காப்மென் என்னும் ஜெர்மன் மேகர் உயர்ந்த இரட்டை பேனுகத்தி 1-க்கு விலை | ,, | 0-12—0 |

## ரப்பர் பொம்மை.




சிறு பிள்ளைகள் விளையாடவும் அவர்களுக்குவிளையாட்டு காட்டவும் உபயோகமானது. ரப்பரில் செய்து இருப்பதால் கீழ் விழுந்தாலும் உடையாது. குழந்தைகளுக்கு யாதொரு கெடுதியும் சேராது. இதை அமுக்கும்போது குழந்தைகள் கத்துவதுபோல் சப்திக்கும்.

விலை: அணா [illegible]




## ரயில் வண்டித் தொடர்.



இந்த வண்டித் தொடரில் 2-வண்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. அதாவது இஞ்சின், ஜனங்கள் உட்காரும் மாதிரியான வண்டி 1, மட்டமான தரையில் வண்டியை இணைத்துக்கொண்டு இஞ்சின் வண்டியை சாவி கொடுத்து விட்டுவிட்டால் நிஜமான ரயில் தொடரைப்போல் வெகு வேகமாய் ஓடும். சிறு பிள்ளைக்கு வெகுமதி கொடுக்கவும் விளையாட்டு காண்பிக்கவும் நல்ல மாதிரியானது.

இதன் விலை ரூபா 1—4—0

## வடக்கு தெற்கு காட்டும் திசையறி கருவி.



இது நிக்கல் வெள்ளியால் செய்யப்பட்ட எவ்விடத்தில் வைத்தாலும் இதில் காட்டியிருக்கும் பெரியமுள் வடக்கு திக்கையே காண்பிக்கும். இதைக்கொண்டு எவ்விடம் போனாலும் திக்குகளைத் தெரிந்து கொள்ளலாம்.

இதன் விலை அணா 7.


## பாக்கெட் மடக்கு கத்திரி.



இக்கத்திரிகள் உயர்ந்த எழுகினால் செய்யப்பட்டவை. இவைகளை பேனுக்கத்திகளை மடக்கி சட்டை ஜோபியில் வைத்துக்கொள்வதுபோல வைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் மிக்க உபயோகமானவை.

இதன் விலை அணா 8.


## இமிடேஷன் கமுஸ் கை பொத்தான்கள்.



இமிடேஷன் பொன்னென்றால் என்றைக்கும் கருக்காமலிருக்கும் ஓர் வகை ரசாயன கூட்டினால் செய்த உலோகம். பார்வைக்கு பொன்னைப் போலிருக்கும்; தேயத்தேய பளபளப்பாயிருக்குமேயன்றி கறுக்காது; பொன்னைப்போலவே பிரகாசிக்கும்.

| | | |
|---|---|---|
| ரோல்ட் கோல்ட் கை கமுஸ் பொத்தான் ஜதை | ரூபா | 1—2—0 |
| பொன் கில்ட் மேற்படி மட்டம் 2-ம் தரம் | ,, | 0 10—0 |
| ஷை 3-ம் தரம் மட்டம் | ,, | 0—5—0 |

## அமெரிக்கன் ரோல்ட் கோல்ட் பட்டன்ஸ்.



இப்பொத்தான்கள் அமெரிக்கா தேசத்தில் ஓரிமென்ட்ஸ் கம்பெனியாரால் தயார் செய்யப் பட்டவை. இவ்வைகளின் பொன் நிறம் எப்பொழுதும் மங்காது; எக்காலமும் சவரன் பொன் போலவே பிரகாசிக்கும். இவற்றைப் பார்ப்பவர்கள் சவரப் பொன்னால் செய்யப் பட்டவையென்றே நினைப்பார்கள்.

3 பொத்தான் செட் 1-க்கு விலை ரூபா 1—7—0.


## வேடிக்கையான ரப்பர் பாம்பு.



இது ரப்பரினால் செய்யப்பட்டது. உண்மையான பாம்பென்று சொல்வார்களே யல்லது ரப்பரென்று சொல்லமாட்டார்கள். சினேகிதர்களை அல்லது பந்துக்களை பரிகாசம் செய்யத் தக்கது. உயிருள்ள பாம்பைப்போல் இருக்கும். இதன் விலை அணா 6.

## மட்டப்பலகை.

இந்த மட்டப் பலகையானது வெகு அழகாக 24-அங்குலமாக வகுக்கப்பட்டிருக்கின்றது. வேண்டும்போது உபயோகித்து மறுபடியும் மடித்து ஜோபியில் போட்டுக் கொள்ளலாம். இது பொதுவாய் எல்லாருக்குமே வெகு உபயோகமான பொருள். இது இரண்டடி கொண்டது 1-அடியிலடங்கும்.



2 அடி மட்டப்பலகை ஒரு அங்குல அகலம் விலை ரூ. 1—8—0

ஷை ½ அங்குல அகலம் மட்டப்பலகை விலை ரூ. 1—0—0

## பீஜரோகங்களுக்கு வில் பெல்ட்.



நம்முடைய தேசத்தில் பீஜரோகத்தினால் வருந்துபவரையும் இறந்தவர்களையும் கணக்கிட முடியாது. ஏனெனில் பீஜரோகமென்று சொல்லப்படும் விரைநோயுள்ளவர்கள் உபயோகிக்கும்படியான இந்த வில்பெல்ட் உள்ளனவென்று கேட்டிருப்பார்களே யொழிய பார்த்திருக்கமாட்டார்கள். அநேகருக்கு இது கிடைக்காமலிருந்தது.


1 - பக்கத்திற்கு உபயோகிக்கக்கூடியது ரூபா 3 8 0

இரண்டு பக்கத்திற்கு உபயோகிக்கக் கூடியது ரூபா 4 12 0

இந்த பெல்ட் வேண்டியவர்கள் வலதுபக்கம் அல்லது இடதுபக்கத்திற்கு வேண்டுமென்று விவரம் கண்டு எழுதவும்.




## தேதிபோடும் ரப்பர் ஸ்டாம்பு.



ஒவ்வொருவரிடத்திலும் இந்த டேட் ரப்பர் ஸ்டாம்பு ஒன்று அவசியம் இருக்க வேண்டும். இதனால் கடிதங்களுக்கும் தேதி மாதம் வருஷம் சுலபமாய் அச்சிடலாம். இதை அப்போதைக்கப்போது எந்தமாதிரி வேண்டுமானாலும் திருப்பிக் கொள்ளலாம் சக்கரங்கள் வைத்து வேலைத் திறமாய் செய்யப்பட்டிருக்கின்றன. விலை அணா 15.

## ரோல்ட் கோல்ட் பொன்ப்ரேம் மூக்குக் கண்ணாடிகள்.




இந்த ரோல்ட் கோல்ட் மூக்குக் கண்ணாடிகளை பார்ப்பவர்கள் அசல் பொன்னால் செய்தவையென்றே நினைப்பார்கள். இவை 5-வருஷம் வரை கெடாமல் பொன்னைப்போலவே இருக்கும். இவைகளில் வெய்யிற்காலத்திற்கு உபயோகிக்க குளிர்ச்சியுள்ள மேகவர்ண கண்ணாடிகளும் சாலேஸ்வரத்திற்கு உபயோகமான உயர்ந்த கிரிஸ்டல் பெப்பில்ஸ் கண்ணாடிகளும் பதித்தவையும் உண்டு.

வெய்யிற் காலத்திற்கு கண்களுக்கு குளிர்ச்சியாய் உபயோகிக்க மேகவர்ண கூலிங் கிளாஸ் 5-வருஷம் தாரண்டியுள்ள ரோல்ட் கோல்ட் மூக்குக் கண்ணாடி 1-க்கு விலை ரூபா 3—12—0

சாலேஸ்வர முள்ளவர்களுக்கு ஷை உயர்ந்த கிரிஸ்டல் பெப்பில்ஸ் 5-வருஷம் உத்தரவாதமுள்ள சாலேஸ்வர மூக்குக் கண்ணாடி 1-க்கு ரூ. 4—4—0

சாலேஸ்வரமுள்ளவர்கள் தயவுசெய்து தம் வயதைத் தெரிவிப்பதுடன் தூரப்பார்வை அல்லது சமீபபார்வை என்று தெரிவிக்கவும்.

## ஊசிப்பெட்டி.



இந்த ஊசிப்பெட்டிகள் அழகாக வர்ண வேலை செய்து 6-அறைகள் கொண்டவை; அவ்வறைகளில் 6-விதமான ஊசிகள் நிறைந்திருக்கும்; மேல் மூடியை திருப்பிக்கொண்டு வந்தால் எந்த நெம்பர் ஊசி வேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளலாம். 50-ஊசியுள்ள பெட்டி 1-க்கு விலை அணா 6.


## மோர்சிங்கு என்னும் தாளவாத்தியம்.



மோர்சிங் என்னும் வாத்தியம் பெரும்பாலும் அனேகருக்கும் தெரிந்திருக்கலாம். இவ்வாத்தியங்களானவை சற்று நயமான எழுகினாலும் பேசும் வில் நயமான டெம்பர் ஏற்றிய எழுகினாலும் செய்யப்பட்டவை. எவ்வளவாக தட்டி [illegible]த்தாலும் பேசும் வில் [illegible]யாது. 1-ந்தரம் விலை அணா 6.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


## உயர்ந்த நாய் சங்கிலி.



இந்த சங்கிலிகள் அதிக உறுதியான எழுகு கம்பியால் செய்து பாலிஷ் செய்தவை. வெகு உறுதி உள்ளவை. விலை அணா 7.

## கெடியாரம், நகை, அழுக்கடிக்கும் பிரஷ்.

இப்பிரஷுகள் யானை தந்தத்தினால் வெகு நேர்த்தியாய் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் பொன், வெள்ளி செம்பு இவை



முதலிய நகைகளின் அழுக்கை அடிக்கலாம்; பல்லும் தீட்டலாம்.

இதன் விலை அணா 6.

கெடியாரம் துடைக்கும் புருஷ் 1-க்கு விலை அணா 8.

## சீமை மாட்டின்கொம்பு சீப்புகள்.

இரண்டு பக்கம் பல் உள்ளது. முதல் நெம்பர் சீப்பு பெரியது விலை அணா 8.

நெ. 2 சிறிது அணா 6.

3-பக்கம் பல் உள்ள சீப்பு அணா 9.



## பென்சல் திருகு.




பென்சல்களை கத்தியால் சீவினால் ஒடிந்து போவதுடன் ஒழுங்காய் இரா. பென்சல் திருவால் சீவினால் வெகு நன்றாக இருக்கும். இவை கடைகளில் பைசாவிற்கு ஒன்று விற்கும் ஈய மாதிரி யல்ல; உறுதியான நிக்கல் உலோகத்தினால் செய்யப்பட்டவை.

விலை அணா 2.

187486

## சோப்புகள் வைக்கும் நிக்கல் பெட்டி.



இப்பெட்டிகள் நிக்கல் ஸில்வர்போன்ற ஓர்வித உலோகத்தில் இயந்திர சக்தியால் செய்யப்பட்டவை. அநேக விலையுயர்ந்த சவக்காரங்களை வாங்கி வெய்யிலில் [illegible] வைகளின் மணம் குணம் [illegible] கெடுத்து விடுகிறார்கள். [illegible] வைப்பதினால் அவைகளின் தணம் மணம் ஈரம் முதலிய [illegible] டாமல் நன்றாயிருக்கும்.

இதன் விலை 1-ந்தரம் [illegible] மேற்படி [illegible]ந்தரம் அணா 8.